

கல்கி

KALKI 27-5-79
76காசு





கோடையில்
குளிர்ச்சி மிகு
குதூகலம் அளிப்பது
பின்டெக்ஸ்
பின்டெக்ஸ் துணிகள்
விசேஷ கோடைக் காலத்
தயாரிப்புகள்:
புடவைகள்: பருத்தி மற்றும் பாலியஸ்டர் கலவைகள், கண்கவர் வண்ணங்கள், இதமான டிசைன்கள் நாகரிக பாணிகள்.
படுக்கை விரிப்புகள்,
அலங்கார திரைத்
துணிகள், டவல்கள்: நாகரீகத்தோற்றத்திற் கேற்ப வேலைத்திறன்.
வேட்டிகள்,
லுங்கிகள்: பல ரகங்களில், நயமான விலைகளில்
ஷர்ட்டிங்குகள்: தினமும், விசேஷ காலத்திலும் அணியத்தக்க குளிர்ச்சி மிகு பருத்தி வகைகள்—கோடையில் அணிய செக்குகள், கட்டங்கள், கோடிட்ட டிசைன்கள்—விசேஷ டிரஸ் பிரிண்டுகள்—உங்கள் குடும்பத்திற்காக. எல்லா பின்னி டீலர்களிடம் கிடைக்கும்.
தர நிர்ணயம்:
பின்னி
லிமிடெட்
பின்டெக்ஸ் டிவிஷன்
சென்னை 600 001
BL 2107 TAM





எல்லாவற்றிலும் ஆர்வம்!
எப்பொழுதும் துடிதுடிப்பு!

உங்களுடைய குழந்தை, வளரும் பருவத்தில் ஒவ்வொரு விநாடியும் அதிகமான சக்தியை செலவழிக்கின்றான். அவனுக்கு வேண்டிய சக்தியை அளிக்கிறது—மால்ட், சாக்லெட். பால் நிறைந்த, சுவைமிகுந்த பூஸ்ட். ஏனெனில், பூஸ்ட் முழு ஆடைப் பால் கோதுமை, பார்லி மால்ட், மற்றும் கோகோவிலிருந்து தயாரிக்கப்படுகிறது.

உங்களுடைய குழந்தை ஒவ்வொரு நாளும், நாள் முழுவதும் படிப்பில் ஆர்வத்துடனும், விளையாட்டில் துடிதுடிப்புடனும் இருப்பதற்கு, சக்தி தரும் எரிபொருள்களை அவனுக்கு அளியுங்கள்.



துடிதுடிப்புடனும், ஊக்கத்துடனும் விளங்க சக்தியளிக்கும் எரிபொருள்.

பூஸ்ட்

மால்ட் சாக்லெட் மில்க் ட்ரிங்க்

B-5621 TAM 10

Kalki Shopping Page



ஸ்ரீ ராஜேஸ்வரி ஹால்

பட்டு

121, ராஜ வீதி
கோயமுத்தூர்-641001
போன்: 25859

உஷா


சாரி பாரடைஸ்

333 ராஜ வீதி, கோயமுத்தூர்-641001
போன்: 33369

While others are busy talking about their TV sets, we are busy selling ours!

Bharat TV

more performance than promises.



ACIL BT 23/79

Available at:

STANDARD ELECTRIC CO
4, General Patters Road
Madras 2 Phone: 811588

வருக,
தியாகராயநகருக்கு!
5, பிரகாசம் ரோடு,
பனகல் பார்க் அருகில்,
சென்னை 600 017.
போன்: 447714



பிலிப்ஸ்

PHILIPS

ரேடியோக்கள்
மியூசிக் சிஸ்டங்கள்
வாங்கவும், மற்றும்...

- **ரெப்ரிஜிரேட்டர்கள்:** ஆல்வின், கெல்வினேட்டர், கோத்ரெஜ்.
- **டி.வி.க்கள்:** டயனோரா, டெலிவிஸ்டா, ஆல்வின்.
- **கிராம்ப்டன் விசிறிகள்.**
- **வீனஸ் வாட்டர் ஹீட்டர்** வாங்கவும் சிறந்த இடம்.



ADWAVE SEC/1027

ஸ்டாண்டர்ட் எலெக்ட்ரிக் கம்பெனி


- 4, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை 600 002. போன்: 811588
- 4, ராமகிருஷ்ண மடம் ரோடு, லஸ், மைலாப்பூர், சென்னை 600 004

Kalki Shopping Page

How to buy
the best TV in town ?
**Read other
TV advertisements.**

**Then come and
see ours 'live'!**

Bharat TV




Available at:
TV TRONICS
7, Sunkurama Chetty St
Madras 600 001 Phone 27427
74/1 Siruvallur Road
Perambur, Madras 600 011
Phone: 666132 (PP)

ACIL BT 18/79

Admired for beauty
Bought for performance

Bharat TV
Urvashi



Available at :
Phoenix Electronics
50, Lattice Bridge Road
Adyar, Madras 20
Phone: 41 1208

ACIL BT 27/79



கேசவர்த்தினியை

நீங்கள் தலைக்குத் தடவிக்கொள்ளும் எண்ணெயுடன் கலந்து உபயோகித்தால் அதிகப்படி நன்மை அடைவீர்கள் — உங்கள் கேசம் அடர்த்தியாகவும் நாளுக்கு நாள் நீளமாகவும் வளருகிறது.

தென் இந்தியாவின் பரம்பரை கேச அழகின் ரகசியம் கேசவர்த்தினி. நீங்கள் உபயோகிக்கும் எண்ணெயுடன் கேசவர்த்தினியைக் கலந்து ஒவ்வொரு நாளும் தலையில் தேய்த்துத் தடவுங்கள். கேசம் உதிர்வதைத் தடுத்து, ஆரோக்கியமான எழில் கொஞ்சும் கேசம் வளர இதுவே ஒரு சிறந்த வழி. இப்பொழுதே கேசவர்த்தினியை உபயோகிக்கத் தொடங்குங்கள்.

கேசவர்த்தினி சாதாரண எண்ணெய் அல்ல. இதை தேங்காய் எண்ணெயுடனோ அல்லது நீங்கள் உபயோகிக்கும் எண்ணெயுடனோ கலந்து உபயோகிக்கவேண்டும்.

கேசவர்த்தினி பிராடக்ட்ஸ்
ஆற்காடு ரோடு, சென்னை-600 087

என்.ஜி.ஓ சங்கங்கள் போட்டியோ



சிவ இளங்கோ கூறுகிறார் :

1971ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நான் தமிழ்நாடு என். ஜி. ஓ. யூனியன் மாநிலத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். தொடர்ந்து எட்டு ஆண்டு காலத்தில் என். ஜி. ஓ. சமுதாயம் மேம்பாடடைய பலவகையிலும் எல்லா நண்பர்களுடைய ஒத்துழைப்புடன் பாடுபட்டு வருகிறேன். நாங்கள் பெற்றுத் தந்தவை என்று குறிப்பாகச் சிலவற்றைக் கூறலாம். அரசு ஊழியர்கள் காலமானால் அவர்களுடைய குடும்பத்துக்குப் பத்தாயிரம் ரூபாய் தர 1974ம் ஆண்டில் அரசு உத்தரவைப் பெற்றோம். அடிமை விலங்கு போல் இருந்த ரகசியக் குறிப்பேட்டு முறையை 1972ம் ஆண்டில் ஒழித்தோம். 1979ம் ஆண்டில் தான் மூன்றாவது ஊதியக் குழுவை அமைப்போம் என்று பிடிவாதமாக இருந்த அரசை 1977ம் ஆண்டிலேயே ஊதியக் குழுவை அமைக்க வைத்தோம். இவை தவிர அவ்வப்போது, எல்லா இலாக்காக்களிலும் பதவி உயர்வு, அகவிலைப்படி உயர்வு இவைகளைப் போராடிப் பெற்றிருக்கிறோம்.

இன்றைய அரசிடம் எங்களுக்கு ஏதோ மனஸ்தாபம் என்றும் நாங்கள் தி. மு. க. சார்பு இயக்கம் என்பது போலவும் மக்கள் நினைக்கும் வகையில் எதிர் அணியினரால் பேசப்பட்டும் பிரசாரப்படுத்தப் பட்டும் வருகிறது. ஆனால் உண்மையில் அப்படி அல்ல. என். ஜி. ஓக்களுக்கும், ஆசிரியர்களுக்காகவும், நன்மைகளையும், சலுகைகளையும் பெற்றுத் தர அமைந்ததுதான் இந்தச் சங்கம். இவர்களின் நன்மைக்காக யார் எந்தப் போராட்டம் நடத்தினாலும் நாங்கள் இணைந்து கொள்ளத் தயாராக இருக்கிறோம்,

காமராஜ் முதலமைச்சராக இருந்த காலத்தில் அவரை எதிர்த்து என். ஜி. ஓக்களின் நன்மைக்காகப் போராடியிருக்கிறோம். ஆனால் அவர் இந்தச் சங்கத்தை அழிக்கவோ உடைக்கவோ எண்ணவில்லை. ராஜாஜி முதல்வராக இருந்த போதும் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் தலைமையில் நாடகம் நடித்து அந்த நாடகத்தில் ராஜாஜியையே கேலியும், கிண்டலும் செய்திருக்கிறோம். அதைப் பார்த்த ராஜாஜி சிரித்துவிட்டுத் தான் சென்றாரேயொழிய இந்தச் சங்கத்தை ஒடுக்கவோ உடைக்கவோ எண்ணவில்லை. ஆனால் தற்போதைய தமிழக முதல்வர் போட்டிச் சங்கம் ஒன்றை உருவாக்கி, அதற்கு அங்கீகாரத்தையும் அளித்துள்ளார். இப்படி அங்கீகாரம் கொடுத்தது, 1958ம் வருடத்திலிருந்து என். ஜி. ஓக்களின் நன்மைக்காகப் பாடுபட்டு வரும் இச்சங்கத்தை உடைக்கத்தானேயொழிய வேறு காரணங்களுக்காக அல்ல.

தொழிற்சாலைகளில் பல போட்டிச் சங்கங்கள் ஏற்பட்டு ஒழுக்கம் குலைவது போல இங்கும் ஏற்பட வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்களோ என்னவோ? நியாயமான போராட்டங்களை ஒடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில்தான் இந்தப் போட்டிச் சங்கத்தையே உருவாக்கி இருக்கிறார்கள்.

ஓய்வு பெறும் வயதை 55லிருந்து 58 ஆக உயர்த்த நாங்கள் போராட்டம் நடத்தினோம். அந்தக் கோரிக்கை நிறைவேறியதற்கான அரசு உத்தரவு கிடைத்துள்ளது. இதனை ஒரு பெரிய சாதனை என்று சொல்லலாம். இந்த வயது உயர்வு வேண்டவே வேண்டாமெனக் குரல் கொடுத்தார்கள், போட்டிச் சங்கத்தார். ஆனால் வெற்றி எங்களுக்குக் கிடைத்தது.. இதிலிருந்து ஊழியர்களுக்கு யார் விரோதி என்று அவர்களுக்கு மத்தியிலேயே நன்றாகத் தெரிந்து விட்டது.

இது மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் என். ஜி. ஓ. சங்கத்துக்குச் சொந்தமான என். ஜி. ஓ. இல்லங்கள் உள்ளன. அவைகளைக் குறைந்த வாடகைக்கு அரசு ஊழியர்களுக்கு மட்டும் தருகிறோம். இவை தவிர என். ஜி. ஓ. இலக்கிய அணிகள், காலனிகள் ஆகியவையும் உள்ளன.

நாங்கள் கொடுத்த கோரிக்கைகளையெல்லாம் ஏற்காமல் ஒன்றே ஒன்றை மட்டும் ஏற்றுக் கொண்டுள்ளனர். மற்ற கோரிக்கைகளையும் ஏற்க வேண்டும் என்றுதான் நாங்கள் கேட்கிறோம். பதின்மூன்று கோரிக்கைகள் நிறைவேற்றப் படாமலேயே உள்ளன. இந்தக் கோரிக்கைகளுக்காக ஒன்றுபட்ட போராட்டம் நடத்த முயற்சி எடுத்து வருகிறோம்.

பேட்டி !



இரா. முத்தானந்தம் சொல்கிறார்:

அரசு ஊழியர் சங்கத்தில் 1971ம் ஆண்டு வரையில் அரசியல் நுழையாமல் இருந்தது. 1971ம் ஆண்டு தலைமைப் பதவிக்கு திரு. சிவ இளங்கோ வந்தவுடன் தி. மு. க. அரசிற்கு முழு ஆதரவு கொடுத்து வந்ததோடு, கோரிக்கைகளுக்காக எத்தகைய போராட்டங்களையும் நடத்தாமல் சங்கம் செயல்பட்டு வந்தது.

எங்களைப் பொறுத்தவரை அரசு ஊழியர்கள் சங்கம் எந்தக் கட்சிக்கும் கட்டுப்பட்ட சங்கமாக இருக்கக் கூடாது. இதனுடைய ஒரே நோக்கம் அரசு ஊழியர்களுக்கு நன்மை செய்வதுதான்.

ஆனால், சிவஇளங்கோ, இந்த அ. இ. அ. தி. மு. க. அரசு பதவி ஏற்றுக் கொண்ட ஒரு மாதத்திலேயே வேலைநிறுத்தம் நடத்தினார். 50 ஆண்டு காலமாக அரசு ஊழியர் சங்கங்களில் இல்லாதிருந்த வேலைநிறுத்தப் போராட்டத்தினை நடத்தினார். அரசு ஊழியர்கள் அரசுக்கு எதிரானவர்கள் என்ற சூழ்நிலையை உருவாக்கினார்.

இவரால் பழிவாங்கப்பட்டவர்களும் நேர்மையாக நடந்ததால் இவரது வெறுப்புக்கு ஆளானவர்களும் ஒன்று சேர்ந்து 'ஏதாவது செய்ய வேண்டும் என்ற முடிவிற்கு வந்தார்கள். தமிழ்நாடு அரசு அலுவலர் கழகம் (சி. டி. பிரிவு) தோற்றுவிப்பதெனத் தீர்மானித்தார்கள். ஆரம்பிப்பதற்கு முன்பே 41,000 உறுப்பினர்கள் சேர்ந்தனர்.

தொடங்கப்பட்ட நாள் அன்றே பதினான்கு சலுகைகளைக் கேட்டு அறிவித்தோம். அதில் முக்கியமாக உள்ளவை.

1. இருநூறு ரூபாய் அல்லது அதற்கும் கீழே சம்பளம் வாங்கும் அலுவலர்களின் குழந்தைகளுக்கு எஸ். எஸ். எல். சி. வரை இலவசமாகப் புத்தகம் வழங்குதல்.

2. அரசு அலுவலர்களில் கண்ணாடி போடுபவர்கள் அனைவருக்கும் இலவசமாகக் கண்ணாடி அளிப்பது.

3. காது கேளாத அரசு அலுவலர்களுக்கு இலவசமாகக் காது கேட்க வைக்கும் இயந்திரத்தை அளித்தல் ஆகியவை.

லஞ்சம் வாங்குகிற யாராயினும் அவர்களை நேரடியாகப் பிடித்து முதல்வரிடம் கொடுக்க முப்பது பேர் கொண்ட குழு ஒன்றை அமைத்துள்ளோம். இதுவரை இந்தக் குழு நூறு பேர்களைப் பிடித்துக் கொடுத்திருக்கிறது. இதில் நமது சங்கத்து ஆட்களாக இருந்தாலும் நாங்கள் விடுவதில்லை. அதற்கு உதாரணம் எங்களுடன் இருந்த பதினாறு பேர்களை நாங்கள் பிடித்து முதல்வரிடம் கொடுத்ததுதான்.

இப்படி ஊழியர்களின் நன்மைக்காகப் பாடுபடுவதால் சிவ இளங்கோவின் சங்கத்திலிருந்த இணைப்புச் சங்கங்கள் ஒவ்வொன்றாகப் பிரிந்து எங்களிடம் வர ஆரம்பித்து விட்டன. இது போல் இதுவரை எண்பத்தாறு சங்கங்கள் இணைப்புச் சங்கங்களாக எங்களுடன் வந்து விட்டன.

இதைவிட மிகப்பெரிய விஷயம். அவர் வேலை செய்து வரும் தமிழ்நாடு நில அளவைத் துறையில் — சர்வே டிபார்ட்மெண்டில் — உள்ள சங்கம் எங்களுடன் இணைப்புச் சங்கமாகி விட்டதுதான்.


இப்படி ஒவ்வொருவராகப் பிரிந்து வருவதால் என்ன செய்வது என்று புரியாமல் சிவ இளங்கோ தடுமாறுகிறார். அதன் விளைவுதான் அவரது வேலை நிறுத்த அறிவிப்புகள் எல்லாம். தன்னை ஸ்திரப் படுத்திக் கொள்ள, தன் பதவி போகாமல் இருக்க இவர் இப்படிச் செய்கிறார்.

இவை மட்டுமல்லாமல் "கெஜட் ரேங்க்" பெற்ற அதிகாரிகள் என். ஜி. ஓ. சங்கத்தின் எந்த நடவடிக்கைகளிலும் பங்கு கொள்ளக் கூடாது. ஆனால் தி. மு. க. அனுதாபம் உள்ள அதிகாரிகளை வைத்துக் கொண்டு இவர் பலரைப் பயமுறுத்துகிறார். வெளிப்படையாகக் கூட்டங்களும் நடத்துகிறார்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், சிவ இளங்கோ, ஆட்சியிலுள்ள அரசைப் போலவே மற்றொரு சரிசமமான அரசை எதிர்க்கட்சிகளின் துணைகொண்டு நடத்த விரும்புகிறார்.

அவருடைய திட்டப்படி சட்டத்துக்குப் புறம்பான வேலை நிறுத்தம் நடந்தால் பொது மக்களின் ஒத்துழைப்பையும் கேட்கலாம் என்றிருக்கிறோம். எங்களது முக்கிய விருப்பம் தமிழ்நாடு உயர வேண்டும். அடுத்து அரசு அலுவலர்கள் நன்மை அடைய வேண்டும் என்பதுதான்.

பேட்டி: அசோக் குமார்


முதலமைச்சர்களுக்கு விதி விலக்கு
லோக் பால் மசோதா
ரெண்டு கண்ணையும் கட்டி இருப்பது தான் சரியான வடிவம்!
லஞ்ச ஊழல் விசாரணைக்கான லோக்பால் மசோதா விவாதத்தில் இருக்கிறது.
பா.. பா..
புரட்சி நடிகர் நடிக்கும் இடைத் தேர்தல்கள் விரைவில் வருகிறது!
டில்லி ஊர்வலம்
என்னப்பா மேக்கப் மேன்! எல்லாம் உன் கையிலே தான் இருக்கு!

கல்கி

1979 மே 27
சித்தார்த்தி வைகாசி 13
மலர்: 37 இதழ்: 43



தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

கவரிமான்

"கவரிமான்" என்ற தலைப்பில் சினிமா வந்தால் பார்த்து ரசிக்கிறோம். ஆனால் சிந்திக்கிறோமா? அந்தக் கதை ஒரு குடும்பத் தலைவன் பற்றியது. குடும்பத் தலைவனே அப்படி நடந்து கொள்ள வேண்டுமென்றால் நாட்டுத் தலைவர்கள் பற்றிக் கூறவும் வேண்டுமோ?

கவரிமானாக நாட்டுத் தலைவர்கள் நடந்து கொண்ட காலம் ஒன்றுண்டு. நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுகளுக்காகவே — குற்றம் சுமத்தப் பட்டது என்ற காரணத்துக்காகவே — கவரிமானாக விளங்கி ராஜினாமா செய்தனர். ஆனால் அதெல்லாம் பண்டைக் கதையாய், பழங்கனவாய் ஆகிவிட்டன.

இன்று சர்க்காரியா கமிஷன், ஷா கமிஷன், குரோவர் கமிஷன் போன்ற எதற்கும் தலைவர்கள் கவலைப்படுவதில்லை. குற்றச்சாட்டுக்களுக்குத் தக்க ஆதாரமிருப்பதாகத் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னரும், "கமிஷன் தீர்ப்பு நீதிமன்றத் தீர்ப்பாகாது" என்று கூறிக் கொண்டு அவர்கள் பாட்டுக்குத் தொடர்ந்து பதவியில் நீடிக்கிறார்கள், அல்லது பதவிக்குத் திரும்பிவர முயலுகிறார்கள். வெட்கக் கேடான நிலையல்லவா இது?

சமீபத்தில் குரோவர் கமிஷன் தீர்ப்பை எடுத்துக் கொள்ளுங்கள். 67 குற்றச்சாட்டுகளில் 12 குற்றச் சாட்டுகளுக்கு வலுவான ஆதாரங்கள் இருப்பதாகத் தீர்ப்பு கூறுகிறது. இந்தப் பன்னிரண்டில் எட்டு தேவராஜ் அர்ஸ் பற்றியது. மற்றவை, மூன்று முன்னாள் அமைச்சர்கள் குறித்து. குரோவர் தீர்ப்புப்படி நடந்துள்ள ஊழல்களும் அதிகார துஷ்பிரயோகங்களும் மோசடிகளும் பயங்கரமானவை.

ஆயினும் என்ன? அர்ஸ் இன்று வரை ராஜினாமா செய்யவில்லை. மத்திய அரசு தானே நடவடிக்கை எடுக்க முடியாத நிலையில் — அதற்குத் தேவையான அதிகாரங்களைப் பெற்றிராத நிலையில் — இருக்கிறது. சர்வாதிகாரம் செலுத்திய இந்திரா, தி. மு. க. அமைச்சரவையை டிஸ்மிஸ் செய்தது போல் ஜனநாயகப் பற்றுள்ள இன்றைய ஜனதா அரசால் நடந்து கொள்ள இயலவில்லை. குரோவர் தீர்ப்பை மாநில முதல்வருக்கே அனுப்பி நடவடிக்கை எடுக்குமாறு கோருகிறது. போலீஸ்காரர் திருடனைப் பார்த்து, "ஏம்பா! திருடிட்டியாமே, அடடா! இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ நீயே எடுத்துக் கொள்!" என்று கூறுவது போன்ற ஓர் அபத்த நிலை. அர்ஸ் துளிக்கூடக் கவலைப்படுவதாக இந்த வினாடிவரை தெரியவில்லை.

விசாரணைக் கமிஷன்கள் அமைப்பதிலும் அர்த்தமில்லை, அவற்றின் தீர்ப்புக்கும் மதிப்பில்லை என்ற நிலை நீடிப்பது நாட்டுக்கு நல்லதல்ல. எனவேதான் குரோவர் கமிஷன் விசாரணை நடத்தியதோடு நின்று விடாமல் இந்தச் சிக்கலைச் சமாளிக்க எந்த மாதிரியான சட்டங்கள் இயற்றப்பட வேண்டும் என்று யோசனை தெரிவிக்கும் பணியையும் செய்திருக்கிறது. இந்தச் சிபாரிசுகளைக் கண்டிப்பாகக் கருத்தூன்றிப் பார்க்க மத்திய அரசு கடமைப்பட்டிருக்கிறது.

ஆள்வது ராமனாயில்லாது போகலாம், ஆனால் ராவணனாயிருந்து விடக் கூடாது என்பதில் மக்களும் கவனம் செலுத்தித் தங்களுக்குள்ள அபாரமான சக்தியை ஆற்றலுடன் பயன்படுத்த வேண்டும்.

'மயிர் நீப்பின் உயிர் வாழாக் கவரிமான்'களாக இல்லாத தலைவர்கள், மானம் பற்றிக் கவலைப் படாதவர்களாய் இருக்கலாம். ஆனால் மக்களாவது தங்கள் மானத்தைக் காத்துக் கொள்ள வேண்டாமா?

ஆறுவது விரல்

'வாஸந்தி'

பப்லு வாசற்படியில் உட்கார்ந்திருந்தான். உள்ளேயிருந்து ஒிரிசி ஒிரிச்சென்ற சத்தம் கேட்ட வண்ணம் இருந்தது. அவன் முகம் வேதனையால் சுருங்கி கண்களில் லேசாக நீர் திரையிட்டது. அவன் தனது மெல்லிய சிறிய முழங்கால்களில் முகத்தைப் புதைத்துக் கொண்டான். உள்ளே யிருந்து வரும் சத்தத்தைக் கேட்கும் போதெல்லாம் தொடை நடுங்குகிற மாதிரி இருந்தது. அவன் கைகளிலும் கால்களிலும் இருக்கும் விரல்கள் என்ன செய்வது என்று புரியாமல் திகைத்து நடுங்கின மாதிரி இருந்தது.

சிறிது நேரத்தில் சத்தம்அடங்கி விட்டது. அவன் மனத்துள் ஒரு நிம்மதி பரவுகிற மாதிரி இருந்தாலும் அவனுக்கு 'ஓ'வென்றுஅழுதால் தேவலை போலிருந்தது.

அவன் அழுவதைப் பார்த்தால் அவனுடைய அப்பா பெரிதாகப் பரிகாஸம் செய்வார்.

''பல்தேல் ஸிங்கின்பிள்ளையா அழுகிறான்?'' என்பார்.

''நம் சர்தாரிணிகள் கூட (சீக்கியப் பெண்கள்) அழ மாட்டார்களடா. அவர்களைவிட கேடு கெட்ட பெண் ஜென்மம் நீ!''

அதைக் கேட்கும்போதெல்லாம் ஒரு சீற்றம் எழும். மூக்கை உறிஞ்சிக் கொண்டு அவன் கண்களைத் துடைத்துக் கொள்வான்.

அவன் மூக்கை உறிஞ்சிக் கொண்டான். சில சமயங்களில் அழுவது ரொம்ப நியாயமான விஷயமாகத் தோன்றிற்று. கோபப்பட வேண்டியதற்குக் கோபப்படாமல் வருத்தப்பட வேண்டியதற்கு வருத்தப்படாமல் அழ வேண்டியதற்கு அழாமல் இருப்பதுதான் அநாகரிகம் என்று தோன்றிற்று. தனது அழுகையை அப்பா பரிகாஸம் செய்வதில் ஏதும் அர்த்தமில்லை என்று அவனுள் ஒரு கோபம் எழுந்தது. பெண்கள் அழுகிறார்கள் என்றால் அவர்கள் ரொம்ப நல்லவர்களாக இருக்க வேண்டும். இரக்கமுள்ள மனசாயிருக்க வேண்டும். அவர்களை எப்படிக் கேடு கெட்ட ஜன்மங்கள் என்கிறார் அப்பா? அப்பாதான் கேடு கெட்ட ஜன்மம்.

''பப்லு!''



''பப்லு!''

பப்லு திடுக்கிட்டு சுய நினைவுக்கு வந்தான். அப்பாவின் குரல். அப்பா எதற்குக் கூப்பிடுகிறார் என்று அவனுக்குத் தெரியும். அவன் சப்தம் செய்யாமல் எழுந்தான்.

''அரே பப்லு!''

அவன் மெள்ளக் கொல்லையின் கம்பிக் கதவைத் திறந்தபடி வெளியே நடந்தான்.

மறுபடியும் அழ வேண்டும் போல் இருந்தது. கண்கள் அவனைக் கேட்காமலேயே நீரை நிரப்பிக் கொண்டன.

பப்லு தலை நிமிர்ந்தான். எதிரே ஹரி வந்து கொண்டிருந்தான்.

''பம்பரம் விளையாடலாமா?''

''ஓ!''

இருவரும் அங்கேயே நின்றபடி பம்பரம் விளையாட ஆரம்பித்தார்கள்.

பம்பரம் விர்ரென்று சுழலும்போது இடையே ஒிரிச் ஒிரிச் என்று சப்தமிடுகிற மாதிரி பப்லுவுக்கு பிரமை தட்டிற்று.

''டேய் உனக்கொரு விஷயம் தெரியுமா?'' என்றான் ஹரி.

''என்ன?''

''அடுத்த சனிக்கிழமை விடுமுறையில்லையா? அதற்காக அன்னைக்கு நம்ப காம்ப் ஜனங்கள் எல்லாம் பிக்னிக் போகப் போகிறோமாம்.''

பப்லுவின் கண்களில் ஒரு ஒளி சட்டென்று வந்தது.

''அப்படியா? எங்கே போகப்போகிறோம்?''

''லும்பினி!''

''அங்கே என்ன இருக்கு?''

''இது கூடத் தெரியாதா? புத்தர் லும்பினியிலேதான் பிறந்தார்!''

''யாரு? ஸோஷல் ஸ்டடீஸ் பாடத்திலே வராரே அந்த புத்தரா?''

''ஆமாம் பின்னே யாரு?''

பப்லுவிற்கு ஸோஷல் ஸ்டடீஸ் பாடப் புத்தகத்தில் இருந்த புத்தரின் படம் ஞாபகத்திற்கு வந்தது. ஆட்டைக் கையில் ஏந்திய படி — கருணை பொங்கும் கண்கள், அருள் சுரக்கும் புன்னகை. அந்தப் பக்கத்துக்கு வரும் போதெல்லாம் கட்டுண்டவன்போல் அந்தப் படத்தைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பது அவன் வழக்கம். அவர் பிறந்த இடத்தைப் பார்க்கவா போகிறார்கள்?

அவனுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது.

''பிக்னிக்குக்கு என்ன டிரஸ் போட்டுண்டு வரப் போறே பப்லு?''

பப்லு திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

''தெரியாது.''.



''எங்கம்மா எனக்கு ஒரு புது ஸ்வெட்டர் தெச்சிருக்கா அதைப் போட்டுக்கப் போறேன்'' என்றான் ஹரி.

பப்லுவிற்கு ஏக்கமாக இருந்தது. அவனுடைய அம்மா டில்லியில் இருந்தாள். அவனுடைய அண்ணாக்கள், அக்காக்களைப் பார்த்துக் கொண்டு. அப்பா நேபாளத்திற்கு வேலையாக வந்த போது அவனையும் அழைத்துக் கொண்டுவந்து விட்டார். அம்மா இருந்தால் நான்கே நாட்களில் ஒரு முழுக்கை ஸ்வெட்டர் பின்னி விடுவாள்.

''அரே ஹரி பேட்டே!''

ஹரியின் அம்மா கூப்பிட்டுக் கொண்டே வந்தாள்.

க்ளோஸ் அப்



பன்னீர்தாஸ்

தென்னை மரங்களைப் பெயர்த்து வேறு இடத்தில் நட முடியுமா? செய்து காட்டியிருக்கிறார்கள் 'கோல்டன் பீச்'சில். ஹவாய் நாட்டு ஹானலுலுவில் கண்ட அனுபவத்தை வைத்து. இங்கே வேளச்சேரியில் வளர்ந்த பத்துப் பனிரெண்டு வயதான தென்னை மரங்களைப் பிடுங்கி எடுத்து, நடைக்கு எட்டு மரங்கள் வீதம் லாரிகளில் கொண்டு வந்து நட்டு வைத்திருக்கிறார்கள். அறுநூறுக்கு மேற்பட்ட இந்த மரங்கள் மூன்று ஆண்டுகளுக்குப் பின் இப்போது காய்க்கவும் தொடங்கி விட்டன!

'தங்கக் கடற்கரை'யின் நுழைவாயில் படியின் அடியில், அமெரிக்காவிலிருந்து கொண்டு வந்த மண்ணைப் போட்டிருக்கிறார்களாம். இதற்கு வி. ஜி. பன்னீர்தாஸ் கூறும் காரணம்: ''அந்த நாடு மாதிரி இங்கேயும் வளம் பெருக வேண்டும் என்கிற ஆசைதான்!''

● வாரம் தவறாமல் வெள்ளிக் கிழமைகளில் மாலை நேரத்தில் 'குமுதம்' அலுவலகத்தில் நடைபெறும் கூட்டு வழிபாட்டில் ஆசிரியர் எஸ். ஏ. பி. கலந்து கொள்கிறார். விசாலமான வழிபாட்டுக் கூடம் ஒன்று அங்கே உள்ளது. அலுவலக ஊழியர்கள் அனைவரும் பங்கு கொள்ளும் வழிபாட்டின் போது வாரம் ஒரு திருக்குறள் படிப்பது என்பது சிறப்பான அம்சம். இன்பத்துப் பால் தவிர, மற்ற குறட்பாக்கள் அனைத்தும் ஏற்கெனவே ஒரு முறை படிக்கப்பட்டு இப்போது இரண்டாம் சுற்றுப் படிக்கப்பட்டு வருகிறது.

எப்போதாவது, உபந்நியாசங்களும், திருப்புகழ் பஜனை போன்றவையும் கூடச் சேர்ந்து கொள்ளும்.

ஆனந்த விகடன் இதழின் 'கொள்கை வாக்கிய'மாக உள்ள

''எல்லோரும் இன்புற்றிருக்க
நினைப்பதுவே யல்லாமல்
வேறொன்றறியேன் பராபரமே.''

என்ற கண்ணி வரிகளைப் பாடித் தீபாராதனை நிகழ்த்துவதுடன் வழிபாடு நிறைவெய்தும்.

எஸ். ஏ. பி.



''என்னடா வெய்யிலில் சாப்பிடும் நேரத்தில் விளையாட்டு?''

''நான் வீட்டுக்குப் போறேன் ஹரி'' என்றான் பப்லு. வீடு என்றதும் காலையில் கேட்ட சப்தங்கள் எல்லாம் ஞாபகத்திற்கு வந்தன. வயிற்றை என்னவோ செய்தது.

''நீயும் இவனோடு சாப்பிடேண்டா'' என்றாள் ஹரியின் அம்மா.

''கோபி பரோட்டா (காலி ஃப்ளவர் பரோட்டா) பண்ணியிருக்கிறேன் வா.''

அவனுக்குச் சாதம்தான் பிடிக்கும். இன்றைக்கு விடுமுறையாதலால் அப்பா சாதம் தான் பண்ணியிருப்பார். ஆனால் அதோடு கூட வேறு என்னவோ இருக்கும்.

காலையில் கேட்ட சப்தங்கள் அவனுக்கு மறுபடியும் ஞாபகத்திற்கு வந்தன.

அவன் சரியென்றபடி ஹரியுடன் அவன் வீட்டுக்குள் நுழைந்தான்.

சுடச்சுட நெய் மணக்க கோபி பரோட்டா மிக நன்றாக இருந்தது.

''அம்மா இவன் கையைப் பாத்தியா? ஆறு விரல்கள்!'' என்றான் ஹரி.

''ஆமாம். சில பேருக்கு இருக்கும்.''

அவனுக்கு என்னமோ வசமாகப் பிடிபட்டார் போல் இருந்தது. அதற்குமேல் சாப்பிடக் கூடக் கூச்சமாக இருந்தது. எல்லாருக்கும் ஐந்து இருக்கும் போது அவனுக்கு மட்டும் ஏன் ஆறு?

''அரே பப்லு!''

அவன் திடுக்கிட்டு எழுந்தான். அப்பாவின் குரல்.

ஹரியின் அம்மா அவனை அமர்த்தினாள்.

''அப்பா வந்தால் என்ன? நான் சொல்லிக் கொள்கிறேன். நீ உட்கார்.''

வாசலில் அப்பா பேசுவது கேட்டது.

''அரே பத்மாஷ்! நான் அங்கே சிக்கன் கறியும் புலாவும் பண்ணியிருக்கேன். இங்கே உட்கார்ந்துட்டானா?''

அவர் அப்படிச் சத்தமாகப் பேசுவது அவனுக்குச் சற்று அவமானமாக இருந்தது. அவன் தலையைக் குனிந்தபடி அவசரமாகச் சாப்பிட்டு விட்டுக் கிளம்பினான்.

''ஜும்பினிக்கு அடுத்த வாரம் வருகிறீர்களா இல்லையோ?''

''ஓ! கண்டிப்பாக!''

அப்பாவின் பதில் அவனுக்கு உற்சாகத்தை அளித்தது.

வீட்டிற்குள் நுழைந்ததும் குரு நானக்கின் படம் தெரிந்தது. கருணையும் கனவும் மிதக்கும் கண்கள். வெள்ளைத் தாடி.

அவன் பாத்ரூமுக்குள் தயக்கத்துடன் எட்டிப் பார்த்தான். துப்புரவாக இருந்தது. லேசாக டெட்டால் வாசனை அடித்தது. அவன் பேசாமல் தன் புத்தகப் பெட்டியிடம் போய் உட்கார்ந்து கொண்டான்.

அப்பா சாப்பிட உட்காருவது தெரிந்தது.

''அரே பப்லு.''

அவன் சலிப்புடன் எழுந்தான்.

அப்பா தட்டு நிறைய புலாவும் அதன் மேல் தாராளமாக சிக்கன் கறியும் போட்டுக் கொண்டிருந்தார்.

''இங்கே வாடா, எவ்வளவு நன்ருகச் செய்திருக்கிறேன், பார், ஒரே ஒரு துண்டம் சாப்பிட்டுப் பார்.''

''ஊஹூம் முடியாது. வயிற்றிலே இடமே இல்லே!'' என்று கத்தினன்.

அவர் சற்றுக் கோபத்துடன் சாப்பிட உட்கார்ந்தார்.

''நீ இப்படி இருந்தாயானுல் உடம்பு எப்படி வளரும்? நானும் உன் அம்மாவும் எத்தனே உசரமா தாட்டியா இருக்கிறேம். நீயும் இருக்கியே எலிக்குஞ்சு மாதிரி.'' அவன் பேசாமல் அவரைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான். அவர் சுவாரஸ்யத்துடன் சாப்பிடுகையில் கிரீச் கிரீச்சென்று ஏதோ கத்துகிற மாதிரி அவனுக்குப் பிரமையேற்பட்டது. வயிற்றைச் சங்கடப்படுத்திக் கொண்டு கண்களில் நீர் முட்டிற்று. அழக் கூடாது அதுவும் அப்பாவுக்கு எதிரில் அழக்கூடாது. அவன் அழுது லாபமில்லாதபோது அழுது என்ன பிரயோஜனம்? அந்த அழுகை அவனது பிரத்தியேக சொத்து. அதை ஒருவருக்கும் காட்டுவது அவசியமில்லே.

அடுத்த நான்கைந்து நாட்களுக்கு லும்பினிக்குப் போகப் போகும் பிக்னிக்கைப் பற்றித் தான் பேச்சாக இருந்தது காம்பவுண்டில். யார் யார் என்னென்ன சாப்பாடு எடுத்துக் கொண்டு வரப் போகிருர்கள், என்ன டிரஸ் அணியப் போகிருர்கள் என்ற சர்ச்சையாக இருந்தது. பப்லு ஒருவன்தான் புத்தரைப் பற்றின ஆலோசனைகளில் லயித்திருந்தான்.

வெள்ளிக் கிழமை மாலே அவன் விளேயாட்டிலிருந்து வீடு திரும்பியதும் கொல்லேயில் ஒரு கோழி குல்மொஹர் மரத்தில் கட்டப் பட்டிருப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டான். கோழியின் காலுக்கு கயிறு கட்டப்பட்டிருந்தது. அது அப்படியே தத்தித் தத்தி நடந்து கொண்டிருந்தது.

அப்பா சமையலறையில் ஏதோ காரியமாக இருந்தார். அவனுக்குத் தொண்டையை அடைத்தது. விறுவிறு என்று நடந்து ரேழியில் போய் உட்கார்ந்து கொண்டான். ஆளரவம் கேட்டு,

''பப்லு! பால் குடித்து விட்டுப் போ!'' என்ருர் அப்பா.

அவனுல் பதில் சொல்ல முடியவில்லே. கண்களிலிருந்து சரம் சரமாய் நீர் வழிந்தது சொல்லத் தெரியாமல்.

சற்றுநேரத்தில் அப்பா வந்தார் வாயிலுக்கு.

''என்ன கூப்பிடக் கூப்பிட பதில் சொல்ல மாட்டேன் என்கிறே?''

அவர் குரல் கேட்டு அவன் விசித்து விசித்து அழுதான்.

அவர் பதட்டத்துடன் அருகில் வந்தார்.

''ஏன் குழந்தை? என்ன சமாச்சாரம்?'' யாராவது அடித்தார்களா? கோபித்தார்களா?''

அவன் எல்லாவற்றிற்கும் இல்லே என்கிற மாதிரித் தலேயை ஆட்டினன்.

''பின்னே என்ன?''

''நான் நாளேக்கு லும்பினிக்கு வரப் போவதில்லே!''

''ஏன்?''

க்ளோஸ் அப்

● சட்டமன்ற தி. மு. க. உறுப்பினரான திரு. சந்திரன் ஜயபால் ஒரு அகில இந்தியக் கால் பந்தாட்ட வீரரும் கூட!



சந்திரன் ஜயபால்

இராமனுதபுரம் சேதுபதி குடும்பத்தைச் சேர்ந்த இவர் திறமையான ஜாக்கியும்தான். ஜிம்கான பந்தயம் ஒன்றில், ஒரே நாளில் இவர் மூன்று முறை குதிரையை வெற்றிகரமாகச் செலுத்தியதுண்டு. இப்போது மூன்று பந்தயக் குதிரைகளுக்குச் சொந்தக்காரர்.

தொழில் முறையில் புகழ் பெற்ற லாயராக உள்ள இவருடைய முக்கியமான பொழுதுபோக்கு ஸ்டாம்பு சேகரிப்பதும் நிறையப் படிப்பதும்.

கடந்த ஆண்டில் இவர் சட்டமன்றத்தில் பேசிய போது வலியுறுத்திய விஷயம் ஒன்று: தமிழகத்தின் சிறந்த விளேயாட்டு வீரர்களுக்கு அரசு ''அண்ணு விருது'' வழங்கிப் பாராட்ட வேண்டும்.''

மகனின் சாதனேகளேப் பற்றி உற்சாகத்துடன் சொன்னவர் தந்தையார் திரு ஜயபால் -சாமி.

● நீதிபதி எஸ். மகராஜன், கவிதை யோகம் பற்றி எழுதியுள்ள ''சொல்லின்பம்'' என்னும் நூல் அண்மையில் புதுவைக் கம்பர் விழாவில் வெளியிடப் பட்டுள்ளது

நீதிபதி திரு. எஸ். மகராஜனுக்கும், அவருடைய தமக்கையார் வேலம்மாளுக்கும் ரசிகமணி டி. கே. சி. எழுதிய இலக்கிய மணம் கமழும் கடிதங்களின் தொகுப்பு ஒன்று வட்டத்தொட்டி வெளியீடாகத் தயாராகி வருகிறது.

உலகப் பெரும் காவியங்களேத் தமிழில் வெளியிடத் தமிழக அரசு அமைத்துள்ள வல்லுநர் குழுவுக்கு நீதிபதி எஸ். மகராஜன் தலேவராகப் பணியாற்றுகிருர் என்பது தெரிந்த பழைய விஷயம்.

அந்நூல்களுள் ஒன்ருக பெ. நா. அப்புசாமி, ஹாவ்லக் எல்லிஸ் எழுதியுள்ள Psychology of sex என்ற நூலேத் தமிழாக்கம் செய்ய ஒப்புக் கொண்டிருக்கிருர் என்பது புதிய செய்தி! மாப்பஸா(ங்) கதைகளேத் தமிழாக்க விருப்பவர் ஜெயகாந்தன்.

எஸ். மகாராஜன்



—யெஸ்பால்

பஸ்ஸில் சினிமா!

⌘ கண்டக்டர் (ஒரு பிரயாணியைப் பார்த்து): இந்தாங்க, சார், படம் பார்க்கும்போது விசிலடிக்கக் கூடாது! நான்தான் விசில் கொடுக்கி றேன்னு, நினைக்க டிரைவர் பஸ்ஸை நிப்பாட்டிடுவார்!

⌘ பஸ்ஸில் ஒருவர் மற்றவரிடம்: இந்த பஸ்ஸில் வந்தா பெரிய ரோதனைங்க: சீக்கிரம் படத்தைப் போட மாட்டாங்களே. தலைவலி, பல்வலி விளம்பரம் எல்லாம் காண்பித்து, படம் ஆரம்பிக்கறதுக்குள்ளே நாம ஊர் போய்ச் சேர்ந்திடுவோம்.

⌘ டிக்கெட் வாங்கும் இடத்தில் ஒருவர்: என்ன இந்த பஸ்ஸில் வயது வந்தவர்கள் மட்டும் தான் ஏறணுமா?

மற்றவர்: ஆமாம் ஸார். இன்னைக்கு 'A' படம் பஸ்ஸில் காண்பிக்கப் போறாங்களாம், அதான்!

— ஆர். கோபாலகிருஷ்ணன்

அவன் சற்று நேரம் பேசாமல் இருந்தான். பிறகு மெள்ளச் சொன்னான்:

''நீங்கள் சிக்கன் கறி கொண்டு வரு வீர்கள்''

அவர் யோசனையுடன் ஒரு விநாடி அவனைப் பார்த்தார். பிறகு கடகடவென்று சிரித்தார்:

''பூ! இவ்வளவுதானே? கொண்டு வர வில்லே: உனக்குப் பின் என்ன வேணும்?''

இவ்வளவு சீக்கிரம் அப்பா பணிந்து போவார் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. அவன் சற்று யோசித்தான்.

''மீட்டா சாவல்'' என்றான் ஒரு வெட்கம் கலந்த புன்னகையுடன்.

அவர் சிரித்துக் கொண்டே அவனை உள்ளே தூக்கிக் கொண்டு போனார்.

அன்று இரவு படுக்கப் போகுமுன் அவன் அந்த ஆறுவது விரலைப் பற்றி அப்பாவிடம் கேட்டான்.

''எனக்கு மட்டும் ஏம்ப்பா ஆறுவிரல்?''

அப்பா பேப்பர் படித்தபடியே பதில் சொன்னார். ''என்னவோ தெரியவில்லே. நம்ம குடும்பத்திலே அப்படியிருக்கு. உன் அண்ணன்க ளுக்கு, அக்காக்களுக்கு எல்லாருக்கும் இருந்தது.''

''இப்ப இல்லையே?''

அப்பா சிரித்தார். பெருமையுடன் சிரித்த மாதிரி இருந்தது.

''ஆமாம் நான் அவர்கள் பிறந்ததும் அதை வெட்டி விட்டேன்.''

அவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

''என்னது?''

''நீ பிறந்தப்போ நான் ஊரில் இல்லே. இல்லாவிட்டால் உன்னையும் வெட்டியிருப் பேன்.''

பயத்தில் அவன் விழிகள் விரிந்தன.

''எப்படி? கோழியை வெட்டற மாதி ரியா?''

அவர் சிரித்தார்.

''குழந்தை விரல்தானே, கத்தியிட்டு வெட்டி பாண்டேஜ் போட்டுடுவேன்.''

''குழந்தை அழாது? செத்துப் போகாது?''

''அழும். செத்துப் போகாது!''

''கழுத்தை வெட்டினுத்தான் செத்துப் போகுமா?''

''ஆமாம், ஆமாம்.''

''பின் ஏன் கழுத்தை வெட்டவில்லே?''

அவர் கோபத்துடன் அவனைப் பார்த்தார். ''இது என்ன தொண தொணப்பு, பேப்பர் படிக்க விடாமல்? குழந்தையை யாராவது வெட்டுவார்களா?''

''கோழியைப் பின்னே ஏன் வெட்டுகி றீர்கள்?''

''கோழியும் குழந்தையும் ஒண்ணு?''

'ஏன் இல்லே?' என்று அவன் தனக்குள் நினைத்துக் கொண்டான். அப்பா கோபமா யிருக்கிறார் என்று பேசாமல் ரஜாய்க்குள் முடங்கிக் கொண்டான்.

மூடிய கண்களுக்குள் கம்சன் வேஷத்தில் அப்பா நிற்கிற மாதிரி இருந்தது. ஒன்று இரண்டு மூன்று என்று குழந்தைகளை வெட்டு கிற மாதிரி இருந்தது. இடையே கிரீச் கிரீச் என்ற சப்தம் கேட்டது.

காலையில் கண் விழிக்கையில் அப்பா குரு க்ரந்தம் சொல்வது கேட்டது.

அவன் அன்றைக்கு ஹரம்பினி கிளம்ப வேண்டும் என்ற நினைவுடன் அவசரமாக எழுந்தான்.

வாஷ் பேஸினுக்கருகில் ஒரு நாற்காலி யோடு கோழி கட்டப்பட்டிருந்தது. நேற்று தான் அழுதிருக்கா விட்டால் இன்று அது சிக்கன் கறியாக மாறியிருக்கும் இன்று அவன் நினைத்துக் கொண்டான்.

காம்பஸ் குடும்பங்களைச் சுமந்து கொண்டு நான்கு பஸ்கள் புறப்பட்டன. பப்லுவுக்கு அவனுடைய ஏக்கங்கள் மனத்தாங்கல்கள், பயங்கள் எல்லாம் மறைந்து விட்டன.



முழுமதியோ கருமுகிலோ..?



முன் புற அட்டையில் தோன்றுபவர்: சத்ய ஸ்ரீ

வண்ணப் புகைப்படம் எடுத்தவர்: சித்ரா

ஒன்னரை மணி நேரத்தில் லும்பினியை அடைந்தார்கள். பஸ்ஸை விட்டு இறங்கியதும் மற்ற குழந்தைகள் பூங்காவுக்கு ஓடுகையில் அவன் மட்டும் பெரியவர்களுடன் கோவிலுக்குச் சென்றான்.

புத்தர் பிறந்த இடத்தைப் பெண்கள் வணங்குகையில் அவனும் கீழே விழுந்து வணங்கினான்.

இன்னொரு கோவிலுக்குப் போனார்கள். அங்கே ஹரி சொன்ன மாதிரி, ஒரு பெரிய புத்தர் சிலை இருந்தது. அதன் நீண்ட காதுகளை, கருணை சுரக்கும் கண்களை சாந்தமான புன்னகையை அவன் வெகுநேரம் வைத்த கண் வாங்காமல் பார்த்தான் - கட்டுண்டவன் மாதிரி, கிறங்கிப் போனவன் மாதிரி. பார்க்கப் பார்க்க அந்தக் கருணை அவனை ஆட்கொள்கிற மாதிரி இருந்தது. புன்னகை தழுவுகிற மாதிரி இருந்தது. எந்த ஜீவராசியும் துன்பப் படுவதைக் காணச் சகியாத பார்வை... ஆட்டுக்கும் கோழிக்கும் அபயமளிக்கும் புன்னகை. புத்தரின் சிலையோடு அவனுக்கு ஏதோ சம்பாஷணை நடந்த மாதிரி அவனுள் ஒரு நெகிழ்ச்சி ஏற்பட்டது.

அங்கிருந்த இரண்டு மூன்று புத்த பிட்சுக்கள் அவனைப் பார்த்துச் சிரித்தார்கள் மென்மையாக.

பிக்னிக் முடிந்து பஸ் புறப்படும் வேளை வந்தது.

ஸர்தார்ஜி பரபரத்தார். பப்லு எங்கே? ஒவ்வொரு பஸ்ஸிலும் நுழைந்து நுழைந்து பார்த்தார்.

பப்லு! பப்லு!

அவரது குரல் நான்கு பஸ்களையும் துளைத்துக் கொண்டு வருகிற மாதிரி இருந்தது.

ஆனால் பப்லுவைக் காணவில்லை.

ஸர்தார்ஜி செய்வதறியாமல் திகைத்தார். குழந்தைகள் எல்லாம் பப்லுவைப் பார்த்து ரொம்ப நேரமாயிற்று என்றார்கள்.

சர்தார்ஜியும் நான்கைந்து பேரும் சேர்ந்து தேடக் கிளம்பினார்கள்.

மகா சாதுப் பையன், தொட்டாற் சுருங்கி, நிமிஷமாய் அழுது விடுவான் என்று சர்தார்ஜி புலம்பிக் கொண்டிருந்தார்.

கோவில்களுக்குள், பூங்காவில் எல்லாம் தேடிப் பார்த்து விட்டார்கள். எங்கும் கிடைக்கவில்லை.

சர்தார்ஜி குழந்தை மாதிரி அழ ஆரம்பித்து விட்டார்.

"அரே மேரே முன்னே, மேரே லால்! மேரே பேட்டே."

சற்று நேரத்தில் ஒரு புத்த பிட்சு அவரை நோக்கி வந்தார். அவரிடம் வந்து மெள்ள ஏதோ சொன்னார்.

சர்தார்ஜி ஓட்டமும் நடையுமாக அவருடன் போனார்.

கோவிலுக்குப் பின்னால் ஒரு சிறிய வீட்டின் ரேழியில் ஒரு பிட்சுவின் மடியில் பப்லு உட்கார்ந்திருந்தான்.

"அரே மேரே பேட்டே!"

சர்தார்ஜி அவனை அணைக்கக் கையை நீட்டினார்.

அவன் விருட்டென்று உள்ளே ஓடப் பார்த்தான்.

பிட்சு அவனைப் பிடித்து நிறுத்தினார்.

"என் வீட்டுக்குள் ஒளிந்து கொண்டிருந்தான். தன் வீட்டுக்குத் திரும்ப மாட்டேன் என்கிறான்."

சர்தார்ஜிக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"ஏண்டா பப்லு, ஏன் வர மாட்டியா?"

"மாட்டேன்" என்றான் பப்லு அழுத்தமாக, ஆத்திரத்தோடு.

"ஏண்டா, என்ன கோபம் குழந்தே?"

பப்லு பதிலே பேசாமல் உட்கார்ந்திருந்தான். சர்தார்ஜி திரும்பத் திரும்ப 'மேரே லால், மேரே முன்னே' என்று புலம்பினார்.

"இங்கே உட்கார்ந்து என்ன பண்ணப் போறே?"

"நான் புத்த பிட்சுவாப் போவேன்."

சர்தார்ஜிக்கு அதிர்ச்சியிலும் சிரிப்பு வந்தது.

"ஏன், அப்பாவைப் பிடிக்கவில்லையா?"

"நீ கோழியை வெட்டறே, ஆட்டை வெட்டறே அது கத்த கத்த. என் விரலையும் ஒரு நாளைக்கு வெட்டுவே நான் அழ அழ."

சர்தார்ஜி திகைத்துப் போய் நின்றார். பிறகு அவர் அவனை அணைத்துக் கொண்டு 'மாட்டேன் மாட்டேன்' என்று குலுங்கிக் குலுங்கி அழுவதை அவன் அதிசயத்தோடு பார்த்தான்.

சர்தார்ஜி அழலாமா?

அவர் அழுகைக்கு ஒரு நியாயமான காரணம் இருக்கவேண்டும் என்று அவன் நினைத்துக் கொண்டான்.

பாட்டிமார்களும் பேத்திமார்களும்

ஜெயகாந்தன்

9. மகாசபையின் தீர்மானம்

வெகு நாட்களுக்குப் பிறகு பெரிய வீட்டின் பின் கட்டில் மருமேடசன் வீட்டுப் பெண்களின் 'மகாசபை' கூடியிருந்தது. வெள்ளையம்மாள் நிறையவே வகை வகையாக 'அத்திக்காய்'களைக் கொண்டு வந்து குவித்து, ஆய்ந்து கொடுத்துவிட்டுப் போய்விட்டாள். சிலுக்குக் கண்ணுவைப் பார்த்துவிட்டு மறுபடி வருகிறேன் என்று போனவள் வரவே இல்லை என்பதை இப்போது இலைமுன் சாப்பிட அமர்ந்த போதுதான் காந்திமதி யோசித்தாள்:

''தோ வரேன் சிலுக்குப் பிள்ளையைப் பாத்துட்டுன்னு சொல்லிட்டுப் போனாளே வெள்ளச்சி வந்தாளா பாத்தியா?'' என்று அவள் சிவகாமியிடம் சொன்னதுதான் தாமதம்; அதற்காகவே காத்திருந்த சிவகாமி சொன்னாள்:

''வெள்ளச்சிக்கு எப்பவும் சிலுக்குத்தான் வேணும். அவளைப் பாத்துப் பெரிய வூட்டுக்கு வான்னு கூப்பிட்டாளாம்... அதுக்குள்ளே அந்தக் கப்பல்காரி 'ஏன்? இங்கேதான் வந்து சிலுக்குவுக்குத் தனியா ஆக்கிக் குடுத்துடேன்னு சொன்னாளாம்... அதனாலே தான் வர முடியலே'னு வந்து சொல்லிட்டுத்தான் போனாள்'' என்று காந்திமதிக்குச் சமாதானம் கூறியவாறே வாயகலமான ஒரு சட்டியிலிருந்து அகப்பையால் எடுத்து எல்லோருக்கும் பரிமாறினாள் சிவகாமி.

''அது சரி. சிங்காரம் இப்பவும் என்ன சின்னக் குழந்தையா?... மீசை முளைச்ச ஆம்பிளைப் பையன்கிட்ட இந்த வெள்ளச்சி 'கண்ணு...மூக்கு'னு கொஞ்சறது நல்லாவா இருக்கு?'' என்று மகாராணி எதையோ காரமாய் ருசித்து உறிஞ்சியவாறே கேட்டாள்.

அப்போது பொன்னம்மாளின் மகளான அமுது வந்தாள். அவளும் இன்னும் சில பெண் குழந்தைகளும் இவர்களின் இந்த அத்திக்காய் விருந்தைக் கண்டு அருவருத்து ஓடிப்போவார்கள். ஆனாலும் இதை ஒரு வேடிக்கையாக வந்து பார்த்துக் கொண்டு நிற்பதில் அமுதுவுக்கு எப்போதும் ஓர் ஆனந்தம்.

காந்திமதி அமுதுவைப் பார்த்து ''இத பாரு பொண்ணே, நீயும் இதைச் சாப்பிட்டுப் பழகிக்கடி... அப்பதானே நாளைக்கி சிங்காரத்தைக் கட்டிக்கிட்டா நீயே ஆக்கிப் போடலாம்'' என்று பரிகாசம் செய்தாள்.

''ஐயே! நான் மாட்டேன்... தூ!...சிலுக்கு மாமாவைக்கூட நான் திருத்திடுவேன். பாரு... அப்புறம் மாமா பேரைச் சொல்லி நீங்க இந்தக் கூத்து அடிக்க முடியாது. நீங்க உங்களுக்கு மட்டும்தான் இந்த விருந்து நடத்திக்கணும்...'' என்றாள்.

''கேட்டியாடி உம் மகள் சொல்றதை...? சிங்காரத்தைக் கட்டிக்கிட்டு அவனை இவள் திருத்தப் போறாளாம்! கெட்டிக்காரியாத்தான் பெத்து வெச்சிருக்கேடி'' என்று தன் தங்கை பொன்னம்மாளையும் அமுதுவையும் பாராட்டினாள் காந்திமதி.

''சரிசரி... சாப்பிடாதவங்களுக்கு இங்கே என்ன வேலை? போ... போ'' என்று மகளை விரட்டினாள் பொன்னம்மாள். அமுது அங்கிருந்து போன பிறகு காந்திமதியிடம் கொஞ்



சம் நெருக்கமாகவே வந்து சொன்னாள் பொன்னம்மாள்: ''நீ பாட்டுக்கு அமுது கிட்ட போயி சிலுக்கு மாமாவைத்தான் நீ கட்டிக்கணும்னு சொல்லிட்டே போலிருக்கு. அதுக்கென்ன தெரியும்? குழந்தைதானே? அதைப் போயி அந்தக் கெழவி கிட்ட சொல்லியிருப்பாளாக்கும். அவ்வையாக் கெழவி என்னே வந்து 'மொறு மொறு'னு புடிச்சிக்கிணு பேசறா...''

''ஏன் பேசறா? சிலுக்குவுக்கு என்னாடி அம்மா, பொண்ணா இல்லே? அவ கெடக்கா கெழவி! விதியில்லாம இங்கே வந்து கெடக்கறமேன்ற தாழ்வுப் புத்தி யிலே நாம்ப வந்து அவளே ரொம்பக் கெஞ்சணும்னு நினைக்கிறா போலிருக்கு. அவ திருப்திக்கு மொறைப்படி ஒரு நாளைக்குப் பாக்கு வெத்திலே மாத்திக்குவோம்; கெழவிக்குக் கொஞ்சம் வேப்பிலே அடிக்கணும்; உனக்கு மாமியாராச்சேனு கொஞ்சம்கூட மதிப்புக் கெடையாது. அதனாலேதான் கெழவி கொஞ்சம் பிகு பண்றாப் போலிருக்கு. அதை நான் பாத்துக்கறேன்...'' என்றாள் காந்திமதி.


என்றால் 'நான் மாட்டேன், நீ சொல்லு' என்று ஒருவரை யொருவர் இழுத்து விட முயல்வதைக் காந்திமதி கவனித்துவிட்டாள்.

''என்னாடி சமாசாரம்? ஒருத்தியை ஒருத்தி தள்ளிவிடப் பாக்கறீங்க... என்னாடி அது? நீதான் சொல்லேன்...'' என்று இந்திராணியிடம் கேட்டாள் காந்திமதி.

''ஒண்ணுமில்லே... எனக்கொண்ணும் தெரியாது. சிவகாமியைத்தான் கேளு'' என்றாள் இந்திராணி.

''நானா பாத்தேன்? அத்தான் வந்து சொன்னாங்க... எங்க ரெண்டு பேரையும் நாங்க தோட்டத்திலே யிருந்தபடி கூப்பிட்டுக் காட்டினாங்க...'' என்று வாலுமில்லாமல் தலையு மில்லாமல் என்னவோ சொன்னாள் இந்திராணி. அவள் புருஷன் — அந்த மகாராஜ மாப்பிள்ளை என்னமோ விஷமம் பண்ணியிருக்கிறான் என்று ஒரு நொடியில் புரிந்துகொண்டாள் காந்திமதி.

காந்திமதியும் பொன்னம்மாளும் சிலுக்குவைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில் இந்திராணியும் சிவகாமியும் ஒருவரை யொருவர் ரொம்ப அர்த்தத்துடன் பார்த்துக்கொண்டனர். அவர்கள் பார்வையில் தங்களிருவருக்கும் தெரிந்த ஒரு ரகசியத்தை இந்தச் சபையில் போட்டு உடைப்பதா? வேண்டாமா? அப்படி உடைப்பது



இந்திராணி கேட்டாள்: ''எந்தப் பெண்ணுக்கு யாரு புருஷன்னு நீங்களே தீர்மானம் பண்ணிட்டா எப்படி? அது அதுக்கு உண்டானவங்களைக் கேக்கணும்னு எதுக்கு சொல்றாங்க? சிங்காரத்துக்கு அமுதுவைக் குடுக்கறதுக்கு அவ பாட்டி ஒப்புத்துக்கவே மாட்டாள். உங்க சிங்காரம் கதைங்க யெல்லாம் உங்களுக்குத்

கல்கி ஜூன் 17

தமிழக முன்னேற்ற சிறப்பிதழ்




தெரியாது... நான் என் கண்ணாலே பாத்தேன் — வெள்ளச்சியும் அவனும் தோப்பிலே தேங்காய்க் கிடங்கிலேயிருந்து வந்த கோலத்தை!... அவனுக்கு என்னா வயசு? அவனுக்கென்னா வயிசு? கருமம் கருமம்! அதுக்குத்தான் சிலுக்குப் பிள்ளை தன் கழுத்திலே கிடந்த சங்கிலியை அவுத்து அவனுக்குப் போட்டிருக்கான்... இவன் அக்கரையிலே போயி அடிச்சிருக்கிற கூத்து... ஊரே சிரிக்குது... அக்கரைப் பக்கம் வந்தா, இனிமே காலே, கையை வெட்டிப்பிடுவேன்னு நிக்கிறானுவளாம் அக்கரைக் காரனுங்க. இந்த லட்சணத்திலே நாம் எந்த முகத்தோட போயி அவ்வையாரம்மா கிட்ட நம்ப தம்பிக்குப் பொண்ணு கேக்கறதாம்!'' என்று மெள்ள மெள்ளச் சிங்காரத்தைப் பற்றிச் சபையில் சொல்ல வேண்டுமென்று உறுத்திக் கொண்டிருந்த எல்லா விஷயத்தையும் எடுத்து விட்டாள் சிவகாமி.

காந்திமதி சோற்றுக் கையால் வாய் பொத்தி, ''அடி பாவிகளா!' என்றாள்: ''ஏண்டி வெள்ளையம்மாளுக்குச் சிங்காரம் பெத்த புள்ளை மாதிரியாச்சே... அடுக்குமாடி இப்பிடி நினைக்கிறது! ஆருடி அவன் எவனோ காட்டினாலுமே காணாத காட்சியை... உன் புருஷன்தானே? அவன் புத்தி எனக்குத் தெரியாதா? பொன்னம்மா பொண்ணைச் சிங்காரம் கட்டிக்கிறா இவனுக்குப் பொறுக்குமா? அவ்வளவு சொத்துக்கும் அவ இல்லே மகாராணி ஆயிடுவா? அந்தப் பொறாமையிலே கதை கட்டி உடறானா 'மகாராஜ மாப்பிள்ளை?'' என்று ஆக்ரோஷமாகக் கேட்டாள் காந்திமதி.

''தே பாரு! உந்தம்பி பெருமை அவனோட இருக்கட்டும். இங்கே யாரும் அவனுக்காகப் பொண்ணு பெத்து வெச்சிக்கிட்டு கெடக்கலே!'' என்று சம்பந்தமில்லாமல் காந்திமதியிடம் சண்டைக்கு வந்தாள் மகாராணி.

தர்மசங்கடம்

தம்பு!



'ஓ! இவ புருசனைப் பத்திச் சொன்னதாலே இவளுக்குக் கோபம் வருதோ!' என்று ஒரு விநாடி யோசித்து ''யாருடி இவ அறிவு கெட்டவளா இருக்கா! 'உன் தம்பி உன் தம்பி'ன்னு உனக்கு மட்டும் சிங்காரம் என்னடி மச்சானா? புத்தியில்லாம நீயும் உன் புருசனோட சேந்துக்கிட்டு ஆடாதே! அவனுக்கு எவ்வளவு கெட்ட எண்ணம் இருந்தா வெள்ளச்சியையும் சிங்காரத்தையும் வெச்சிக் கதை கட்டியிருப்பான்! என் எதிரே வந்து சொல்லியிருந்தான்னா வெளக்குமாத்தை எடுத்துக் கிட்டிருப்பேன்'' என்று கோபாவேசமாகக் கத்தினாள் காந்திமதி.

காந்திமதியின் ஆவேசத்தைக் கண்டு அஞ்சி அடங்கிப் போனாள் மகாராணி.

இந்திராணியும் சிவகாமியும் இப்போதும் ஒருவரைப் பார்த்து ஒருவர் மௌனமாய்ச் சிரித்துக் கொண்டனர்.

''இந்தா காந்தியக்கா! நான் ஒண்ணும் என் புருஷனுக்காகப் பரிஞ்சிக்கினு வரதா நெனைச்சிக்காதே. கொஞ்ச மின்னே சொன்னியே சிங்காரம் நம்ப எல்லாருக்கும் தானே தம்பின்னு... நம்ப தம்பியைப் பத்தி நமக்குத் தெரியாதா! நாலு பவுன் சங்கிலியைத் தூக்கி அந்த வெள்ளையம்மாளுக்குக் குடுத்திருக்கானே — சும்மாவா? அவுங்க ரெண்டு பேரும் தென்னந்தோப்பிலே ஆடற ஆட்டத்தை நீ பாத்திருக்கணும். நீங்க பாத்ததைச் சொல்லுங்களேண்டி... சும்மா இளிக்கிறீங்க!'' என்று இந்திராணியை இழுத்து விட்டாள் மகாராணி.

மங்களம் இவர்கள் பேசுகிற அக்கப்போர் விஷயங்களைக் காது கொடுத்துக் கேட்க முடியாமல் அடுக்களை வேலைகளில் ஈடுபட்டிருந்தாள்... அவர்கள் சாப்பிடுகிற விருந்து ருசியை விட அவர்கள் பேசுகிற விஷயங்களில் அதிகக் கவிச்சி வீசியதால் மூக்கையும் செவிகளையும் பொத்திக் கொண்டு போனாள் மங்களம்.

இந்திராணி, தான் தேங்காய் கிடங்கில் பார்த்த சிங்காரத்தின் — வெள்ளையம்மாளின் லீலை நிலைகளை ஒன்றும் தெரியாத அப்பாவித் தனமான குரலில் ஒரு வக்கிர ரசனையுடன் சித்திரமாய்த் தீட்டிக் காட்டிக் கொண்டிருந்தாள். அதைக் கேட்டு வாயிலிருப்பதை விழுங்கவும் முடியாமல் துப்பவும் முடியாமல் புரைக்கு யேறிச் சிரித்தாள் சிவகாமி.

''இப்ப நீ என்னடி சொல்றே? சிங்காரம் வெள்ளையம்மாளை வப்பாட்டியாக்கிக்கிட்டான்னு சொல்றே?'' என்று சீறினாள் காந்திமதி.


''அதெல்லாம் எனக்குத் தெரியாது. வப்பாட்டியோ குப்பாட்டியோ? நான் கண்ணாலே பாத்ததைச் சொன்னேன்... நம்பினா நம்புங்க; நம்புலேன்னா உடுங்க'' என்றாள் இந்திராணி.

(தொடரும்)

ஒரு சரித்திர நிகழ்ச்சி


துவாரகாநாத், பூரி, பத்ரிநாத், சிருங்கேரி ஆகிய நான்கு பீடங்களின் சங்கராச்சாரியார் சிருங்கேரியில் மே 1ல் சங்கர ஜயந்தியன்று கூடினார்கள். உலக நலனைக் கருத்தில் கொண்டு நால்வரும் தனிமையில் இரண்டு மணி நேரம் அளவளாவி கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டார்கள்! இத்தகைய ஒரு சந்திப்பு நிகழ்வது சரித்திரத்திலேயே இது முதல் தடவையாகும்.

புகைப்படம்: ஆர். ராமசந்தரம்



—ஜயேந்திரன்—

தோல் போர்த்திய புலிகள்



"உஸ்..' அப்பாடா' வென்று நெற்றியில் வழியும் வியர்வைத் துளிகளைத் துடைத்த வாறே வந்து மோடாவில் உட்கார்ந்தான் நாகராஜன்.

''அப்பாடா... அலைஞ்சு திரிஞ்சு ஒரு வழி யாய், என் ஃப்ரெண்ட் மூலமா ஒரு சத்திரம் கிடைச்சுடுத்து — 'குடிக்க காப்பி வேண்டு' மென்று சைகையில் காட்டினான்.

அவன் மனைவி கமலி காப்பி கொண்டு வர உள்ளே சென்றாள்.

''சத்திரம் எங்கே அண்ணா கிடைச்சுது?''— தங்கை சுமதி கேட்டாள்.

''அம்பத்தூரிலே...

''அம்பத்தூரிலா?... ரொம்ப தூரமாச்சே அண்ணா'' — தொய்ந்த முகத்தோடு கேட் டாள் சுமதி.

''என்னா... அம்பத்தூரிலேயா சத்திரம் பாத்திருக்கேள். ரொம்ப கஷ்டமாச்சே. சாமான்களெல்லாம் இங்கேருந்து அவ்வளவு தூரத்துக்கு எடுத்துண்டு போகணும். சம்பந்தி ஆத்துலே வேற அவாளுக்கு போக்வரதுக்கு கஷ்டமாயிருக்குமே?'' என்று கேட்டுக் காப்பி யோடு வந்து நின்றாள் கமலி.

''நான் என்ன பண்ணட்டும்? டிமாண்டு. ஏதோ இதாவது கிடைச்சதே.''

—பெருமூச்சு விட்டான் நாகராஜன்.

''என்னா. சத்திரம் நன்னா இருக்குமா? எங்களையெல்லாம் கன்ஸல்ட் பண்ணாமலேயே நீங்க பாட்டுக்கு ஃபிக்ஸ் பண்ணிண்டு வந்துட் டேளே. ரூமெல்லாம்...'' இழுத்தாள் கமலி.

''ஆமாமாம். உங்களையெல்லாம் வந்து கன் ஸல்ட் பண்ணிண்டு ஃபிக்ஸ் பண்ணணும்னா, இந்த வருஷம் இல்லே. அடுத்த வருஷத்துலே கூட சத்திரம் கிடைக்காது. ஏதோ ஒண்ணும் இல்லாததுக்கு இதாவது கிடைச்சதேன்னு நான் சந்தோஷப் பட்டுண்டு இருக்கேன்'' — லொட்டென்று ஆத்திரத்தோடு காப்பி டம் ளரைக் கீழே வைத்தான் நாகராஜன்.

''அடடா! ஏன் இப்படிக் கோவப்பட றேன்னு தெரியலையே. நாங்க இப்ப என்ன தப்பாச் சொல்லிட்டோம்னு, ருத்ர தாண் டவம் ஆடறேள்...'' — கமலி.

''சரி... விடுங்க மன்னி. அண்ணா... நீ சம்பகம் மாமியைப் போய்க் கேக்கலையா?'' — பரிதாபமாகக் கேட்டாள் சுமதி.

''போகலே... போகலே... போகலே...'' — கோபத்தோடு பையைக் கீழே போட்டான் நாகராஜன்.

''பதில் சொல்லாம கோபப்பட்டா என்ன அர்த்தம்? இத்தோட எல்லாம் முடிஞ்சு போச்சா, இன்னும் எவ்வளவோ இருக்கே? சரி, அது இருக்கட்டும். சத்திரமெல்லாம் எப்படி?''

''ஒரு பெரிய ஹால்... அதுலதான் முகூர்த்தம். ஹாலுக்கு ரெண்டு பக்கமும் ரெண்டு ,ரூம். பின்னாலே ரெண்டு பாத்ரூம். ரெண்டு லெட்ரின், அதுக்குப் பின்னாலே சைட்லே சமையலுக்காக அவாளே கொட்டா போட்டிருக்கா. கிணறு, பம்பு வசதி எல் லாமே இருக்கு. ஜான வாசத்துக்குக் கூட ரொம்ப தூரம் போக வேண்டாம். பக்கத்தி லேயே ஒரு சிவன் கோவில் இருக்கு.''

''அது சரி... மாப்பிள்ளை ஆத்துக் காரா ளுக்கு ஒரு ரூம் போறுமா?''

''ஏன் போறும, பெரிய ரூம். இதோ இந்த ரூமைப் போல ரெண்டு பங்கு. மாப் பிள்ளையும் சரி, அவா அம்மா, அப்பா, சொந்தக்காராளும் சரி, ரொம்ப அட்ஜஸ்ட் டிங் மெண்ட்டாலிட்டியோட இருக்கறவா. அசௌகரியங்களைப் பத்தியெல்லாம் எதுவும் நினைச்சுக்க மாட்டா.''

''அது சரி... மாப்பிள்ளைக்கு ஒரு ரூம். நமக்கு ஒரு ரூம்... ஸ்டோர் சாமான் களுக்கு?''

''அதைப் பத்திக் கவலைப்படாதே. பின் பக்கம் கொட்டாயிலேயே சாமானெல்லாம் வச்சிண்டு, நம்ப பிச்சாமியைக் காவல் போட் டுட்டாப் போச்சு. ஆமாம். சமையல்காரர் வரேன்னாரே... வந்தாரா?''

''வந்தார். லிஸ்ட் கூட கொடுத்துட்டுப் போனார். ஏதோ அவசர வேலையா வெளியூர் போறாராம். அடுத்த வாரம் வந்து உங்களைப் பார்க்கறேன்னார்.''

''அண்ணா... சத்திரத்துக்கு எவ்வளவு வாடகை?'' — சுமதி.

''ஒரு நாளைக்கு நூறு ரூபாயம்மா.''

''அவ்வளோ தூரத்திலே இருக்கிற துக்கா?''

''திருப்பித் திருப்பி அதுக்கே வரேளே'' —சலித்துக் கொண்டான் நாகராஜன்.

''சரி... சரி... எங்க ஆதங்கம் நாங்க கேக் கறோம். உங்களுக்கு ஏனோ 'புஸ்'ன்னு கோபம் வரது. அதுசரி, அத்திம்பேர் கிட்ட பேசிப் பணத்துக்கு ஏற்பாடு பண்ணிட்டேளா?''

''அதுக்குத்தான் இப்போ கிளம்பிண்டிருக் கேன்.''

''கையிலே பைசா இல்லே. என்ன பண்ணப் போறேமோ தெரியலே. திருப்பதிக்கு கூட முடிஞ்சு வச்சுட்டேன்.''

''சரி... சரி... நடக்கறது நடக்கட்டும். ரெண்டு வாலுங்களும் எங்கே?'' — கடைசி இரு தங்கைகளைப் பத்திக் கேட்டான் நாகராஜன்.

''ஏதோ தமிழ் சினிமாவாம் டிவியிலே. அதைப் பாக்கறதுக்குத்தான் போயிருக்குங்க...''

''சரி... சரி... நான் கிளம்பறேன்'' — கையில் இடுக்கிய தோல் பையுடன் கிளம்பினான் நாகராஜன்.

ஹையர் செகண்டரி பள்ளி ஒன்றில் ஆசிரியராய்ப் பணி புரிபவன் நாகராஜன். வயது வந்த ஒரு தங்கை, எலிமெண்டரி ஸ்கூலில் படிக்கும் இரு தங்கைகள், தன்னையே நம்பி வந்து அடைக்கலமாகியிருக்கும் மனைவி. இவர்களோடு வாழ்க்கையில் எதிர் நீச்சலடிப்பவன். சேமிப்பு என்று ஒரு பைசா கூட சேர்த்தறியாதவன். பண்டிகை நாட்களுக்காகவும், அவ்வப்போது எதிர்ப்படும் கடன்களுக்காகவும், தன்னுடைய பிராவிடண்ட் ஃபண்ட் சேமிப்பைக் கூட வழித்தெடுத்து விட்டுத் திண்டாடுபவன்.

சின்ன வயதிலிருந்தே கஷ்டத்தைத் தவிர எதையும் பார்த்தவனில்லை. தங்கை பெரியவளாகிக் கல்யாணத்துக்கு நின்றபோது தான், அவனுடைய மனச்சுமையின் பளு கூடியது. சுமதியின் அழகில் சொக்கிய இளைஞன் பிரபு, தன்னுடைய அப்பா, அம்மாவோடு பெண் கேட்க வந்து விட்டபோது, அவனுடைய சுமை அவனை மேலும் அழுத்தி விட்டது.

எந்தவிதமான ஃபார்மாலிடீஸும் அவர்களுக்குக் கிடையாது. வர தட்சிணையும் வேண்டாம். ரொம்ப 'ஸிம்பிளாய்' ஏன் கோவிலில் வைத்துத் தாலி கட்டினால் கூட சரி. மாப்பிள்ளை தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் க்ளார்க். ரொம்பவும் சாதுவான பையன். இது வேண்டும், அது வேண்டும் என்று எதுவும் கேட்கவில்லை.

நாகராஜனுக்குப் புதிய தெம்பு பிறந்தது. இந்த இடம் ரொம்ப நல்ல இடம். என்னதான் இருந்தாலும் கடன் பட்டுத்தானே ஆக வேண்டும். அதனாலே இந்த இடத்தை நழுவ விடக்கூடாது என்று முடிவு செய்தான்.

எல்லோரிடமும், கையேந்தி நின்றான். சிலர் கொடுப்பதாய்ச் சொன்னார்கள். மற்றவர்கள் கையை விரித்து விட்டார்கள். அவனுடைய மாதச் சம்பளத்திலிருந்து ஐம்பது ரூபாயை எடுத்து அட்வான்ஸ் கொடுத்து விட்டான். ஃபிராவிடண்ட் ஃபண்டில் மீதி



மிருந்த ரூபாயை வழித்தெடுத்து நகைகளுக்கு ஆர்டர் கொடுத்து விட்டான். மளிகைக் கடைக்காரரிடம் கடனாக மளிகைச் சாமான்கள் வாங்க ஏற்பாடு செய்து விட்டான்.

கடன் கொடுப்பவன் வீட்டுக்கு நடையாய் நடக்கலானான். இன்னும் கல்யாணத்துக்குச் சரியாக ஒரு மாதம் தான் இருக்கிறது.

ஜானவாசத் தன்றைக்குக்கூடத் தங்களைச் சத்திரத்துக்கு அழைத்து வர யாரும் வரவேண்டாமென்று பெரியவர் சொல்லி விட்டார்.

அவர்களை மூன்று டாக்ஸியில் வந்து இறங்கினார்கள். நாகராஜன் தான் மட்டுமே ஒண்டியாக, ஓடியாடி, கல்யாண வேலைகளைக் கவனித்து வந்தான். சம்பந்தி வீட்டார் பெருந் தன்மையானவர்கள் என்பதால் எப்போதாவது அந்தப் பக்கம் வரும்போது மட்டும் அவர்களைக் கவனித்துக்கொண்டான். பெரியவர், அவனைத் தட்டிக் கொடுத்து உற்சாகமூட்டினார்.

ஜானவாசமெல்லாம் முடிந்து அன்றைய சடங்குகள் தீர்ந்து, பாதிப் பேருக்கும் மேல் சாப்பிட்டு முடித்து விட்டிருந்தார்கள். சத்திரம் ஒரே சந்தடியாய்க் கலகலத்திருந்தது.

திடீரென்று சம்பந்தி வீட்டார் ரூமிலிருந்து ஒரே சத்தம். ''கமலி ஒருவேளை அவாளுக்கு வெற்றிலை, தாம்பூலம் கொடுக்க மறந்துட்டாளோ?'' என்று எண்ணிய நாகராஜன், அறையில் நுழைந்தான்.

அங்கே —

''என்னடா இது? புதுசா இருக்கே. நான் எவ்வளவோ கல்யாணத்தைப் பார்த்தவன் தெரியுமா? பொண்ணு வீட்டுக்காரன், ஒரு உபசாரத்துக்காக வந்து நம்பளை நேரவே வந்து சத்திரத்துக்கு அழைச்சிண்டு வரமாட்டாளோ? ஹூம்... அதுசரி, விடு, சம்பந்தி மனுஷாளை இங்கே கவனிக்கறதுக்கு ஒரு ஆள் கிடையாது.''—ஜரிகை அங்க வஸ்திரம், வாயில் குழையும் வெற்றிலை பாக்கோடு ஒருவர் கத்திக் கொண்டிருந்தார்.

''அட நீயாவது பிள்ளைக்கு மாமா. இதோ மாப்பிள்ளையோட ஃப்ரெண்ட்ஸெல்லாம் வந்திருக்காளே. அவாளைக்கூடவா கவனிக்க ஆளில்லே?''— ஒரு ஜிப்பாக்காரர்.

''சாப்பாடு... வாயிலே வைக்க வழங்கலே. தண்ணி கூட ஒரே ஈஸ்ட்மென் கலர் மாதிரி இருக்கு...'' — கடுக்கன்காரர் பொறிந்தார்.

வாசலில் தட்டோடு நின்றிருந்த நாகராஜனுக்குத் தலையே சுற்றியது.

மெல்ல அந்த ரூமை எட்டிப் பார்த்தான்.

''ஏதோ... அப்பா, அம்மா இல்லாத பொண்ணுச்சேன்னு, அவ, அண்ணக்காரன் ஏதோ சாதாரண டீச்சராச் சேன்னு, போனால் போறதுன்னு, பெருந்தன்மையா இருந்தா, இத்தனூண்டு சத்திரத்தை, இவ்வளவு தூரத்திலே ஏற்பாடு பண்ணி, ஒன்னுமே இல்லாம கல்யாணத்தைப் பண்ணி... எல்லாம் அந்த மடையனலே வந்தது'' —பிரபுவின் அப்பா!

''ஏதோ பெருந்தன்மையா, எங்களுக்குச் சம்பிரதாயமெல்லாம் கிடையாதுன்னு பேசக்குச் சொன்னா, அதை அப்படியே எடுத்துண்டு, ஏன்னு ஒரு வார்த்தை கூடக் கேக்க மாட்டேங்கிறேளே?'' பிரபுவின் அம்மா!

இடிந்து போய் உட்கார்ந்து விட்டான் நாகராஜன். எவ்வளவு பெருந்தன்மையான மனிதர்கள் என்று நினைத்தான். இப்போது புரிந்து விட்டது. எல்லாம் வேஷதாரிகள். இரவெல்லாம்தான் கேட்ட அந்த சம்பாஷணைகளையே நினைத்தவாறிருந்தான் நாகராஜன். கடவுளே! மாப்பிள்ளையாவது நல்ல மனமுடையவராய் இருக்க வேண்டுமே?

கமலி அதிகாலையில் பரபரவென்று பறந்தாள். மணப்பெண்ணுக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்ட ஏற்பாடு செய்தாள். நாகராஜன் முந்திய தினத்தில் நடைபெற்ற சம்பவங்களின் நினைவோடு பால் வாங்க ஓடினான். பால் கேனைக் கொட்டகையில் வைத்து விட்டு வரும்போது, பிரபுவும், நண்பர்களும் பேசிக் கொண்டிருந்தது கேட்டது.

''டேய் பிரபு, பாவம்டா நீ. மாப்பிள்ளையைக் கவனிக்கிறதுக்கே ஆளில்லே. ராத்திரியெல்லாம் தலைவலின்னு சொன்னியே, 'ஏன்னு' கேக்க ஒரு ஆளில்லே. நானேக்குப் பாரேன். உன் பெண்டாட்டி வீட்டுக்குப் போனவுடனே, உன்னை மாவாட்டச் சொல்லப் போறாங்க.''

''அட நீ வேற சும்மா இருடா. அவனுக்கு ஃபார்மாலிடீஸெல்லாம் கிடையாதுடா.''

''எதுக்கு மாவரைக்கவா?'' — சிரிப்பு.


''சும்மா இருங்கடா... தாலி கட்டினவுடனே தாண்டா உங்களுக்குப் புரியும், இந்தப் பிரபு யாருன்னு. அப்ப, ஆட்டி வைக்கிறேன் பார்'' — பிரபு.

''சபாஷ்டா! அப்பத்தான் நீ ஆம்பிளை.''

—நாகராஜனுக்கு உலகம் தலைகீழாய்த் தெரிந்தது. கண்கள் சொருகிக் கொண்டன.

''டும்...டும்...'' என்று வேகமாய் அதிர்ந்த மேளம் அவனை உலுக்கி விட்டது.

பசுத்தோல் போர்த்திய அந்தப் புலிகள் தங்களை மெதுவாய் இனங்காட்டிக் கொள்ள ஆரம்பித்து விட்ட அந்த நேரத்தில், அந்த மிருகங்களைப் பற்றி எதுவும் அறியாதவளாய், கமலி, அந்தப் புது உறவின் மகிழ்ச்சியை நினைத்தவாறு மாலையோடு காத்திருக்கிறாள்!



படத்தைப் பார்த்தால் என்ன நினைவு வருகிறது? ''பாரிஸிலுள்ள ஈஃபெல் கோபுரம்'' என்பீர்கள். ரொம்ப சரி, ஆனால் அத்துடன் வேறு ஒன்றும் ஞாபகம் வரவேண்டும். தெரியவில்லையா? 48ம் பக்கம் பார்க்கவும்.

பரிபூரணவாதியின் பேரானந்தம்

அதிகப்படியான புதுத் தன்மை மிகத் தூய்மையான மூலப்பொருள்கள்.

உன்னதமான சுவை.



குவாலிடி மாரி பிஸ்கோத்துகள் பல சோதனைகளால் சுத்தமும் சத்தும் உறுதி செய்யப்படுகின்றன. நுட்பமான யந்திரம் பிசைந்த மாவை 25 மி.மீ. கனமுள்ள காகிதம் போல் ஆக்குகிறது. அது 3 மி.மீ. கனத்திற்கு மாற்றப் பட்டு அச்சுகளில் வடிவம் பெறுகின்றது. நுட்பமான உலையில் அவைகள் ஓரே சீரான பொன் நிறத்தில் பக்குவம் ஆகின்றன. மிகவும் லேசு — மிகவும் கரகரப்பு. நாலு உறைப் பாக்கெட்டுகள் புதுமையைக் காப்பாற்றுகின்றன. குவாலிடி மாரி சிறந்த தயாரிப்பாளர்களிடம் பெற்ற பரிபூரணப் பயிற்சியால் தயாரான பரிபூரண பிஸ்கோத்துகள்.



குவாலிடிஸ் மாரி பிஸ்கோத்துகள்


சத்து நிறைந்த சிற்றுண்டி.

IS 1011

குவாலிடி உயர்தர பிஸ்கோத்துகளைத் தயாரிக்கிறது.

குவாலிடி உணவுப் பண்டங்கள்
பெங்களூர்-560 039.

ASP-KFP-7901



திருமலை-திருப்பதி தேவஸ்தானம் திருப்பதி

ஒவ்வொரு நாளும் பக்தர்கள் அதிகநேரம் காத்திருப்பதைக் குறைப்பதற்கும், அதிக அளவு பக்தகோடிகள் ஸ்ரீ வேங்கடேசுவர சுவாமிகளைத் தரிசிப்பதற்கும் திருமலை திருப்பதி தேவஸ்தானம் திருமலைக் கோயில் தினசரி சேவா நேரத்தை மாற்றித் திருத்தியமைத்திருக்கிறது. இந்தத் திருத்தப்பட்ட சேவா நேரங்கள் கோவிலில் ஆகம பண்டிதர்கள் அர்ச்சகர்கள், ஜீயங்கார்கள் அனைவரது ஒப்புதலையும் பெற்று இப்பொழுது அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

எல்லா நாட்களிலும்	சுப்ரபாதம்	காலை 3 மணி முதல் 3.30	
எல்லா நாட்களிலும்	விஸ்வரூப தரிசனம்	காலை 3.30	விசேஷ டிக்கட் ஒரு நபருக்கு ரூ 25.
வெள்ளிக் கிழமை தவிர மற்ற எல்லா நாட்களிலும்	தோமலா சேவை	காலை 4.30	அனுமதி: அமந்தரனேத் சவா டிக்கட் உள்ள வர்களுக்கு மாத்திரம்
,,	அர்ச்சனை மற்றும் நைவேத்தியம்	காலை 5.30	
ஞாயிறு திங்கள் செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகளில்	சர்வ தரிசனம்	காலை ஆறு மணி முதல் நள்ளிரவு 12 மணிவரை பகல் 12.30க்கு இரண்டாவது நைவேத்தியத்துக்கும் மற்றும் இரவு 8 மணிக்கு இரவு கைங்கரியத்துக்கும் இடைவேளை	இலவசம் மற்றும் ரூ 25 - டிக்கட் உள்ளவர்களுக்கும் அனுமதி
புதன்கிழமை	சகஸ்ர கலச அபிஷேகம்	காலை 6 முதல் 8 மணி	ஆர்ஜித சேவை
	சர்வதரிசனம்	காலை 8 முதல் நள்ளிரவு 12 வரை இரவு 8 மணிக்கு இரவு கைங்கரியத்துக்காக இடைவேளை	இலவசம் மற்றும் ரூ 25 டிக்கட் உள்ளவர்களுக்கும் அனுமதி
வியாழக்கிழமை	திருப்பாவாடை	காலை 6 முதல் 8 மணி	ஆர்ஜித சேவை
	சர்வதரிசனம்	காலை 8 முதல் நள்ளிரவு 12 மணி வரை இரவு 8 மணிக்கு பூலங்கி சேவைக்கும் இரவு கைங்கரியத்துக்கும் இடைவேளை	இலவசம் மற்றும் ரூ 25- டிக்கட் உள்ளவர்களுக்கும் அனுமதி
வெள்ளிக்கிழமை	அபிஷேகம்	காலை 6 முதல் 8 மணி	ஆர்ஜித சேவை
	அலங்காரம் தோமல சேவை அர்ச்சனை மற்றும் இரண்டாவது நைவேத்தியம்	காலை 8 மணி முதல் 10 மணி வரை	தனிப்பட்டவர்களுக்கு
	சர்வதரிசனம்	காலை 10 மணி முதல் நள்ளிரவு 12 மணிவரை இரவு 8 மணிக்கு இரவு கைங்கரியத்துக்கு இடைவேளை	இலவசம் மற்றும் ரூ 25- டிக்கட் உள்ளவர்களுக்கும் அனுமதி
எல்லா நாட்களிலும்	ஏகாந்த சேவை	பகல் 12.30 மணிக்கு	அமந்தரனேத்சவா டிக்கட் உள்ளவர்களுக்கு மட்டும் அனுமதி
உத்சவ நாட்களைத் தவிர மற்ற எல்லா நாட்களிலும்	கல்யாண உத்ஸவம்	பகல் 12.30 மணிக்கு	ஆர்ஜித உத்ஸவம்

மற்ற ஆர்ஜித உத்ஸவங்களுக்கு நேரத்தில் மாற்றம் இல்லை.

P.V.R.K. பிரசாத் I.A.S.
எக்ஸிக்யூடிவ் ஆபீசர்
திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

SUBRA & FAMS TTD: 359

மத்வர் மதுரமொழி

(சங்கர ராமானுஜர்களின் உபதேசங்களில் சில முன்னிதழ்களில் பார்த்தோம். இங்கு ஸ்ரீ மத்வச்சாரியாரின் நல்லுரைகளில் கையளவு காணலாம். சாஸ்திரப் பிரமாணம், ஜீவனின் சுதந்திர முயற்சி குறித்த முதலிரு விஷயங்களில் மும்மதாசாரியர்களும் ஒரே குரலில் பேசுவது கவனிக்கத் தக்கது.)

ஓர் அடிப்படையின் மீதே கருத்துக்கள் உருவாக்கப் படுகின்றன. அடிப்படையை மறுத்து ஒரு முடிவுக்கு வர முடியாது. புலனால் அறியும் பிரத்தியக்ஷ உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு பாரமார்த்திகக் கருத்துக்களை உருவாக்கும் போது புலனறிவுக்கு மாறான முடிவுக்கு வருவதை ஒப்புவதற்கில்லை. ஆனால் வேத சாஸ்திரங்கள் மட்டுமே தெரிவிக்கக் கூடிய விஷயங்களும் உண்டு. இவற்றில் அடிப்படையாகவும் சாஸ்திரம் கூறியதைத் தான் கொள்ள வேண்டுமேயன்றி நாம் பிரத்யக்ஷத்தில் அறிவதை அல்ல. (''அநுவியாக்யானம்.'')

ஜீவன் செயற் சுதந்திரம் உள்ளவனே. அல்லாவிடில், அவன் இன்னின்ன லக்ஷியங்களை அடைய இன்னின்ன உபாயங்களை மேற்கொள்ள வேண்டுமென்றும், இன்னின்னவற்றைத் தவிர்க்க வேண்டுமென்றும் கூறுவதற்காகவே ஏற்பட்ட சாஸ்திரங்களுக்கு இடமில்லை! (''ஸூத்ர பாஷ்யம்!'')

பக்தியோடும் ஞானத்தோடும் பற்றில்லாமலும் சாஸ்திர கர்மாக்களை அனைவரும் புரிய வேண்டும். (''கர்ம நிர்ணயம்.'')

இறைவனது அருட்பிரஸாதத்தாலே ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை கிடைக்கும். சாஸ்திரங்களைச் சிரத்தையோடு பயின்று, அவ்வழி ஆய்ந்து சிந்தித்து இறைவனைப் பக்தியுடன் தியானம் புரிவதால் திவ்ய தரிசனம் பெற்றோருக்குத்தான் இப்பிரஸாதம் வழங்கப் படுகிறது. (''அநுவியாக்யானம்.'')

வெளிப்படத் தெரியாதவனான பகவான் தன் அருட்சக்தியாலேயே உபாஸகனுக்குத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறான். அவன் இவ்விதம் செய்ய மனம் கொண்டாலன்றி, அனைத்துக்கும் பிரபுவான அவனை எவர் எங்ஙனம் காண முடியும்? (''ஸூத்ர பாஷ்யம்'')

ஆண்டவனின் பெருமைகளை அறிவதால் மற்ற எல்லாவித அன்புகளையும் விட உயர்ந்த அசைக்கவொண்ணாத ஒட்டுதல் அவனிடம் உண்டாகிறது. இதுவே பக்தி. இதுவன்றி முக்திக்கு வேறு உபாயமில்லை. (''மஹாபாரத தாத்பர்ய நிர்ணயம்.'')

ஒருவனுக்கு இறைவனிடம் முதலில் ஒருவித பக்தி (அன்பு) ஏற்பட்டுத்தான் அவனை அறியப் புகுகிறான். அறிந்தபின், அதனாலேயே பக்தி முற்றுகிறது. முற்றிய பக்தி கொண்டு திவ்ய தரிசனம் (சொந்த அநுபவம்) பெறுகிறான். இதனால் பக்தி மேலும் கனிகிறது; முக்தியிலேயே சேர்த்து விடுகிறது. முக்தி பெற்ற பின்னும் பேரானந்தம் என்னும் உருவில் பரம உத்தமமான பக்தியநுபவமே நிற்கிறது. (''அநுவியாக்யானம்.'')

ஹரியை பக்தியோடு வழிபடுவது எந்நாளும் மாறாப் பேரின்ப நிலை. அது வேறெதற்கோ உபாயமல்ல; அதுவே முடிந்த முடிவு. (''ஸூத்ரபாஷ்யம்.'')

ஐந்து வித பேதங்கள் நிரந்தரமானவை என மத்வர் கூறுவார். இவை: (1) பரமாத்ம ஜீவாத்ம பேதம் (2) ஜீவாத்மாக்களிடையே பரஸ்பர பேதம் (3) பரமாத்மாவுக்கும் ஜட வஸ்துக்களுக்குமுள்ள பேதம் (4) ஜீவர்களுக்கும் ஜட வஸ்துக்களுக்கும் உள்ள பேதம் (5) ஜடப் பொருட்களுள்ளேயே ஒன்றுக்கொன்றுள்ள பேதம். இந்தப் பஞ்ச பேதம் முக்யமாயிருப்பதாலேயே ''பிரபஞ்சம்'' என்ற பெயர் ஏற்பட்டது என்பார். ஆயினும் பேதமுற்ற அனைத்தையும் ஒரே பரமாத்மனே ஆதாரமாயிருந்து ஆட்சி புரிவதால் அனைத்திடமும் அன்பெனும் தொடர்பு உண்டாகிறது என்று கட்டிக் காட்டுகிறார். ''நமது பிராணனும், புத்தியும், மனமும், ஆத்மாவும், சரீரமும், பிள்ளை குட்டிகளும், சொத்து சுதந்திரங்களும் அவனொருவனின் தொடர்பிலேயே நமக்குப் பிரியமாகின்றன. இவ்வாறெனில் இத்தனை பிரியத்துக்கும் ஆதாரமான அவனைவிட நமக்குப் பிரியமானவர் எவர் இருக்க முடியும்?'' என்பார். (''அநுவியாக்யானம்.'')

அவரவர் பக்குவத்துக்கேற்ப, ஹரியைப் புறத்தில் விக்ரஹம் முதலியவற்றிலோ, அகத்தில் உறையும் அந்தர்யாமியாகவோ, அகம் புறம் எங்கும் நிறைந்த அகண்டமாகவோ உபாஸிக்க வேண்டும். (''ஸூத்ர பாஷ்யம்.'')

—தொகுப்பு: ரா. கணபதி

சமரசப் போக்கு சுருக்கிவிடும்!

"நல்லதைச் செய்ய எப்போதுமே தடங்கல்கள் ஏற்படத்தானே செய்யும்?'' இப்படி ஆரம்பித்தனர் டைரக்டர்கள் தேவராஜ் — மோகன். மேலும் தொடர்ந்து அவர்கள் பேசினர்: ''உறவு சொல்ல-ஒருவன்'' மராட்டியில் வெளியான ஒரு படம்தான். ஆனால் படத்தின் கடைசி கால் பாகக் கதையை மாற்றிவிட வேண்டும் என்று முடிவு செய்தோம். பல பேருக்கு இந்தக் கதை பிடிக்கவில்லை. யாரும் எங்களுக்கு உதவ முன்வரவில்லை. கடைசியில் பஞ்சு அருணாசலம் அவர்களிடம் இந்தக் கதையைக் கூறினோம். நாங்கள் யோசித்து வைத்திருந்த மாற்றத்தையே அவரும் குறிப்பிட்டார். மூவருமே உட்கார்ந்து திரைக் கதையை அமைத்துச் சீக்கிரமாகப் படத்தை எடுத்துமுடித்தோம்.''

''இதே படம் வேறு நடிகர் நடிகைகளுடன் முதலில் எடுக்கப் பட்டதாமே?''

''உண்மைதான். முதலில் ஒரு தயாரிப்பாளர் இந்தப் படத்தை எடுக்க ஆரம்பித்தார். ஆனால் பல்வேறு தடங்கல்கள் காரணமாக அது நின்று போயிற்று. ஒரு நல்ல படத்துக்கு இப்படித் தடங்கல்கள் ஏற்படுகிறதே என்ற வருத்தம் எங்களுக்கு. பிறகு பஞ்சு அவர்கள் தயாரிக்கும் பொழுது அப்பொழுது புகழ் பெற்றிருந்த நடிகர் நடிகைகளை வைத்துத் தயாரித்தோம்.''


''கடைசி கால் பாகத்தை மாற்றியதாகச் சொன்னீர்களே, அது என்ன?''

''மராட்டி படத்தின் கதை: ஒரு ஏழைப் பெண் — நர்ஸ் — பெரிய பெரிய ஆசைகளில் மிதந்து பகல் கனவு காணுகிறாள். அவளுக்கு ஒரு காதலன். நர்ஸாக இருக்கும் இவள் ஒரு பணக்கார இளம் பெண்மணிக்கு உடல்நிலை சரியில்லாததால் அவர்கள் வீட்டிலே தங்கி அந்தப் பெண்ணைப் பேணிப் பாதுகாத்துவருகிறாள். அந்த வீட்டிலேயே தன் காதலனுக்கு ஒரு வேலையும் வாங்கித் தருகிறாள். பணக்கார அந்த இளம் பெண்ணோ தன் நர்ஸினுடைய காதலனையே காதலிக்கிறாள். பங்களா, கார், பணம், படாடோபம், நகைகள், இவைகள் மீது ஆசைப்பட்ட ஏழை நர்ஸ், தான் பேணிக் காத்து வரும் உடல்நிலை சரியில்லாப் பணக்காரப் பெண் இன்னும் ஆறு மாதத்தில் இறந்து விடப் போகிறாள் என்ற காரணத்தினாலும், தன்னுடைய காதலன் அவளைத் திருமணம் செய்து கொண்டால் அவள் இறந்த பிறகு அந்தச் சொத்துக்களெல்லாம் அவன் வழியாகத் தனக்கு வந்து சேரும் என்ற நினைப்பிலும் தன் காதலன் அவளைத் திருமணம் செய்து கொள்ள வற்புறுத்துகிறாள். கல்யாணம் நடக்கிறது. இதுதான் படத்தின் முக்கால் கதை மீதியுள்ள கால் கதையில் தான் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. மராட்டிக் கதையில் 'உங்கள் மனைவியை யாருக்கும் தெரியாமல் கொன்று விடுங்கள். ஏனென்றால் அவள் இறந்து விடுவாள் என்று நான் நினைத்தது பொய்யாகி வருகிறது. அவளது உடல் நன்கு தேறி வருகிறது' என்கிறாள் காதலி, காதலனிடம். இது யதேச்சையாக டேப்பில் பதிவாகி விடுகிறது. சதி வெளிப்பட்டு விடுகிறது. ஆனால் தமிழில் ஏழை நர்ஸ் தன் காதலனைப் பார்த்து 'இப்போது என்ன செய்யலாம் அவள் உடல் தேறி வருகிறதே' என்று கேட்க, 'இப்பொழுது நான் அந்தப் பணக்காரப் பெண்ணின் கணவன். அவளைப் பாதுகாக்க வேண்டியது என் கடமை' என்று அவன் கூறுகிறான். காதலனாலும் கைவிடப்பட்டு ஆசைப்பட்ட பொருளும் கிடைக்காமல் நர்ஸ் கடற்கரையை நோக்கி ஓடுகிறாள். அப்பொழுது இவளால் முன்பு வெறுத்து ஒதுக்கப்பட்ட ஓர் ஏழை இளைஞன் இவளைக் காப்பாற்றிக் கரம் பிடிக்கிறான். இந்த வித்யாசந்தான் இந்தப் படத்தை வெற்றிப் படமாக்கியது என்று கூடக் கூறலாம். ஆசை வயப்பட்ட அந்த ஏழைப் பெண் ஆசைப்படும் பொழுதெல்லாம் ஸவுண்ட் எஃபெக்ட் முறையில் எதிரொலியுடன், 'ஆசை! ஆசை!' என்று பின்னணியில் குரல் ஒலிக்கச் செய்தோம்.''

''இரண்டு பேர்கள் இணைந்து இயக்குவது சிரமமாக இல்லையா?''

''இல்லை, ஒருவரை ஒருவர் புரிந்துகொண்ட நண்பர்கள் இணைந்து இயக்குவதில் லாபமே இருப்பதாக நாங்கள் நினைக்கிறோம். விவாதங்கள் நல்ல பலனைத் தரும். அதோடு எங்

✖ உறவு சொல்ல ஒருவன் படத்தில் சிவகுமார், பத்மப்ரியா





✖ முத்துராமன், சுஜாதா

களில் ஒருவர் தவறுசெய்து விட்டாலும் மற்றவர் கண்டு பிடித்துத் திருத்தி விடலாம் இல்லையா?''

''மக்கள் ரசனையை நீங்கள் எப்படி முடிவு செய்கிறீர்கள்?''



தேவராஜ்-மோகன் பேட்டி

''மக்கள் விரும்புகிறார்கள் அதனால் செய்கிறோம் என்று சொல்வதெல்லாம் அபத்தம். நாங்கள் எப்பொழுதுமே எங்கள் விருப்பப் படிதான் படத்தை எடுக்கிறோம். ஏனென்றால் நாங்களும் மக்களில் இருவர்தானே! எங்களுக்கு எதெது பிடிக்கிறதோ அதுதான் மக்களுக்கும் பிடிக்கும்.''

''அப்படிப் படம் எடுத்தும் சில வெற்றியடையாமல் போகின்றனவே ஏன்?''

''அதற்குப் பல காரணங்கள் எந்த இயக்குனருமே தோல்விப் படம் எடுக்க வேண்டும் என்று விரும்புவதில்லை. ஆனால் வெற்றிப் படிகள் ஒவ்வொன்றிலிருந்தும் ஓர் இயக்குனர் செய்யும் ஒவ்வொரு சமரசமும் (Compromise) ஒவ்வொரு படி பின்னுக்கு அவரை விழச் செய்கிறது என்று நாங்கள் கருதுகிறோம்.

''இந்தப் படத்தை எல்லாப் பத்திரிகைகளும் பாராட்டின. அவற்றை ஓர் ஆல்பமாகத் தயாரித்துள்ளோம். எப்போதாவது மனச்சோர்வு ஏற்பட்டால் இந்த ஆல்பத்தைப் புரட்டுவோம். உறவு சொல்ல ஒருவன் படத்தையும் திரையிட்டுப் பார்ப்போம். புதுத் தெம்பு பிறக்கும்!''


பேட்டி: **சவன்**

நடத்துனர் இல்லாமல் ஓடிய பல்லவன்!

பஸ்ஸில் ஏறு முன்னர், ''என்னுடைய விசில் வரும்போது எங்கோ தவறி விழுந்து விட்டது. காணோம். கொஞ்சம் அட்ஜஸ்ட் செய்து கொள்'' என்று நடத்துனர் ஓட்டுனருக்குக் கூறினார்.

2.5.79 மாலை 6.30க்கு ஐஸ் ஹவுஸிலிருந்து புறப்பட்ட 29-D பஸ் இரண்டு மூன்று ஸ்டாப்புகளைக் கடந்ததும் என்ன காரணத்தினாலோ நடத்துனர் கீழே இறங்கி விட்டார். பஸ்ஸில் கூட்டம் அதிகமாக இருந்தது. நடத்துனர் கீழே இறங்கியதையோ, நடத்துனர் இல்லாமல் பஸ் புறப்பட்டதையோ யாரும் கவனிக்கவில்லை. இதற்குள் பஸ் மவுண்ட் ரோடு அருகில் வந்து விட்டது. ஒவ்வொரு ஸ்டாப்பிலும் வண்டி நின்றுதான் புறப்பட்டது. பிறகுதான் நடத்துனர் பஸ்ஸில் இல்லை என்பது தெரிந்தது. உடனே பஸ்ஸை ஓரமாக நிறுத்தி விட்டு ஓட்டுநர் கீழே இறங்கி விட்டார். பஸ்ஸில் இருந்து பெரும்பாலோர் இறங்கி விட்டார்கள். நடத்துனர் இறங்கிய இடத்திலிருந்து டிப்போவுக்குப் போன் பேசிவிட்டு அடுத்த 29-D யில் சுமார் முக்கால் மணி நேரம் கழித்து வந்தார். மேலும் கால்மணி நேரம் ஓட்டுனரும் நடத்துனரும், வார்த்தைகளைப் பரிமாறிக் கொண்டனர். பின்பு ஒருவழியாக பஸ்ஸைக் கிளப்பி சில முக்கியமான ஸ்டாப்களில் மட்டும் நிறுத்திச் சரியாக 8.30 மணிக்கு மூலக்கடைக்குக் கொண்டு வந்து சேர்த்தார்கள்.

- லட்சுமி பாண்டியன்



கனவா-நிஜமா? 22

கதை: வாண்டுமாமா
சித்திரம்: செல்வம்




இரண்டு இரவுகளும், இரண்டு பகலும் தொடர்ந்து பயணப்பட்ட அராமதேவரின் படைகள் மாயாபுரியின் எல்லையை நெருங்கிக் கொண்டிருந்தன.
அரசே! உங்கள் வேகத்தைச் சற்று மட்டுப்படுத்துங்கள். நம் படை வீரர்கள் பின் தங்கி விட்டார்கள்.
வேங்கைமார்பரே! என் வேகத்துக்கு ஈடுகொடுத்து வரும் வீரர்களே வெற்றியைத் தேடித் தருவார்கள். பின் தங்கும் பயந்தவர்களைக் கொண்டு நாம் முன்னேற முடியாது!
மூன்றாம் நாள் அதிகாலையில் மாயாபுரியின் படைகள், தார்த்தாரியர் முகாமிட்டுள்ள கணவாயை அடைந்தன.
குறுக்கு வழியாக வந்ததால்தான் விரோதிகளை முந்திக் கொண்டு அவர்களை வழி மறித்து வளைத்துக் கொள்ள முடிந்தது. இனி அவர்களைச் சுலபமாக விரட்டியடித்து விடலாம்.
பாலைவனத்து எலிகள் எனப் பெயர் பெற்ற தார்த்தாரியர்– வெற்றிக் கொண்டாட்ட மகிழ்ச்சியில் குடித்துக் கும்மாளமிட்டபடி குதூகலித்திருந்தனர் - வரப்போகும் ஆபத்தை அறியாதவர்களாக.
தொடரும்



13 வது நாள்

பி. ரங்கநாயகி

வைகை' எக்ஸ்பிரஸ் எழும்பூரிலிருந்து புறப்பட்டதும் அவன் தன் பாக்கெட்டிலிருந்து கர்சீப்பை எடுத்து ஒரு முனையில் பிடித்துக் கொண்டு லேசாக ஆட்டி விடை கொடுக்க ஆரம்பிப்பதற்குள் 'வைகை' கண் பார்வையிலிருந்து மறைந்து விட்டது.

அவள் போய் விட்டாள்.

அவளைச் சுமந்து கொண்டு வைகை போய் விட்டது.

இன்னும் பன்னிரண்டு நாட்கள் அவள் இருக்க மாட்டாள். ஏன் பன்னிரண்டு நாட்கள்?... பதின்மூன்று யுகங்கள் அல்லவா அவன் அவளின்றிக் கழிக்க வேண்டும்!

அவள் ஊருக்குப் போகப் போவது பத்து தினங்களுக்கு முன்பு முடிவான போது, இன்னும் பத்து தினங்கள் இருக்கின்றனவே என்றதோர் நிம்மதி இருந்தாலும், பத்து தினங்களுக்குப்பின், மணமான பிறகு, அவளை முதன் முதலாகப் பிரியப் போகிறோமே என்ற தவிப்பு அவனுள். ஏன் அவளுடைய உள்ளத்திலும்தான்!

அதன் எதிரொலியாய்ப் பிறந்த துடிப்பில் இளமைப் புள்ளிகளின் இழைகோலங்கள் தாம் எத்தனை வண்ணங்களில் அவர்களிடையே மலர்ந்தன!

பத்து நாட்களும் ஓடியே விட்டன.

அவளில்லாத அந்தப் பதின்மூன்று நாட்களும் அதே வேகத்தில் ஓடுமோ?

மணியைப் பார்த்தான்.

'வைகை' பறந்து போய் எட்டு நிமிடங்கள்தான் ஆகியிருந்தன. அதற்குள் மிகப் பெரியதோர் காலப் பிளவு உண்டாகி விட்டது போல் உள்ளத்தில் தோற்றமளிக்கிறதே!

அவள் தன்னை விட்டு விட்டுப் போய் எவ்வளவோ கால அளவு ஆனதுபோல் தோன்றினாலும் அவளுடைய உருவம் தன் முன்னாலேயே இருப்பது போன்றதொரு மனநிலையை உணர்ந்து கொண்டான்.

வழியனுப்ப வந்தவர்கள் தங்கள் தங்கள் இலக்குகளை நோக்கிப் போயாகி விட்டது.

அவனுடைய உள்ளத்தைப் போன்றே அந்தப் பிளாட்ஃபாரத்திலும் சூன்யம்.

பிறந்ததிலிருந்து திருமணம் செய்து கொள்ளும் வரை அவளைப் பற்றி எதுவுமே தெரியாமல் பிரிந்தே இருந்தது அவனுக்குப் பெரிதாகப் படவில்லை. திருமணமாகி ஆறு மாத காலம் இருவரும் ஒன்றாய் வாழ்ந்த பிறகு. அதுவும் தனிக் குடித்தனமாய் இருவரும் மட்டுமே வாழ்ந்த பிறகு, பெற்றவர்கள் வீட்டிற்கு அவள் போனதினால் வாழ்க்கையின் பிடிப்புகள் எல்லாமே போய் விட்ட சூன்யம் அவனுள்...!

மெதுவாகக் கிளம்பினான்.

அவனுடைய எண்ணங்களைப் பற்றியோ, மன உணர்வுகளைப் பற்றியோ கவலைப்படாமல் கால்கள் தாமாக நடந்து பஸ்ஸில் ஏறி அவனை வீட்டுக்குக் கொண்டு வந்து விட்டன.

கதவைத் திறந்து அவன் உள்ளே நுழைந்ததும் முதன் முதலில் அவனுடைய கண் பார்வையில் பட்டது குள்ளமான ஸ்டீல் கட்டில்தான். அதில் உள்ள பட்டு மெத்தைகளில் அவன் பார்வை படிந்து, அந்த நினைவுகளின் இனிமையும், தற்போதைய அவளில்லாத வெறுமையும் ஒருங்கிணைந்து இதயத்தை ஒரு வித வேதனையால் வருடின.

வாயிற் கதவைத் தாள் போட்டு விட்டு பாண்ட் சொக்காயைக் கூடக் கழற்றாமல் மெத்தையில் வந்து படுத்துக் கொண்டான்.

அவனையுமறியாமல் தூங்கிப் போனான்.

விழிப்பு வந்தபோது மாலைமணி நாலு ஐம்பது. பகல் தூக்கத்தின் விரக்தி மனப்பான்மை... கசகசப்பு...


அவள் ஊருக்குப் போயிருக்கிறாள் என்பது மறந்து போய்க் குரலெடுத்து அவளைக் கூப்பிட்டே விட்டான்.

பிறகுதான் ஒன்று ஒன்றாய் நினைவில் படர்ந்து 'வைகை'யில் அவள் ஊருக்குப் போய் விட்டதை உணர்ந்து கொண்டான்.

துக்க உணர்வையும், தூக்க உணர்வையும் சற்றே சற்றே விலக்கி எழுந்து குளித்தான். காப்பி சாப்பிட்டு விட்டு வர ஓட்டலுக்குக் கிளம்பினான்.

"என்ன பாகவதர் சார், பையனைப் போட்டு இப்படித் தாறுமாறு அடிக்கிறீங்க?"

"அப்படியொன்னும் தாறுமாறு அடிக்க மாட்டேங்க சார். எந்த தாளத்திலே அடிக்கணும், ஆதி தாளமா, ரூபக தாளமான்னு அவனையே கேட்டுத்தான் அடிக்கறேன்." ராமு.



மெயின் ரோடிற்கு அவன் வந்தபோது மாலைமணி ஐந்தரை. உத்தியோகம் பார்த்து விட்டு ஆண்களும் பெண்களும் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். இம்மாதிரி மாலை ஐந்தரை மணி அளவிற்கு இந்த ஆறுமாத காலத்தில் அவன் தனியாக வந்ததே இடையாது.

காப்பி சாப்பிடுவதற்காக ஓட்டலுக்குள் நுழையும் போதுதான் அவன் அந்தக் காட்சியைக் கண்டான்.

பிற்பகல் இரண்டு மணிக்கு 'வைகை'யில் ஊருக்குப் போன தன் மனைவி அங்கு எப்படி வந்தாள் என்று ஒரு கணம் அப்படியே அயர்ந்து போய் விட்டான்.

தனியார் நிறுவனம் ஒன்றின் ஊழியர்களுக்கான பஸ் வந்து நிற்கவும் அதிலிருந்து இரண்டு பெண்கள் இறங்கினர்.

இருவரில் சிவப்பு மணியில் போட்ட கைப்பையை வைத்திருந்தவளைக் கண்டதும்தான் அவனுக்கு அவள் தன் மனைவிதானோ என்று ஒரு மயக்கம்.

கிட்டத்தட்ட ஒரே வார்ப்பில் இரண்டு பெண்களா?

அவனுள் ஆச்சர்யம்... அதே சமயத்தில் அவனது உள்ளத்தில், உடலில் மனைவியைக் கண்டுவிட்ட மாதிரியான பரவசம்.

இவளுக்கும் இடது கன்னத்தில் குழி விழுகிறது.

மனைவி கழுத்தில் ஊஞ்சலாடும் தங்கக் கொடியும், கால் விரல்களில் மெட்டியும் இவளிடம் இல்லை.

கண்களை மீட்க முடியாமல் அவளைப் பார்த்தவாறு இருந்தான். அவனது பார்வையைக் கவனிக்காமல் அப்பெண் நேராகப் போய் ரயில்வே ஸ்டேஷன் போகும் தெருவில் திரும்பிவிட்டாள்.

வடம் பிடிக்க ஆள் இல்லாத தேர் போல் சற்று நேரம் நின்றவாறிருந்தான். ஆனாலும் அவனுள் சற்றுத் தெம்பு.



மனைவியின் பிரிவால் ஏற்பட்ட வெறுமையிலின்று, மனைவியின் சாயலை ஏறக்குறைய பெற்றிருந்த பெண் ஒருத்தியைக் கண்டதால், சற்று விடுபாடு.

மனைவியின் பதின்மூன்று நாள் பிரிவு ஒரு முழுக் கால அளவாய் ஒருமித்து ஆக்கிரமித்து அவனை வாட்ட முடியாது. மனைவியின் உருவ அமைப்பைக் கொண்ட சிவப்பு மணிப் பை நங்கையைத் தினமும் ஒரு தடவை



பார்த்து விட்டால் பிரிவு வேதனையின் தீக்ஷண்யம் நிச்சயம் குறைந்து விடும். காலக் கோளம் ஒருமித்து இராமல் இனி இடைவெளிகள் கிடைக்குமே!

அதோடு —

சிவப்பு மணிப்பையின் வருகைக்காக மனத்தை ஆட்படுத்திக் காத்திருக்கும் போது ஓடும் நாளைய ஓட்டம் மனைவிக்காகக் காத்திருக்கும் பதின்மூன்று நாள் கால ஓட்டத்தை நிச்சயம் விரைவாக்கும்!

சிவப்பு மணைப்பை மறுதினம் பச்சை மணிப்பையாக, அடுத்த நாள் வெள்ளை மணிப்பையாக, நீல மணிப்பையாக அந்தத் தனியார் நிறுவன ஊழியர் பஸ்ஸிலிருந்து இறங்கும் பெண்ணின் கையில் அவளது புடவைக்குப் பொருந்துவது போல மாறக் கண்டான். அதேமாதிரி அவளது நெற்றிப் பொட்டின் நிறத்தில், முத்துமாலை நிறத்தில், வாட்ச் ஸ்ட்ராப், நிறத்தில், சில தினங்களில் காலணியின் நிறத்தில், காதணியின் நிறத்தில் தலையில் பூவின் நிறத்தில் மாறுதல்கள் கண்டான். 'அழகாய் இருக்கிறாள்' என்று தன்னுள் பாராட்டிக் கொண்டான்.

அவனை அவள் இரண்டாவது தினமே கவனித்து விட்டாள். அவன் தன்னைக் கவனிக்கிறான் என்பதைக் கண்டதும், சற்று உயர்த்திய குரலில் ஆங்கிலத்தில் எதையோ தோழியிடம் பேசியபடி போனாள்.

தான் பேண்ட் போட்டுக் கொள்ளாமல் வேஷ்டி சட்டையுடன் இருந்தநிலையில் அவள் தன்னைப் பார்த்து விட்டதனால் அவனுள் சற்று கூச்சம்.

மறுநாள் கருப்பில் வெள்ளைக் கோடுகள் போட்ட ஸ்பன் டெரின் ஷர்ட்டை வெள்ளை டபின் நிட்டட் பெல்ஸினுள் இன்ஷர்ட் செய்து கொண்டு முகத்தில் லேசான சான்டல் வுட் பவுடர் பூச்சுடன் மிடுக்காகப் போனான்.

இவனைக் கண்டதும் மணிப்பைப் பெண்ணின் முகபாவத்தில், நடையில், பேச்சுத் தோரணையில் சில அதிகப்படிகள் கூடின.

தினமும் இப்படித்தான்.


தான் செய்வது தவறோ! மனைவியை விடுத்து வேறொரு பெண்ணை இப்படிக் காத்திருந்து பார்த்து, ரசித்து, ஆத்ம திருப்தி அடைகிறோமே என்று அவனுள் சற்றுக் குற்ற உணர்வு.

ஒருத்தி: அவ ரொம்ப சாமர்த்திய சாலி.

தோழி: எப்படிச் சொல்றே?

ஒருத்தி: நேற்று, இட்லி, பூ போல இருக்கு என்று சொன்னேன் தலையில் வைத்துக் கொண்டு போய் விட்டாள்!

எஸ். சந்திரசேகர்.



இந்தப் பெண்ணை, மனைவியின் சாயலாய் இவள் இருப்பதால்தானே, அதுவும் மனைவியின் பிரிவைத் தாங்கிக் கொள்ளத்தானே இவ்வாறு பார்க்கிறோம் என்று உடனே அந்தக் குற்ற உணர்வுக்குச் சமாதானம்.

மனைவியிடமிருந்து அவனுக்குக் கடிதம் வந்தது.

உடனே பதில் எழுதிப் போட்டான்.

நடுவில் மணிப்பை பெண் இரண்டு தினங்கள் வரவில்லை.

நாட்கள் ஓடிவிட்டன.

அன்று மனைவி 'வைகை'யில் திரும்பி வரப் போவதால் லீவு போட்டு விட்டான்.

மனைவியுடன் அவனுடைய தாயும் தந்தையும் கூட வந்திருந்தனர்.

மனைவி சற்று இளைத்துள்ளதாக அவனுக்குத் தோன்றியது.

இருவரும் பார்வைக் கணைகளைப் பரிமாறிக் கொண்டபோது அவனுள் மோகத்தால் முகிழ்ந்த தாபப் பெருமூச்சு.

மற்றோரும் கூட வந்திருப்பதால் அன்று இரவு அவள் தன்னுடன் தனியாகப் படுத்துக் கொள்ள வருவாளோ என்று அவனுக்குள் கேள்விக் கணை.

பேச்சின் நடுவில் அவள் எதற்கோ நகைத்த போது ஒரு கன்னத்தில்தானே குழி விழுகிறது என்று அவனுடைய ஆழ் மனத்தில் ஓர் நிரடல்.

சட்டென்று சுதாரித்துக் கொண்டான்.

அவனுடைய மனைவியைத் தேடிக் கொண்டு பக்கத்து வீட்டுப்பெண் வந்தாள்.

''பொறந்த வீட்டுக்குப் போனதுலே கொஞ்சம் நீங்க கருத்திருக்கீங்கக்கா...'' என்றாள் அந்தப் பெண்.

'இதென்ன முரண்பாடு' என்று எண்ணிக் கொண்டான்.

தாயுடன் சமையலறையில் ஏதோ பேசிய வண்ணம் இருந்தாள். அவனுக்குப் போரடித்தது.

திடீரென மணியைப் பார்த்தான்.

ஐந்து இருபது.

அவசர அவசரமாக முகத்தை அலம்பிக் கொண்டு சான்டல் வுட் பவுடரைப் பூசிக்கொண்டான். தலை வாரிக்கொண்டான்.

பேன்ட், ஷர்ட் மாட்டிக் கொண்டு கிளம்பினான்.

''எங்கே திடீர்னு கிளம்பிட்டீங்க.... டிபன் ரெடி. ஆயிடுத்து...'' மனைவி இவனைக் கேட்டாள்.

''ஒண்ணுமில்லே... மெயின் ரோடு முட்டும் போயிட்டு வந்துடறேன்... ஒரு அர்ஜெண்ட் ஒர்க்'' என்று சொல்லி விட்டுப் பதிலை எதிர்பார்க்காமல் கிளம்பி விட்டான்.

'அன்றைக்கு என்ன நிறத்தில் மணிப்பை வரும்' என்கிற சிந்தனை உள்ளத்தில் வட்டமிட அவன் வேகமாக நடக்கலானான்.

'மெயின் ரோடு முட்டும் போயிட்டு வர வேண்டும், பவுடரும் அவசியம்தானா?' என்று அவள் எண்ணிக் கொண்டாள். அவளுக்கு ஏதோ புரிவது போலிருந்தது. ''அம்மா! அப்பாவும் நீயும் எப்போ ஊருக்குப் புறப்படறீங்க?'' என்று கேட்டாள். அவள் புத்திசாலி. ஆபத்துக்கள் வருமுன் காக்கத் தெரிந்தவள்!

அவநம்பிக்கையின் மூலஸ்தானம்

கண்ணதாசன் பக்கம்

வஞ்சகம் வெல்கிறது; சூதாடுவோன் ஜெயிக்கிறான்; பார்த்தவர் சொல்கிறார்.

'என்ன போங்கள், என்ன கடவுள்? என்ன பக்தி? நேர்மைக்கு மதிப்பில்லை என்றால், கடவுள் பக்தி எங்கிருந்து வரும்?'

உண்மைதான். கள்ள வாணிகன் நிறையச் சம்பாதிக்கிறான், நடத்தை கெட்ட அரசியல்வாதி நாட்டையே உலுக்கி எடுக்கிறான், ஒழுக்கம் கெட்ட மனிதர்கள் உயர்ந்த வாழ்வு வாழ்கிறார்கள்; உத்தமமான மனிதர்கள் அவதிப் படுகிறார்கள்.

தத்துவம் பொய்யோ? சந்தேகம் வலுக்கிறது. சத்தியம் ஜெயிக்குமா? இந்த பயம் கூடவே வருகிறது.

பொறுத்திருக்க முடியாத உள்ளங்கள் பொங்குகின்றன. அரசன் அன்று கொல்லுவான்; தெய்வம் நின்று கொல்லும்.

அண்மையில் ஒரு விபத்தில் மாண்டு போனார் ஒருவர். அவரது பிணத்தையே பிள்ளைகள் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. அவர் யார் தெரியுமா?

இருபதாண்டு காலம் ஊரைப் பணத்தை மோசம் செய்தே வாழ்ந்தவர். ஆயிரம் ரூபாய் கடன் கொடுத்தால், மூவாயிரத்துக்கு எழுதி வாங்குவார். கடைசியில் மூவாயிரம் ரூபாயையும் வசூல் செய்யாமல் விட மாட்டார்.

இருபது வருஷம் சுகமாக வாழ்ந்தாரே என்பீர்கள். இடையிலே அவரது பிள்ளைகள் சிதறிப் போய் நாறிப் போயின.

இருப்பது போல் தோன்றும், இருக்காது. இதுதான் வஞ்சகனின் வாழ்க்கை.

சந்தர்ப்ப நிகழ்ச்சிகளாலே மனித மனம் சோர்வடைந்து விடக் கூடாது; தெய்வ நம்பிக்கையை இழந்து விடக் கூடாது.

அந்த நாளில் கடன்காரர்கள் காரைக்கால், புதுச்சேரிக்குக் கம்பி நீட்டுவார்கள். பல விதவைகளின் பணத்தை மோசடி செய்தவரும் அப்படித்தான் செய்தார். கடைசி காலத்தில் அவர் பட்ட பாட்டைக் கடவுள் தான் அறிவார்.

ஏழு வருஷம் ஒருவன் பதவியை அனுபவித்தால், இரண்டு வருஷங்களாவது அவன் திருஷ்டி கழிக்க வேண்டியிருக்கிறது.

ஒரு தலைமுறை பணத்திலே புரண்டால், அடுத்த தலைமுறை அதைத் தீர்த்து முடித்து விட்டுச் சோற்றுக்கு அலைகிறது.

தவறான மனிதர்களின் சுகமான வாழ்க்கை எந்தக் காலத்திலும் வரலாறானதில்லை. காலம் வில்லிலே கணையை ஏற்றித் தயாராக வைத்துக் கொண்டிருக்கிறது. கள்ளம் நிறைந்தவன் காட்சிக்கு வரும்போது, குறி தப்பாது.

'அவர்கள் அனுபவிப்பது இருக்கட்டும், நல்லவர்களுக்கு வாழ்க்கை எங்கே?' என்கிறீர்களா, தட்டுங்கள், திறக்கப்படும். கேளுங்கள், கொடுக்கப்படும். தேடுங்கள்: கண்டடைவீர்கள்!

உலகத்தை வென்றுவிட்டது என்றே ஹிட்லர் முடிவு செய்தான். கடைசியில் இறைவன் அவனை வென்று விட்டான்.

நல்லவன் வாழ்வான். ஆனால் வாழ்ந்து கொண்டிருப்பவனெல்லாம் நல்லவனல்ல.

சில நேரங்களில் பைத்தியக்காரர்கள் பேசுகிற வார்த்தைகள் பொன்மொழிகளை விட உயர்ந்ததாக இருக்கும். அதனால் அவர்களையே பொன்மொழி சொல்லும்படி சொல்ல மாட்டார்கள்.

பல நேரங்களில் குழந்தைகள் இழுக்கின்ற கோடுகள், நவீன ஓவியங்களைவிட நன்றாகத்தான் இருக்கின்றன.

அக்கிரமக்காரர்கள் வாழ்க்கை, நல்லவர்கள் வாழ்க்கையைவிட நன்றாக இருப்பது போலத் தோன்றும்.

அதற்காக எதைத் தேர்ந்தெடுப்பது? உடல், உள்ளம் இரண்டுக்கும் சோதனைகள் வரும்போது உத்தமமான உயர்ந்த மனிதர்களுக்கே ஒரு அவநம்பிக்கை வந்து விடுகிறது.


நான் அவர்களுக்கு மட்டும் புத்தி சொன்னால் போதாது, இறைவன் கூடத் தன் தத்துவங்களை மாற்றிக் கொள்ள வேண்டும்.

ஏராளமான பெண்களைக் கெடுத்தவனுக்கு இடுப்பிலே புற்று நோய் வரும் என்பது உறுதியானால், எல்லோரும் பயப்படுவார்களல்லவா?

இன்ன பாவத்துக்கு இன்ன தண்டனை என்று இறைவன் ஏன், செக்ஷன் போடக் கூடாது?

'இதோ இவன் இன்ன தவறைச் செய்திருக்கிறான், இன்ன நோய் வரப் போகிறது' என்று நிச்சயமாக எதிர்பார்க்கலாமல்லவா?

உத்தமமான மனிதர்களுக்கு ஒரு நிம்மதியையும், அயோக்கியர்களுக்குத் தண்டனையையும் ஆண்டவன் விரைவிலே அருள வேண்டும்.



டல் மேல விட்டுவிட்டீர்களே!



வட்டமேஜை

● 25—க்கும் மேற்பட்ட ஜோக்ஸ். தரமான 4 சிறுகதைகள். பாஷன் புதுமொழிகள். பற்றுக் குறைக்கு பாஷன் கவிதைகள். உடன் கல்லூரி அகராதி. அத்தனையும் அருமை. அப்பப்பா எங்களைத் திணற அடித்து விட்டீர்களே!

திருக்கோவிலூர் எஸ். சடகோபன்

● ஃபாஷன் கல்கி ரொம்ப பேஷாக இருந்தது. ஆனால் நோபல் பரிசு பற்றிய துணுக்கில் ஒரு தவறு நேர்ந்துள்ளது. ''அதை டல் மேல விட்டு விட்டீர்களே!'' (காலேஜ் மாணவர் வசனம்)

சென்னை—17 இல. வேதநாராயணன்

● 'கல்கி' 13.5.79 இதழில் 48ம் பக்கத்தில் கார்ல் பாலிங் என்பவர் ஒருவர்தான் இரண்டு முறை நோபல் பரிசு பெற்றிருப்பதாக திரு எஸ். எஸ். மணி எழுதியிருப்பது சரியல்ல.

ரேடியத்தைக் கண்டு பிடித்த மேரி கியூரி அம்மையார் இரசாயனத்துக்காகவும், பௌதிகத்துக்காகவும் இருமுறை நோபல் பரிசு பெற்றிருக்கிறார்.

அதேபோல் டிரான்ஸிஸ்டரைக் கண்டு பிடித்ததற்காக (கூட்டாய் மற்ற இரண்டு பேருடன்) நோபல் பரிசு பெற்ற பர்டீன் இன்னொரு முறை Super conductivity (அதீத மின் கடத்தல்)யில் செய்த ஆராய்ச்சிக்காக இரண்டாம் முறை பரிசு பெற்றார்.

குவாலியர் ஆர். வேணுகோபால்

● ஃபாஷன் சிறப்பிதழ், சிறப்பாக இருந்தது. இருந்தாலும் நேரு, காந்தி துணுக்கை வெளியிட்டிருப்பது வேதனை தரும் விஷயம். தலைவர்களைக் கேவலப் படுத்துவது போல் இல்லையா?

தென்காசி மேலகரம். வி. பெரியசாமி

● 'இன்றைய ஃபாஷன்' களில் இதை விட்டு விட்டீர்களே! பயணக்கதை எழுத்தாளர்: தான் பார்த்த வெளிநாட்டுடன் நம் நாட்டை ஒப்பிட்டு, ஏக்கப் பெருமூச்சு விடுதல்.

பம்பாய் ரவிசங்கர்

● ப்ரியா, சொன்ன கதையைக் கேட்டு 'பூ.... இவ்வளவுதானா?' என்று ராஜீ சொல்லும் பொழுது நமக்கு ஏற்படும் ஆத்திரத்தை, அந்த ஏழை ஜென்மங்களுக்காகக் கண்ணீர் வடித்து விசும்பி அழும் ப்ரியாவின் குரல் தணித்து விடுகிறது. உஷா சுப்பிரமணியத்தின் கதை ரொம்ப 'டச்சிங்.'

கோப்பனூர்புதூர் என். ரங்கசாமி

இன்று மாலை யதேச்சையாக 'காமதேனு சூப்பர் மார்க்கெட்' சென்றிருந்தபோது அங்கிருந்த விலைப்பட்டியலைப் பார்த்துச் சில முக்கியமான அன்றாடத் தேவைப் பொருட்களின் விலையைக் குறித்து வந்தேன். பின்னர் இரவில் மேற்கு மாம்பலத்தில் ஆரிய கௌடா தெருவில் உள்ள தனியார் கடை ஒன்றிலும் விலையை விசாரித்தேன்.

காமதேனு விடம் சில கேள்விகளில் (கல்கி 6.5.79) குறிப்பிட்டிருப்பது போல் மொத்த விலை அளவிற்கே அங்கு கிடைப்பதாகத் தெரியவில்லையே. நான் பார்த்த வரையில் தனியார் கடையிலும் தரம், எடை நன்றாக இருப்பதோடு விலையும் சிறிது குறைவாகவே காணப்படுகிறதே!

சென்னை—15 வெ. மதன்மோஹன்

● சர்வதேசக் குழந்தைகள் ஆண்டினை முன்விட்டு பலபேர் குழந்தைகளின் நலனுக்காகத் தங்களால் இயன்றதைச் செய்து வருகிறார்கள். சென்னை பாலமந்திர் அனாதை இல்லத்தைச் சேர்ந்தவர்கள் அங்குள்ள குழந்தைகளுக்கு எந்தக் குறையும் தெரியாமல் வளர்க்கிறார்கள். இருந்தாலும் அன்னை, அக்கா, பெற்றோர் கொண்ட குடும்பச் சூழ்நிலையில் கிடைக்கும் அன்புக்காக இந்தப் பிஞ்சு உள்ளங்கள் ஏங்கத்தான் செய்கின்றன. இந்தக் குறையை நீக்க, வசதியும் மனமும் உள்ள குடும்பத்தினர் தங்களுக்கு முடிந்தபோது மாதத்தில் ஒருநாள், நான்கு அல்லது ஐந்து குழந்தைகளை அழைத்துச் சென்று காலையிலிருந்து மாலை ஆறு மணி வரை தங்களுடன் வைத்துக் கொண்டு அந்தக் குழந்தைகளைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகப் பாவித்து அன்பு காட்டினால், ஒரு மகத்தான பணியைச் செய்தவர்கள் ஆவார்கள்.

பாலமந்திர் அருகில் உள்ளவர்கள் இல்லங்களுக்குக் குழந்தைகளைக் கொண்டு விடவும், திரும்பி அழைத்துப் போகவும் பாலமந்திர் போக்கு வரவு வசதி செய்து கொடுக்கும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: பத்மா வெங்கட்ராமன், 10-A, நவாப் கார்டன்ஸ், கோட்டூர், சென்னை - 600 085 போன்: 412076.

● கெரஸினும் தட்டுப்பாடாக இருக்கும் இச்சமயத்தில் சமையல் காஸ் வினியோகத்தில் நடைபெறும் பல ஊழல்களால் பொது மக்கள் மிகவும் அல்லல் படுகின்றனர். வினியோகிக்கப்படும் காஸ் 15 KG. முழுமையாக இருப்பதில்லை. முன்பு நாற்பது நாட்கள்வரை வந்த ஒரு சிலிண்டர் இப்போது 25 நாட்களுக்குள் தீர்ந்து விடுகிறது. கிடங்கிலிருந்து வீட்டுக்குக் கொண்டு வரும் வழியில் சிலிண்டர்கள் இரண்டு மூன்று நாட்களுக்கு டீக்கடை முதலியவைகட்கு வாடகைக்கு விடப்பட்டுப் பிறகு எடை குறைந்த நிலையில் வருகின்றன. எனவே வாடிக்கையாளர் முன்னே பிரிக்கப்பட வேண்டியபடி சீல் வைக்க வேண்டும்.

சென்னை—17 சுந்தரி சுப்ரமணியன்

அரிப்பும் எரிச்சலும் தரும் வியர்க்குருத் தொல்லையிலிருந்து விடுதலை பெறுவீர்!



* அதிகபட்ச் சில்லறை விற்பனை விலை.
உள்ளூர் வரிகள் தனி.

மனம் கவர்ந்த மலேஷியா —14—

சிவசங்கரி



ஜூரோங்பர்ட் பார்க்கில் மைனு



'டைகர்பாம்' கார்டனில் ஒரு பொம்மை



சைனீஸ் கார்டன்

சிங்கப்பூரை விட்டு இந்தியாவுக்குப் புறப்படுவதற்கு முதல் நாள் காலை ''இன்று டப்பர்வேர் பார்ட்டி ஒன்று இருக்கிறது. வருகிறாயா போகலாம்'' என்றாள் ஹேமா.

'டப்பர்வேர்' என்பது வெளிநாடுகளில் பிரசித்தி பெற்ற பிளாஸ்டிக் சாமான்களின் பிராண்ட் நேம் என்பது எனக்குத் தெரியும், ஆனால் டப்பர்வேர் பார்ட்டி என்றால் என்ன என்றுதான் தெரியவில்லை.

'வருகிறேன்' என்று நான் சொன்னதும் நாங்கள் இருவரும் புறப்பட்டோம்.

காற்று புக முடியாதபடி இறுக்கமாக மூடக் கூடிய டப்பாக்களுக்கு 'டப்பர்வேர்' என்று பெயரிட்டு ஒரு பிரபல ஸ்தாபனம் தயாரிக்கிறது. ரொட்டி, வெண்ணெய், மளிகைச் சாமான்கள் என்று மட்டுமல்லாமல் மொறு மொறுப்பு கெடாமல் வைத்திருக்கவும் கூட இந்த டப்பாக்கள் உதவுகின்றன என்று மேலை நாடுகளில் இவைகளுக்குக் கிராக்கி அதிகம். நமக்கு வேண்டிய பொருளை டப்பாவினுள் வைத்து ஒரு தினுசாய் மூடியை அழுத்தி 'ப்ஸ்ஸ்' என்று காற்று வெளியாக மூடிவிட்டால் அப்புறம் அந்த டப்பா 'ஏர்டைட்'டாகி விடுகிறது. இதனால் பல நாட்களுக்கு உணவுப் பதார்த்தங்களைக் கெடாமல் வைத்துக் கொள்ள முடிகிறது. (தற்சமயம் இம்மாதிரியான ஏர்டைட் டப்பாக்களை நம் நாட்டிலும் பிரைட் ஸ்தாபனம் தயாரிக்கிறது).

ஹேமாவின் சினேகிதியின் இல்லத்தில் அன்று டப்பர்வேர் பார்ட்டி ஏற்பாடாகி இருந்தது. எந்தப் பெண்மணி பார்ட்டிக்கு ஏற்பாடு செய்கிறாரோ அவரை ஹோஸ்ட் என்று அழைக்கின்றனர்.

ஹோஸ்ட் தனக்கு வேண்டிய சினேகிதிகளைத் தன் வீட்டுக்கு அழைத்துப் பார்ட்டி கொடுக்க வேண்டும். அப்போது முன் ஏற்பாட்டின்படி டப்பர்வேர் ஸ்தாபனம் தன் டெமான்ஸ்ட்ரேட்டர் ஒருவரைப் பல வகையான டப்பர்வேர் பாத்திரங்களுடன் அனுப்பி வைக்கும். கூடி இருக்கும் பெண்களுக்கு ஒவ்வொரு பாத்திரத்தின் உபயோகத்தையும் டெமான்ஸ்ட்ரேட்டர் விளக்குவார்.

நடுநடுவில் சில விளையாட்டுக்கள் — குட்டிக் கணக்குகள், புதிர்கள், எட்டு பறவை படங்களில் ஒரு ஜோடியைக் கண்டு பிடியுங்கள் என்ற குழந்தைத்தனமான விளையாட்டுகள். இவைகளில் ஜெயிக்கும் பெண்களுக்கு டப்பர்வேரினால் செய்யப்பட்ட சின்னப் பரிசுகளும் உண்டு.

கடைசியில், வந்திருக்கும் பெண்களிடம் விலைப் பட்டியல் கொண்ட புஸ்தகத்தை வினியோகிக்கிறார். யார் யாருக்கு எது தேவையோ அதைக் குறித்து, பணத்தைக் கொடுத்து விட்டால் நாலு வாரங்களில் ஆர்டர் கொடுத்த சாமான்கள் வந்து சேரும். டப்பர்வேர் பொருட்கள் சிங்கப்பூரில் கடைகளில் கிடைக்காதாம்; இப்படித் தனிப்பட்ட டெமான்ஸ்ட்ரேஷன்கள் மூலமாய்த்தான் வாங்க இயலுமாம், அதனால் விலை அதிகமாய் இருந்தாலும், நன்கு உழைக்கக் கூடிய இந்தப் பாத்திரங்களைப் பெண்கள் ஆவலுடன் வாங்குகிறார்கள்.

ஹோஸ்ட் பெண்மணி சிரமம் எடுத்துக் கொண்டு பார்ட்டியை நடத்தினதற்காக மூன்று அடுக்கு டப்பா செட் ஒன்றை டப்பர்வேர் ஸ்தாபனம் பரிசளித்தது. இதைத் தவிர வரும் ஆர்டர்களில் (இத்தனை பர்சென்ட் என்று) கமிஷனும் ஹோஸ்டுக்கு உண்டாம்.

பார்ட்டிக்கு வந்திருந்த எல்லாருக்கும் நீள மான ஸ்பூன் ஒன்றை இனமாய்க் கொடுத்த டெமான்ஸ்ட்ரேட்டர் அதைவிட நீளமாய், 'இதனுல் ஊறுகாய் எடுக்கலாம், ஐஸ் சர் பத்தைக் கலக்கலாம், உயரமான பாட்டிலி லிருந்து ஜாமை எடுக்கலாம்' என்று அடுக்கிக் கொண்டே போன போது 'தேவைப்பட்டால் முதுகையும் சொறிந்து கொள்ளலாம்' என்று எனக்குச் சேர்க்கத் தோன்றியது.

ஹோஸ்ட் அளித்த கட்லெட், கேக் வகைகள், ஸாண்ட்விச், காப்பி எல்லாவற்றை யும் ஒரு கை பார்த்து விட்டு வீட்டுக்கு வந் தால் வீட்டு வாசலில் வெள்ளை கார் ஒன்று நின்றிருந்தது. அட! அப்துல் காதர் கார் அல்லவா?

என் ஊகம் சரிதான். வீட்டின் உள்ளே என் கணவரோடு அரட்டை அடித்துக் கொண்டு அப்துல்காதர், குமணன், அக்னி ஆகியோர் இருந்தனர்.

தமிழ்நாட்டுக்குப் போய் விட்டால் நினைத்த போது பார்க்க இயலாது. இப்போது சிங்கப் பூரில் தானே இருக்கிறீர்கள், ஒரு நடை சென்று பார்த்துவிட்டு வந்து விடலாம் என்று வந்திருக்கிறார்களாம்.

'சிங்கப்பூரில் இன்னும் பார்க்காத இடங் களைக் கண்டு வரலாம் வாருங்கள்' என்று காதர் அழைக்கப் புறப்பட்டோம்.

முதலில் சிரங்கூன் ரோடு போய்க் கடைசி நிமிஷ ஷாப்பிங்கை முடித்துக் கொண்டு ஊர் சுற்றிப் பார்க்கலாம் என்பது திட்டம், ஆனல் நடந்தது என்ன?

சிரங்கூன் ரோடுக்குப் போக ஒருவருக் காவது சரியான வழி தெரியவில்லை. சுத்தோ சுத்து என்று சுற்றித் திரிந்தபிறகு ஒருவழியாய் சிரங்கூன் ரோட்டை அடைந்தோம். 'சிங்கப் பூரைச் சுற்றிக் காட்டுகிறேன் என்று சொன்ன படி செய்து விட்டேன்' என்று சமாளித்தார் காதர்.

கடையில் வாங்க வேண்டியவைகளை வாங்கிக் கொண்டு கோமளவிலாஸில் சூடான தோசை, வடை காப்பி சாப்பிட்டுவிட்டுப் புறப்படும்போது மணி இரண்டு.

அவசரம், அவசரமாய் நகரின் ஒரு கோடி யில் இருந்த டைகர் பாம் கார்டன்ஸுக்குப் போனேம். பிரமாதமாய் பேர் சொல்லும் அளவுக்கு அங்கு என்ன இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. பெரிசும், சின்னதுமாய், சிவப்பு, பச்சை, நீலம் என்று அடிக்க வருகிற நிறங்களில் பயங்கரப் பொம்மைகள், கொலை பண்ணும் பொம்மைகள், துடிக்கத் துடிக்கச் சாகும் பொம்மைகளோடு, சாந்தமான புத் தர் சிலைகளும் இருந்தன. ஒரு கொலு பார்த்த மாதிரி இருந்ததே தவிரவும் நளினமான கலை அம்சம் ஏதும் கண்ணில் படவில்லை.

மணி நாலு.

'''ஜீரோங் பார்ட் பார்க்க' ரொம்ப நன்ருக இருக்குமாம். அதைப் பார்க்கா விட்டால் எப்படி?'' என்று நான் சொல்ல ''ஏன் விட ணும்? பார்த்து விடலாம்'' என்று காரை விரட்டினர் காதர்.

உன் பாடு, என்பாடு என்று விசாரித்துக் கொண்டு ஜீரோங் போய்ச் சேரும்போது மணி இந்தரை. ''இன்னும் ஒரு மணியில் மூடிவிடுவார்கள். சுருக்க வாருங்கள்'' என்று ஒருவரை ஒருவர் விரட்டிக்கொண்டு டிக்கெட் எடுத்து உள்ளே நுழைந்தோம்.

முதலில் வரவேற்பது அந்த மைனக்கள் தாம். அடேயப்பா! என்னமாய் விசில் அடிக்கின்றன! பேசும் மைனக்களாம், அவை களின் விசில் ஓசையில் காதுகள் செவிடாகித் தான் போயின.

20 ஹெக்டேர் நிலப்பரப்பில் அமைந்துள்ள அந்தப் பறவைகள் பூங்கா, பல மில்லியன் டாலர்கள் செலவில் உருவாக்கப்பட்டு இன்று உலகின் சிறந்த பறவை பூங்காக்களில் ஒன்று கத் திகழ்கிறது. 350 வகைகளைச் சேர்ந்த 7000 பறவைகள் இங்கு இருக்கின்றனவாம்.

நடுவில் அழகான ஏரி. அதைச் சுற்றிப் பறவைக் கூண்டுகளை விஸ்தாரமாய் அமைத் திருக்கிறார்கள். கால் வலிக்க வலிக்க நடக்கத் தேவையில்லை. உள்ளே எல்லா இடங்களுக்கும் போக டிராம் வசதி உண்டு.

புறப்படத் தயாராய் இருந்த டிராமில் அமர்ந்து ஒவ்வொரு வகையாய்ப் பார்த்துக் கொண்டே போனேம். நேரம் அதிகம் இல்லை

✖ விடை பெறுமுன் விமான நிலையத்தில்



யாதலால் முக்கியமான இடங்களில் மட்டும் இறங்கிப் பார்த்தோம்.

சிவப்புக் கொக்குகளைப் பார்த்தோம். கறுப்பு அன்னங்களைக் கண்டோம், உடம்பில் கம்பளிகோட் ஒன்றைப் போர்த்திக் கொண்ட பாரடைஸ் பறவைகள், பெலிகன், ஜாபிரு, கறுப்புக் கழுத்துக் கொக்கு, இன்னும்... போங்கள் எதைச் சொல்ல, எதைவிட?

பாதி தூரம் வந்திருப்போம். ''இங்கு அவசியம் இறங்கி உள்ளே போங்கள் — பார்க்க வேண்டிய இடம். நீங்கள் பார்த்து முடிப்பதற்கும் நான் கடைசி ரவுண்டு வருவதற்கும் சரியாக இருக்கும். நீங்கள் ஏறிக் கொள்ளலாம்'' என்று டிராம் ஓட்டுனர் சொல்ல இறங்கி நடந்தோம்.

'இங்கே நுழையவும்' என்ற வாசகத்தோடு இருந்த கதவின் வழியாக ஒரு கூண்டுக்குள் நுழைந்தோம்.

அதைக் கூண்டு என்று எப்படிச் சொல்லலாம்? இரண்டு ஹெக்டேர் அகல நீளத்தில் இருபத்தியொரு மீட்டர் உயரத்தில் வலையால் ஆன பிரும்மாண்டமான கூடத்தைக் கூண்டு என்று எப்படி அழைப்பது?

இந்த வலைத் தடுப்புக்குள், ஓர் உயரமான, பெரிய நீர்வீழ்ச்சி இருக்கிறது, தொங்கும் ரெயின்போ பாலம் இருக்கிறது. அடர்ந்த காட்டை ஒத்த மரங்களும் செடிகளும் உள்ளன, ஓடை சலசலக்கிறது. அப்புறம், ஆயிரமாயிரம் பறவைகள். அடைபட்டிருக்கிறோம் என்ற உணர்வு இல்லாமல் பறந்து திரிந்த, ஆனால் அடைபட்ட பறவைகள்.

மயில்கள் தோகை விரித்து ஆடின. புறாக்கள் கொஞ்சின, என்னென்னவோ பேர் தெரியாத பறவைகள் தலைக்கு மேல் கூட்டமாய்ப் பறந்தன.

பிரிய மனமில்லாமல் டிராமுக்கு நாழியாகிவிடும் என்ற உணர்வால் வெளியே வந்தோம்.

டிராமும் வந்தது. ஏறி உட்கார்ந்தோம். பத்தடி போயிருக்காது, நின்று விட்டது. என்னவாம்? 'டயர் பஞ்சர். மாற்று டயரை இப்போதைக்குப் போட இயலாது. இறங்கி நடந்து போங்கள்' என்றார் டிராம் கண்டக்டர்.

பேசாமல் இறங்கி லொங்கு லொங்கென்று நடந்தோம். இரண்டு பக்கமும் இருந்த பறவை வீடுகளும், பச்சைத் தோட்டங்களும் கொஞ்சம் களைப்பைக் குறைக்க உதவின.

வாசலுக்கு வந்து காரில் ஏறிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தோம்.

எல்லாருக்கும் ஹேமா அருமையான இரவு உணவைத் தயார் பண்ணி வைத்திருந்தாள். சாப்பிட்டோம். வானம்பாடியின் சொச்ச கேள்விகளுக்கு நான் பதில் சொல்லி முடித்த பிறகு 'ஏர்போர்டில் உங்களுக்கு விடை கொடுப்பது கஷ்டமாக இருக்கிறது. அதனால் இப்போது நாங்கள் புறப்படுகிறோம். நீங்கள் எங்களை வழி அனுப்புங்கள்' என்று பிரியா விடை பெற்றனர். அவர்கள் மலேஷியாவுக்குப் பயணமானார்கள்.

பெட்டிகளைப்பாக் செய்து முடித்து நாங்கள் படுப்பதற்கு வெகுநாழிகை ஆனது.

காலையில் ஒன்பது மணிக்கு விமானம் புறப்பட்டதால் சுருக்க எழுந்து தயாரானோம்.

பாலுவும், ஹேமாவும் தங்கள் பரிசாக அழகான டேபிள் கடிகாரம் ஒன்றை எங்களுக்கு அளித்தார்கள்.

பாலுவுக்கு ஆபீஸ் இருந்ததால், ஹேமாவும், விஜியும் எங்களை விமான கூடத்துக்கு அழைத்துச் சென்றார்கள். பெட்டிகளை ஒப்படைத்தபின், ஸெக்யூரிடி வாசல் வரை கொண்டு விட்ட ஹேமாவிடம் விடை பெற்று உள்ளே நுழைந்தோம்.

செக்யூரிட்டிக்காகக் கைப்பையைத் தலைகீழாய்க் கொட்டிப் புரட்டின சமயத்தில் யாரோ என் பெயர் சொல்லி உரக்க அழைப்பது கேட்டது. திரும்பினேன்.

செக்யூரிடி வாசலில் விஜயம் — என் கணவரின் உறவுப் பெண்மணி — நின்றிருந்தார்.

அனுமதி பெற்றுக் கொண்டு அவரிடம் சென்றேன். புடவைப் பொட்டலம் ஒன்றை என்னிடம் கொடுத்து 'நீ வீட்டுக்கு வந்த போது உனக்கு வெற்றிலை பாக்கோடு ஏதும் கொடுக்கவில்லை. இதை என் பரிசாக ஏற்றுக் கொள்' என்று மூச்சிரைக்கப் பேசினார்.

''எதற்காக இப்படி சிரமப்படுகிறீர்கள்? இத்தனை கஷ்டப்படுத்திக் கொண்டாவது இதைத் தர வேண்டுமா? உங்கள் அன்பு இருந்தால் போதுமே—'' என்றவள் அவருக்கு நன்றி தெரிவித்து, விடைபெற்று மீண்டும் செக்யூரிடியில் நுழைந்தேன்.

பத்து நிமிஷங்களில் சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் பணிப்பெண் இன்முகத்தோடு வரவேற்க விமானத்துள் சென்று அமர்ந்தோம்.

பெல்டை இடுப்பில் கட்டிக் கொண்டு சாய்ந்தவள் தலையைத் திருப்பி என் கணவரைப் பார்த்தேன்.

அவர் மென்மையாய்ப் புன்னகைத்தார்.

ஓர் இனிமையான பயணம் முடியப் போகிறது. சிறந்த நண்பர்களையும், நல்ல அனுபவங்களையும் நமக்குக் கடவுள் கொடுத்ததற்கு நன்றி சொல்ல வேண்டும். இல்லையா? என்று அவர் பார்வையும், புன்னகையும் சொல்வதை ஆமோதிக்கும் வகையில் நானும் பதிலுக்குச் சிரித்தேன். ஜன்னல் வழியாகத் தெரிந்த சிங்கப்பூரிடம் 'போய் வருகிறோம்' என்று விடைபெற நாங்கள் தயாரானோம்.

முற்றும்

முதலாளி: நம்ம புது டைப்பிஸ்ட் எப்படி?

மானேஜர்: ரொம்ப முற்போக்குக் கொள்கை உடையவருங்க. ஆங்கிலத்திலே கூட எழுத்துச் சீர்திருத்தம் கொண்டு வந்து டைப் செய்யறார்.

—ஜே. ஆர். எம்.







உங்களுக்குப் பிடித்த போர்ன்விடா 1980 மாஸ்கோ ஒலிம்பிக்ஸின் நிறுவனக் குழுவினரிடமிருந்து இந்தியாவின் போஷாக்கு-உணவுப் பானமாகப் பாராட்டு முத்திரையை வென்றிருக்கிறது.

போர்ன்விடா, 1980 இந்திய ஒலிம்பிக் குழுவினருக்கு "அதிகாரபூர்வமாக வழங்கப்படுவதற்கான" தனிச் சிறப்பையும் பெற்றிருக்கிறது.

ஏன் போர்ன்விடா?

ஏனெனில் போர்ன்விடா கோகோ, மால்ட், பால் மற்றும் சர்க்கரையின் போஷாக்குச் சத்துக்கள் அனைத்தையும் கொண்டுள்ளது. ஒரு கப் சூடான பாலிலே இரண்டு ஸ்பூன் போர்ன்விடா போடுங்கள் கிடைப்பது சுவைமிக்க போஷாக்கு தரும் பானம்.

உங்கள் குழந்தைகளுக்கு தினமும் இரண்டு வேளை போர்ன்விடா கொடுங்கள். அவர்கள் நாள்தோறும் ஆரோக்கியமாகவும் உற்சாகத்துடனும் விளங்கத் தேவையான போஷாக்கை அளிக்க. அவர்களுக்கு அதைக் கொடுக்க உங்களுக்கும் போர்ன்விடா தேவை!

கேட்பரீஸ்

போர்ன்விடா

ஊக்கம் ததும்பும் [illegible] வாழ்வுக்கு

OBM/2927/TAM

தியாக வல்லபன்

விக்கிரமன்

"நான் கேள்விப் பட்டதெல்லாம் உண்மைதானு" என்று சந்திரப் பிரபா கேட்டாள். அவள் வழக்கத்துக்கு மாருக வல்லபனின் மிக அருகே உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் முகம் அவனை நோக்கி நிமிர்ந்து இருந்தது.

''என்ன கேள்விப் பட்டாய் பிரபா?''என்று வல்லபன் அவளுடைய கூந்தலை மெல்லக் கோதியவாறு கேட்டான்.

''தாங்கள் இந்த நாட்டின் அரியணையில் அமரும் உரிமை பெற்றவராமே?'' என்று பிரபா கேட்டாள். வல்லபன் மெல்ல அவளது முகவாயைத் தட்டி, ''உரிமை மட்டுமா, தகுதி பெற்றிருக்க வில்லையா?'' என்று கேட்டான்.

உடனே அவனுடைய பேச்சுக்கு மறுமொழி அவளால் கூற முடியவில்லை. தலையை அசைத்து, இரண்டும்தான்'' என்ருள். பிறகு ''உரிமை தகுதி இரண்டும் என்னிடமில்லையே'' என்ருள். அவள் கண்கள் மெல்லக் கலங்கத் தொடங்கின.

வல்லபனுடைய கரங்கள் அவளுடைய கூந்தலின் அழகை மெல்ல அநுபவித்து, பிறகு அவளுடைய பரந்த முதுகின் எழிலை உணரத் தொடங்கின.

''உரிமை தகுதி இரண்டும் இருப்பதால்தான் என்னை இவ்வளவு எளிதில் கவர்ந்துவிட்டாய்'' என்ருன் வல்லபன்.

''உன்னைப் பிரிந்திருக்க முடியாததால்தான் கங்காபுரியினின்று விரைவில் புறப்பட்டு விட்டேன்'' என்று தொடர்ந்து வல்லபன் கூறியபோது அவள் நாணிக் கண் புதைத்தாள்.

''இந்த நாட்டின் அரசரான பிறகும் நீங்கள் கங்காபுரிக்குச் சென்றுதான் வருவீர்களா?'' என்று சந்திரப் பிரபா கேட்டாள்.

வல்லபன் சிறிது யோசித்தான். வேங்கி அரண்மனையில் அமர்ந்த பிறகு கங்காபுரிக்குச் செல்ல வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? என்று எண்ணினன். தாய் இருப்பதனுல், தெற்கே கங்காபுரிக்குச் செல்கிறேம். பிறகு தாய் எதற்காக என்னைப் பிரிந்திருக்க வேண்டும்? ராஜமாதாவாக மாளிகையில் வாழ வேண்டிய என் தாயைச் சிறு குடிசையில் வாட விடுவேனு?...

''பிறகு நான் கங்காபுரிக்குச் செல்ல வேண்டிய அவசியமே நேராது. நான் வேங்கியின் மன்னன். சோழ நாட்டுக்கு அந்த நாட்டு மன்னரின் அழைப்பு இருந்தால் செல்வேன்'' என்ருன்.

சந்திரப்பிரபா பெருமூச்சு விட்டாள். அவள் ஏதோ ஒன்றைக் கேட்கத் துடித்தாள். ஒவ்வொரு முறையும் அவள் கேட்க முனைந்துவிடுவாள். ஆனுல் சொற்கள் நெஞ்சோடு நின்றுவிடும். நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன.

அதன் பிறகு வல்லபனையும் அவளால் சந்திக்க இயலவில்லை. வேங்கி மன்னருடன் நடந்த சமாதானப் பேச்சு வார்த்தைகள் வெற்றியடையவில்லை. மீண்டும் ஆலோசனைக் கூட்டம். இப்போது வல்லபனை ஆதரிப்பவர்கள் எண்ணிக்கை அதிகமாகியது. போரா — அமைதியா என்ற முடிவுக்குவல்லபன் வந்தாக வேண்டும்.

ஒருநாள் வல்லபனைத் தேடிக் கங்காபுரியினின்று தூதுவன் ஒருவன் வந்தான். அவன் பல காத தூரம் நடந்து வந்திருந்தான். அவன் செல்வியிடமிருந்து லிகிதமொன்று கொண்டு வந்திருந்தான். வல்லபனைத் தேடி ஆற்றங்கரை வீட்டில் கண்டுபிடித்துக் கொடுத்தான்.

அவனது தாய் எழுதி அனுப்பியிருந்த செய்தியை



ஒருமுறை பரபரப்புடன்முதலில் படித்தான். பிறகு, இரு முறை பல முறை படித்தான் வல்லபன். அவனுக்கு ஏற்பட்ட பரபரப்பில் எதிரே சந்திரப் பிரபா இருப்பதையும் மறந்தான்.

படித்து முடித்தவுடன் வல்லபன் துள்ளி எழுந்தான். ''நான் இன்றே புறப்பட வேண்டும்'' என்று பரபரப்புடன் கூறினான்.

ஓலையைப் படித்தவுடன் வல்லபனிடம் திடீரென்று ஏற்பட்ட மாறுதல் சந்திரப் பிரபாவையும் வியப்புறச் செய்தது.

''எங்கே புறப்பட வேண்டும்?'' என்று மெல்லக் கேட்டாள் சந்திரப் பிரபா.

''கங்கா புரிக்கு. என் அருமைத் தாய் எனக்குச் செய்தி அனுப்பியிருக்கிறாள், என்னை உடனே புறப்பட்டு வருமாறு'' என்று வல்லபன் குரலில் உற்சாகம் பொங்கக் கூறினான்.


''சிறிது நாட்களுக்கு முன்பு சொன்னீர்கள், இனி கங்காபுரிக்குப் போகுமாறு நேராது என்று. இப்பொழுது போக வேண்டும் என்று துடிக்கிறீர்களே'' என்று சந்திரப் பிரபா துக்கம் நெஞ்சை வந்து முட்டக் கேட்டாள்.

வல்லபன் குரலில் உற்சாகம் இருந்தது. ''ஆமாம். வேங்கியின் அரசனானால், தெற்கே செல்லுமாறு நேராது. ஆனால் நான் அரசனாக முடியவில்லையே'' என்று வல்லபன் கேட்டான்.

''தங்களுக்காகப் போரிடத் துடிப்பவர்களையும் தாங்கள் தடுத்து நிறுத்தியுள்ளீர்கள். முயற்சி எடுக்காவிடில் வேங்கி அரியணை தானே கிட்டுமா?'' என்று சந்திரப் பிரபா கேட்டாள்.

''வேங்கி அரியணையைத் தற்போது நான் மறந்து விட வேண்டும். என் தாய் என்னைக் கங்கா புரிக்கு வருமாறு அவசரக் கட்டளை பிறப்பித்துள்ளாள். அங்கே எனக்கு மிகப் பெரிய அதிர்ஷ்டம் காத்திருக்கிறதாம்'' என்று உற்சாகத்துடன் கூறினான் வல்லபன்.

சந்திரப்பிரபாவினால் உடனே பேச முடியவில்லை. பிரிவுத் துயர் அவளைப் பிடித்துக் கொண்டது. மிகப்பெரிய அதிர்ஷ்டம் என்ன இருக்கும், அவள் யோசித்தாள்.



ஐயோ, இவரிடம் ஏன் பழகி மனத்தைப் பறி கொடுத்தோம். தாத்தா கூறியது சரி தான். ''அந்தஸ்து வித்தியாசத்தில் ஏற்படும் காதல் மிகவும் சோதனையைத் தரும். மறந்து விடுவது மேல்'' என்று அவர் எனக்காகத் தான் கூறினாரோ?

சந்திரப் பிரபாவின் முகத்தில் ஏற்பட்ட வாட்டத்தைக் கண்ட வல்லபன் அவளை மெல்ல அணைத்துக் கொண்டு, ''பிரபா, திடீரென முகவாட்டம் ஏன்? கங்காபுரிக்குச் சென்று தாய் இட்ட பணியை நிறைவேற்றி விட்டு உடனே திரும்பி விடுவேன். உன்னைப் பார்க்காமல் என்னால் அங்கே ஒரு கணமும் இருக்க முடியாது'' என்றான்.

சந்திரப்பிரபா விம்மினாள். ''நான் எப்படி பிரிந்திருப்பேன். இதற்கு முன்பெல்லாம் தாங்கள் சென்று வரும்போது என் பிள்ளை மனம் பிரிவைப் பற்றிப் பெரிதாக நினைக்க வில்லை. இப்பொழுது பிரிவு பெரும் பிளவு போல் காட்சி தருகிறது. நானும் தங்களுடன் வந்து விடட்டுமா?''

வல்லபன் அவளது விழி நீரைத் துடைத்தான். ''கங்கா புரிக்குச் சென்று விரைவில் திரும்பு வேன். என் வார்த்தையை உறுதியாக நம்ப லாம்'' என்று கூறியவன் தன் கையிலிருந்த மோதிரத்தைக் கழற்றிச் சந்திரப்பிரபா எதிர் பாராதவிதமாக அவள் விரலில் அணி வித்தான்.

சந்திரப் பிரபா நெகிழ்ந்தாள். வல்லபனின் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு, ''விரைவில் திரும்பி வந்து விடுவீர்களல்லவா? தாங்கள் வரத் தாமதமானால் நான் வேங்கியி லின்று தங்களைத் தேடி வந்து விடுவேன்'' என்று கூறி விம்மினாள்.

மோதிரம் அணிந்த அவள் கையைப் பிடித் தான். அதன்மேல் தன் கையை வைத்தான். ''விரைவில் வருவேன், உறுதி'' என்றான்.

வல்லபன் பிரியா விடை பெற்றுக் கொண்டு கங்கை கொண்ட சோழபுரம் நோக்கிப் புறப் பட்டான். அங்கே அவனுக்கு மாபெரும் அதிர்ஷ்டம் காத்திருந்தது.

அத்தியாயம் 10

''குழந்தைகளைக் காப்பாற்றுங்கள்!''

இருளில் வந்த உருவம் தன் கணவர் தான் என்று அல்லி புரிந்து கொண்டு விட் டாள். இந்தநேரத்தில் மாளிகைக்குள் எப்படி வந்தார் என்றெல்லாம் அவளுக்குச் சிந்திக்க நேரமில்லை. இளம் குழந்தை ஆவலுடன், பாலைச் சுவைத்துக் கொண்டிருந்தது. அந்த இன்பத்தில் விழிகளை மூடி மெய்ம்மறந்திருந்த அல்லி, மெல்ல விழிகளைப் பாதிதான் திறந் தாள். கோவிந்தன் அவள் அருகே வந்து அமர்ந்து கொண்டான்.

அவள் உடல் நடுங்கியது. குழந்தையை இழுத்து அணைத்துக் கொண்டாள். ''ஐயோ, இது அவராக இல்லாமல் இருக்கக் கூடாதா?'' என்று சுவாமிமலை முருகனை வேண்டிக் கொண் டாள்.

''முருகா! உனது பன்னிரு முகங் களில் ஒருமுகம் அன்புடையவர் துதிக்க அவர்களுக்கு விருப்பத்துடன் வரத்தைக் கொடுக்கக் கூடியதாயிற்றே! எனக்கு உதவக் கூடாதா?'' என்று வேண்டினாள்.

நான் திருச்சி கன்டோன் மென்ட்டில் உள்ள இரயில்வே விடுதியில் ஒவ்வொரு அறையிலும் சுவையான வேடிக்கையான வாசகங்கள் எழுதியிருப்பதைக் கண்டு ரசித்தேன். அவற்றில் இரண்டு:

1 Talking aloud, is not allowed!
Talking allowed if not aloud!

2 Nobody can fool me; because
I am already a fool.

க. இளங்கோவன்.

அவள் தந்தை கற்பித்திருந்த முருகன் துதியைச் சொல்லிக் கொண்டாள்.

''அல்லி, அல்லி'' என்று மெல்ல அழைத் தான் கோவிந்தன். அந்தச் சொற்களில் கம ழும் அன்பை இனிமையை அவளால் ஒதுக்கித் தள்ளிவிட முடியவில்லை. வாய் திறவாமலும், விழிகளைத் திறவாமலும், நன்றாக உறங்கு பவள் போல் இருந்து விட்டாள். அவன் போய் விடுவான் என்று எண்ணினாள். இது போன்ற இருளில் குடிலில் கணவன் வந்து மெல்லத் தொட்ட சம்பவம் நினைவில் வந்தவுடன் அவள் உடல் சிலிர்த்தது. அப்போது அவன் கரங்களைத் தன்னிடம் பற்றி இழுத்து இறுக அணைத்துக் கொண்டது நினைவுக்கு வந்தவுடன் அவள் இதழ்களில் புன்முறுவல் தெளிந்தது. ஆனால் மறுவிநாடியே அதை மறைத்துக் கொண்டாள். 'அல்லி! அல்லி!' என்று இப் போது அவன் அவளைத் தொட்டு எழுப்பினான். அல்லி மெல்ல முனகுவதுபோல் பாசாங்கு செய்தாள். ''உஸ்... சப்தம் போடாதே... நான் தான்'' என்று மெல்லிய ஆனால் கர கரத்த குரலில் பேசினான் கோவிந்தன்.

அப்படியே படுத்திருக்க அல்லி விரும்ப வில்லை. அதற்கு மற்றொரு காரணமுமிருந் தது. கோவிந்தனின் கரங்கள் குழந்தையை நோக்கி நீண்டன. குழந்தை பாலைச் சுவைத் துக் கொண்டிருப்பதைக் கூட அவன் இலட்சி யம் செய்யாததை அறிந்த அல்லி தன் அன் புக்கு ஏங்கி அவன் இங்கு வரவில்லை, அரக்க குணத்துடன் வந்திருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டாள்.

அவனது கரத்தை அல்லி ஒதுக்கித் தள்ளி னாள். அவனது விழிகள் அந்த இருளிலும் துண்டம்போல் விளங்கின.

''இங்கே ஏன் வந்தீர்கள். போய் விடுங்கள்...'' என்று மெல்லிய குரலில்

லக்ஷ்மி விலாஸ் பாங்க் விரிவான முறையில், தனிப்பட்ட கவனத்துடன், திறமையாக சேவைபுரிய காத்திருக்கிறது. வழக்கமான சேமிப்புத் திட்டங்களுடன் ஏற்றுமதி, இறக்குமதிக்கு அன்னியச் செலாவணிகள், அயல்நாட்டிற்குத் தொகைகளை அனுப்புதல், லெட்டர்ஸ் ஆப் கிரெடிட் ஏற்பாடு போன்ற பணிகளும் எமது பணியில் அடங்கும். குறிப்பிட்ட தேவைகளுக்கேற்ப தனிக்கவனம் செலுத்தி சேவைபுரிய எங்களிடம் அனுபவமும், ஆற்றலும் உண்டு.

உங்களை எதிர்நோக்கும் நிதிப் பிரச்னைகளை அல்லது தேவைகளை எங்களிடம் எடுத்துக் கூறுங்கள். பணத்தைச் சேமிக்கவும், வருவாய்த் திரட்டவும் எங்களிடம் பற்பல திட்டங்கள் உள்ளன. எதிர்காலத் தேவைக்குகந்த சேமிப்புத் திட்டத்தைத் தேர்ந்தெடுக்க எமது கிளை நிர்வாகிகள் உங்களுக்கு வழிகாட்டுவார்கள். வேறு என்ன வேண்டும்....



நம்பிக்கையின் உறைவிடம்

லக்ஷ்மி விலாஸ் பாங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்: கரூர் 639 001
நிர்வாக அலுவலகம்: சென்னை 600 086

பணிக்கு உணவு!

பணிக்கு உணவளிக்கும் திட்டம், குறைந்த அளவு வேலையுள்ளோர், வேலையில்லாதோர் நடுவில் வேலை வாய்ப்பு அளிப்பதோடு, அவர்களைச் சமூகச் சொத்துக்களாக்குவதற்கும் வழி வகுக்கிறது.

இந்தப் பணிக்கு உணவளிக்கும் திட்டம் ஆந்திரப் பிரதேசத்தில் முழு மூச்சோடு இயங்கி வருகிறது. ராஜ்ய சர்க்கார் 14.55 கோடி ரூபாய் அளவுக்குப் பல வேலைகளை எடுத்துள்ளது. இது வரையில் 1056 கிலோ மீட்டர் புதிய பாதைகளும், 3170 கிலோ மீட்டர் சரளைக்கல் பாறை செப்பனிடும் பணிகளும், 170 பள்ளிக்கூடக் கட்டட நிர்மாணப் பணிகளும், 134 நீர்ப்பாசனத் திட்டத் தோற்றுவாய்களும் முடிவுற்றுள்ளன. இந்தப் பணிகளினால் வேலை வாய்ப்பும், 49392 லட்சம் உழைப்பு நாட்களும் கிடைத்துள்ளன.

D.G., I & P R 48

கூறினாள் அல்லி. எச்சரிக்கை அதில் பிரதிபலித்தது.

''அல்லி, குழந்தையை எடுத்துக் கொண்டு என்னுடன் வந்துவிடு. முடியா விட்டால் குழந்தையையாவது என்னிடம் கொடுத்து விடு'' என்று அவள் கரத்தைப் பற்றினான் கோவிந்தன்.

அவனது கரத்தைப் பலத்துடன் தள்ளிய அல்லி, ''போய் வாருங்கள், இங்கிருந்து. இருள் வேளையில் இப்படி இரகசியமாக வருவது உங்களுக்கே நியாயமாக இருக்கிறதா?'' என்றாள்.


''நான் உன்னை மட்டும் தேடி வரவில்லை. இப்போது உன்னைவிட அந்தக் குழந்தை தான் எனக்கு வேண்டும்'' என்றான் கோவிந்தன்.

''என்னையும் தர மாட்டேன்; குழந்தையையும் தர மாட்டேன். வீணே வாதிடாதீர்கள். மெல்லிய குரல் இன்னும் வலுவடையும். பணிப் பெண்கள் எழுந்து விடுவார்கள். அவர்களும் கூக்குரலிடுவார்கள். பிறகு நீங்கள் அகப்பட்டுக் கொள்வீர்கள். உங்கள் மனைவி என்று என்னை மற்றவர் அடையாளம் கண்டு கொண்டவுடன், 'பூதலி' என்று என்னை நினைத்து என்னையும் தங்களுடன் சிறையிலடைத்து விடுவார்கள்'' என்று அல்லி மீண்டும் அவனுக்கு நல்லுரை கூறினாள்.

''என்னை யாரும் சிறைப்படுத்த முடியாது. நான் வீணே வாதிட விரும்பவில்லை. இந்த மாளிகைக்குப் பெரும் ஆபத்து வர இருக்கிறது. மாளிகையைச் சுற்றி என் ஆட்கள் சூழ்ந்து கொள்ளப் போகிறார்கள். சோழ வம்சத்துத் துளிரையும், பிஞ்சையும் கருக்கி விடப் போகிறார்கள். அதற்கு முன்பு நான் உன் மீதுள்ள காதலால் உன்னை எச்சரித்து, உன்னையும் தப்பிக்கச் செய்து குழந்தையையும் எடுத்துக் கொண்டோடி விட வந்தேன்...'' என்று கூறினான். மெல்லப் பேசுவதிலும் இவ்வளவு பயங்கரச் செய்திகளைக் கூற முடியுமென்பதை அப்போதுதான் உணர்ந்தாள். அல்லியின் மெய் சிலிர்த்தது.

''தங்கள் எண்ணம் நிறைவேறாது. நான் இப்போதே கூக்குரலிடுவேன். என் கரத்தாலேயே தங்களைப் பிடித்துக் கொடுத்து விடுவேன்'' என்று அல்லி சீறினாள். அது நல்ல பாம்பின் சீறலாய்த் தெரிந்தது.

பல்லைக் கடித்துக் கொண்ட கோவிந்தன், ''பெண் ஒரு பேதை என்று நன்றாகச் சொன்னார்கள். உன் கூக்குரலில் பயனில்லை. நான் நொடியில் தப்பிவிடுவேன். ஆனால் விடிவதற்கு ஒரு ஜாமத்துக்கு முன்பு இந்தச் சோழ கேரளத் திருமாளிகைக்கு என்ன கதி ஏற்படப் போகிறது பார். இந்த மாளிகையின் வாசலில்தான் காவல்காரர்கள் இருக்கிறார்களே தவிர மற்ற மாளிகைக்குப் பாதுகாப்பு போதாது என்பது உனக்குத் தெரியாது. மல்லப்ப தேவனின் உதவியாளர்கள் பயங்கர ஆயுதங்களுடன் மாளிகையைத் தாக்கப் போகிறார்கள். அப்போது குழந்தை என்றும், பெரிய ராணி என்றும் பார்க்க மாட்டார்கள். என்னுடைய மனைவி என்று பரிதாபப் பட்டு உன்னை விட்டு விட மாட்டார்கள்... அதற்காகத்தான் உன்னைக் காப்பாற்ற வந்தேன். நான் இங்கு வந்தது என் மல்லப்ப தேவருக்குத் தெரியாது. தெரிந்தால் என்னைக் கண்ட துண்டமாக வெட்டி விடுவார். அல்லி... உடனே என்னுடன் புறப்பட்டு விடு'' என்று கோவிந்தன் பரபரப்புடன் அவளை வற்புறுத்தினான்.



''சாய்ந்து கொள்ளும் போது ரொம்ப சுகமானது சேர். ஆனால் அதிலிருந்து எழுந்திருக்கும் போது ரொம்ப 'அன் ஈஸி' யாக இருக்கும்.

கே. ஆர். எம்.

அல்லியின் கோபம் உச்சநிலையை அடைந்தது. ''நீங்கள் எந்த இடத்திலும் உண்மையாக இருக்க மாட்டீர்கள் போல் தோன்றுகிறது... இப்போது உங்கள் தலைவருக்கும் துரோகம் இழைக்கிறீர்கள். என்னை மட்டும் ஏன் காப்பாற்ற விரும்புகிறீர்கள்? இங்கிருந்து போய் விடுங்கள்... உம்... போய் விடுங்கள்...'' என்று சற்று உரத்த குரலிலேயே பேசினாள்.

கோவிந்தன் தலையைப் பலமாக அசைத்தான். அல்லியிடமிருந்து குழந்தையைப் பறிக்க முற்பட்டான்.

அல்லி குழந்தையை அணைத்துக் கொண்டாள். குழந்தை விழித்துக் கொண்டு விட்டது.

''இங்கிருந்து போய் விடுங்கள்... நான் கூச்சலிடுவேன்...'' என்று கூறி அல்லி குழந்தையை மேலும் பாதுகாப்பாக அணைத்துக் கொண்டாள்.

குழந்தை சிணுங்கியது. திடீரென்று வீரிட்டு அழுதது. அல்லியைப் பிடித்து அவன் தள்ள எத்தனித்த போது அல்லி, ''ஆபத்து... ஆபத்து... உடனே ஓடி வாருங்கள்'' என்று கூவினாள். குழந்தையை எடுத்துக் கொண்டு இருளில் தடுமாறி நடுக்கூடத்தை அடைந்தாள்.

யாரோ நடமாடும் ஓசை கேட்டது. திடுக்கிட்டு விழித்தெழுந்த பணிப்பெண் ஒருத்தி 'என்ன என்ன' என்று கேட்டவாறு எழுந்து வருவது தெரிந்தது.

கோவிந்தன் கணத்தில் தாவிக் குதித்தோடி இருளில் மறைந்தான்.

''அல்லி! கனவு ஏதாவது கண்டாயா?'' என்று பணிப்பெண் கேட்டாள். விளக்கு

கிரிக்கெட் கற்கலாம்! 36

கோச்: கே. சந்திரசேகர்
படம்: ராஜு. தயாரிப்பு: குண்டுமணி

விக்கெட் நடுவே ஓட்டம் – 3


வெகு வேக ஓட்டத்தின் போது உங்கள் மட்டையை எல்லைக் கோட்டிலிருந்து 2,3 அடி தூரத்திலிருந்தே தேய்த்துச் செல்ல வேண்டும். →





பாட்ஸ்மனின் எல்லைக் கோட்டுக்குள் மட்டையைப் பதிக்காததால் பலர் 'ரன் அவுட்' ஆகி விடுவர். ←

எப்போதும் முதல் ரன்னை அதி வேகமாக எடுத்து விட வேண்டும். மைதானத்தில் பீல்டர் சரியாகப் பந்தை எடுக்கத் தவறினால் மற்றொரு ரன் ஓடலாம். →





← பவுண்டரிகள் மட்டுமல்ல, ஒற்றை ரன்கள் எடுத்தாலே கூட வெற்றிக்கு வாய்ப்பு தரும். ஆகவே அதிக ரன்கள் எடுக்கும் பழக்கத்தை விருத்தி செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு ஓட்டமும் 'ரன்' எடுக்கும் குறியில் இருக்க வேண்டும். அது மாதிரி உல்லாச நடை என்று கூட வேண்டாம்.

ஏற்றப்பட்டது. அல்லிக்கு ஏற்பட்ட உடல் நடுக்கம் இன்னும் தீரவில்லை. பெரிய பிராட்டியும் எழுந்து விட்டாள். குழந்தை அழுது கொண்டிருந்தது.

கீழ் மாடத்திலும் யாரோ எழுந்து பரபரப்புடன் பேசும் குரல் கேட்டது. பறவைகள் சில தமது சிறகுகளைச் 'சடசட' வென்று அடித்துக் கொண்டு பறந்து சென்றன. ஓரிரண்டு வௌவால்கள் அங்கும் இங்கும் பறந்தன. கூடத்தில் ஏற்றப்பட்ட ஒரே ஒரு விளக்கின் ஒளியில் அங்கு நிற்பவர்களின் நிழல் உருவங்கள் பயங்கரமாகத் தோன்றின.

அல்லி அழும் குழந்தையைச் சமாதானப் படுத்தியவாறு தொட்டிலில் உறங்கும் குழந்தையை நோக்கிச் சென்றாள். அந்தக் குழந்தை கவலையில்லாமல் உறங்கிக் கொண்டிருந்தது. நல்ல உறக்கத்தில் ஏதாவது கனவு கண்டிருக்க வேண்டும். உதடுகளைக் குவித்து அது சிரித்தது.

பெரிய பிராட்டியின் எதிரே போய் நின்ற அல்லி, ''அம்மா! எனக்குப் பயமாக இருக்கிறது. காவலர்களை உடனே அழையுங்கள்'' என்றாள்.

''ஏன், இப்படி நடுங்குகிறாய்? துர் சொப்பனம் ஏதாவது கண்டாயா?'' பெரியபிராட்டி கேட்டாள்.

''கெட்ட சொப்பனம் அல்ல தாயே, கொடிய நனவுதான் தாயே..... உண்மைச் சம்பவம் தாயே கனவு அல்ல. உடனே இங்கே தக்க பாதுகாவல் தேவை...'' என்று அல்லி கூறினாள். அவள் குரலில் நடுக்கம். உடலில் நடுக்கம். பெரிய பிராட்டி மெல்லச் சிரித்தாள். ''அல்லி, உனக்குப் புதிய இடம். ஏதாவது கெட்ட கனவைக் கண்டு பயந்திருப்பாய். கடவுளைத் துதித்து விட்டுப் படுத்துறங்கு. பயமாயிருந்தால், இங்கே இப்படி நடுக் கூடத்தில் உறங்கு...'' என்று கூறி விட்டுப் பெரியபிராட்டி சென்று விட்டாள்.

அல்லி செய்வதறியாது, சொல்வதறியாது திகைத்து நின்றாள். காற்று வேகமாக அடித்து எரிந்த விளக்கையும் அணைத்தது. மரக்கிளைகள் பலமாக அசைந்தன. யாரோ பலர் வேகமாக ஓடிவரும் காலடி ஓசை கேட்டது.

''தாயே... நான் கண்டது கனவன்று. குழந்தைகளுக்கு ஆபத்து நெருங்குகிறது தாயே! நான் சொல்வதைக் கேளுங்கள் தாயே...'' என்று அல்லி வாய்விட்டலறினாள்.

அவள் அஞ்சியது போல் ஆபத்து நெருங்கி விட்டது. தீவர்த்தியை ஏந்திய பலர், மாளிகை வாசலிலிருந்து ஓடிவருவது தெரிந்தது. அவர்களை நோக்கி மாளிகைக் காவலர்கள் கூச்சலிட்டவாறு தொடர்வதும், ''பிடியுங்கள்... பிடியுங்கள்'' என்று கூச்சலும், 'ஙிணிங் ஙிணிங்' என்று வாளுடன் வாள் மோதும் ஓசையும், வேல் பாய்ந்ததால் 'ஆ'வென்று பயங்கர ஓலமும் மிக நெருக்கத்தில் கேட்டன.

இருள் இடமிழந்து விலகி, செந்தணலின் நாக்குகளால் அந்த இடத்தில் பெரும் வெளிச்சம் ஏற்பட்டது.

''குழந்தைகளைக் காப்பாற்றுங்கள்'' என்று அல்லி கூக்குரலிடுவது எங்கும் எதிரொலித்தது.

(தொடரும்)


ஸாரிடான் கூட உங்கள்
தலைவலியைப் போக்காவிடில்,
ஒரு டாக்டரிடம் செல்லுங்கள்.
ஒரு ஸாரிடான், தலைவலியை உடனே போக்குகிறது. உங்களை இளைப்பாற்றிப் புத்துணர்வோடு இருக்கச் செய்கிறது. ஆயினும், சில சமயங்களில் ஒரு ஸாரிடான் கூட உதவமுடியாத அளவு
Saridon
தலைவலி கடுமையாகவும் தீவிரமாகவும் இருக்கக் கூடும். அத்தகைய சமயங்களில் டாக்டரிடம் செல்லுங்கள். உங்களுக்குச் சரியான மருந்தை டாக்டர் தரட்டும்.
ஸாரிடான்
ட்ரேட்மார்க்
'ரோஷ்'
வலிமையானது. பாதுகாப்பானது.
ஒன்றே ஒன்று போதுமானது.

RP. 4160

சரிதா, ஐலவ்யூ!

பிலஸ்கோத்

மதிப்புக்குரிய ஜே. ஜே. ஜே. டுடோரியல் கல்லூரி முதல்வருக்கு.

வணக்கம். தங்கள் கல்லூரி விளம்பரத்தைக் கண்டேன். பி. யூ. சி. ஒரு வருடம்தான் என்பதால் என் படிப்பை ஒரு வருடத்துக்கு மேல் கல்லூரியில் தொடர முடியாமல் போய் விட்டது. கடந்த சர்வகலாசாலை தேர்வில் ஆங்கிலத்தில் சரியாக 39 மதிப்பெண்கள் வாங்கினேன். ஒரு மதிப்பெண் இல்லாமல் நான் தவறி விட்டேன். இன்னும் ஒரு மதிப்பெண் எனக்குத் தேவை. அதற்காகவே உங்கள் கல்லூரியில் சேர விரும்புகிறேன். சேர்த்துக் கொள்வீர்களா?

தங்கள் உண்மையுள்ள,
சரிதா.

குறிப்பு: உங்கள் கல்லூரியின் சென்ற வருட சாதனைகள் என்ன?

பின்குறிப்பு: அப்ளிகேஷன் சும்மாவா அனுப்புகிறீர்கள்?

2

அன்புள்ள சரிதா அவர்களுக்கு.

பதில் வணக்கம். தங்கள் கடிதம் கிடைத்தது. தாங்கள் எங்கள் கல்லூரியில் சேர எந்தவொரு தடையும் இல்லை. (கூர்க்கா, நாய் காம்பவுண்ட் சுவர் இத்யாதி இத்யாதி எதுவும் கிடையாது)

நீங்கள் கேட்டிருந்தபடி ஆங்கிலத்தில் உங்களை ஒரு மதிப்பெண் என்ன, இரண்டே வாங்க வைக்கிறோம்.

மதிப்புக்குரிய முதல்வருக்காக,
மதிப்புக்குரிய ஜே. ஜே. விக்ரம்

குறிப்பு: அப்ளிகேஷன் பாரம் கல்லூரி அலுவலகத்தில் கிடைக்கும்.

பின்குறிப்பு: எங்கள் கல்லூரியின் சென்ற வருட சாதனையைக் கேட்டிருந்தீர். இதோ: சென்ற வருடம் எங்கள் கல்லூரியே இல்லை!

3

மதிப்புச்குரிய விக்ரம்!

கூர்க்கா, காம்பவுண்ட் சுவர், நாய் இவை இல்லாத உங்கள் கல்லூரியைத் தேடிக் கண்டு பிடிப்பதற்குள் என் (ரூ 47.95) பாடா தேய்ந்து (ரூ. 13.95 ஆக) போய் விட்டது. அதுதான் உங்கள் கல்லூரியா? நானென்னவோ அது சிமெண்ட் குடோன் என்று நினைத்து விட்டேன். நல்லவேளை ஒரு சின்ன போர்டு இருந்தது.

நேற்று நான் தங்கள் கல்லூரிக்குத் திக் விஜயம் செய்தபோது ஒரு வயதான கிழவர் தொங்கு மீசையுடன் உட்கார்ந்திருந்தார். பியூனா? அவரைத் தவிர வேறு எந்த ஓர் ஈ, காக்கையும் காணேம். பேசாமல் திரும்பி வந்து விட்டேன். ஆபீஸ் நேரத்தில் எல்லோரும் எங்கே போய்த் தொலைந்தீர்கள்?

கடுகடுப்புடன்
சரிதா.

குறிப்பு: அப்ளிகேஷன் பாரத்தைத் தபாலில் அனுப்புகிறீர்களா? சரி. பணம் எவ்வளவு அனுப்ப வேண்டும்.

பின்குறிப்பு: நேற்று சினிமாவுக்கு ஃப்ரீ பாஸ் ஏதாவது கிடைத்ததா?

4

அன்புள்ள சரிதா அவர்களுக்கு.

என்ன! கல்லூரிக்கு வந்திருந்தீர்களா? அட... டா... தெரியாமல் போய் விட்டதே? தங்களைத் தரிசிக்கும் பாக்கியத்தைத் தவற விட்டுவிட்டேனே? இப்படித்தான் சரிதா, நான் சில நேரங்களில் சில மனுஷிகளைப் பார்க்கத் தவறியிருக்கிறேன். ஒரு மூன்றரை

பாரதிக்கு அருளிய விநாயகர்

பாண்டிச்சேரியிலுள்ள பிரசித்தி பெற்ற ஸ்ரீ மணக்குள விநாயகர் ஆலயத்தில் இந்துக்கள் மட்டுமின்றிக் கிறிஸ்துவர்கள், இஸ்லாம் மதத்தவர்களும் வந்து வழி படுகிறார்கள். தென்னுப்பிரிக்கா, பிரான்சு, லண்டன் மாநகரிலுள்ள பக்தர்களின் வேண்டுதல் பேரில் கட்டளை அர்ச்சனைகள் இவ்வாலயத்தில் செய்யப்பட்டுப் பிரசாதம் அந்நாடுகளுக்குச் செல்கிறது.

ஸ்ரீ மணக்குள விநாயகர் ஆலயம் சுமார் 325 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டது. மணம் மிகுந்த ஒரு குளத்தின் அருகே விநாயகர் வீற்றிருந்ததால் இவருக்கு மணக்குள விநாயகர் என்று பெயர் வந்ததாம்.

பாரதி அடிக்கடி இவ்வாலயத்திற்குச் சென்று வழிபட்டு வந்தார். இவ்விநாயகர் பேரிலுள்ள பக்திப் பெருக்கால் "விநாயகர் நான் மணிமாலை" கவிதை இயற்றினர். "மணக்குள விநாயகா! வான் மறைத் தலைவா" என்று இவ் விநாயகரைப் போற்றிப் புகழ்கின்றார்.

- ரமா ராமநாதன்.

மணிநேரம் மட்டும் நீங்கள் காத்திருந்தால் நான் திரும்பி வந்திருப்பேன். அதற்குள் அவசரப்பட்டுப் போய் விட்டீர்களே?

தொங்கு மீசையுடன் கல்லூரியில் உட்கார்ந்திருந்தவர் பியூன் அல்ல. என் அப்பாவாக்கும், அது கிடக்கட்டும். அப்ளிகேஷன் ஃபாரம் கேட்டிருந்தீர்கள். தபாலில் அதை அனுப்புகிறோம். ரூபாய் 123.45 மட்டும் அனுப்பவும்.

முதல்வருக்காக,
ஜே. ஜே. விக்ரம்.



குறிப்பு: அட, நான் சினிமாவுக்குச் சென்றதை எப்படிச் சரியாகக் கண்டுபிடித்தாய்? நீயும் வந்திருந்தாயா?

5

ஹாய் விக்ரம்!

அநியாயமாக இருக்கிறதே? காலேஜ் — அதுவும், டுடோரியல் காலேஜ் அப்ளிகேஷன் பாரம் 123.45 ரூபாயா? அப்ளிகேஷன் பாரத்தை பிளாட்டினத் தகட்டில் அடித்து விற்கிறீர்களா? எவ்வளவு பெரிய மோசடி இது. இதற்காகவே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் உள்ளே தள்ள வேண்டும்.

நறநறநற
சரிதா


குறிப்பு: அப்ளிகேஷன் விற்றுக் கிடைக்கும் லாபத்தில் எல். ஐ. ஸி. கட்டிடத்தை வாங்கலாமென்று உத்தேசமா?

பின்குறிப்பு: அவசரமென்றால் கடனாக வேண்டுமென்றால் பணம் தருகிறேன்.

6

அன்பே! அமுதே! அருங்கனியே!

எது அநியாயம் என்கிறாய்? உன்னையெல்லாம் காலேஜில் சேர்த்துக் கொள்கிறோமே, அதைச்சொல்கிறாயா? சரி. போன மாதம் ஒரு கம்பெனிக்கு அப்ளிகேஷன் போட்டிருந்தேன். வருகிற திங்கட்கிழமை இண்டர்வியூ! போக வர டாக்ஸி, டிபன், லஞ்ச், சார்மினார் இவற்றிற்கெல்லாம் சேர்த்து ஒரு நூற்றிருபது ரூபாய் செலவு ஆகாதா? அதனால்தான் அப்ளிகேஷன் விலை ஏறிவிட்டது. எனக்குக் காதலி



ஒருத்தி இருந்திருந்தால் என் இண்டர்வியூ செலவுக்குக் காக கொடுத்திருப்பாள். எனக்குக் காதலி யாரும் இதுவரையில் இல்லை. அதனால்தான் உன்னிடம் கேட்கிறேன்! சரிதா! தா.

முதல்வர் புதல்வர்
விக்ரம்

குறிப்பு: நீ எதை எப்படிக் கொடுத்தாலும் வாங்கிக் கொள்ளத் தயார்.

பின்குறிப்பு: என்ன எல். ஐ. சி.யையா? அந்தச் சின்ன கட்டிடத்தைப் போய் யார் வாங்குவார்கள்?

7

மாண்புமிகு விக்ரம்!

தாங்கள் வேறு வேலைக்குப் போகிறீர்களா? ஏன் இந்தவேலை என்னவாயிற்று? உங்களுக்குச் சம்பளம் தருவது உலகமகா தண்டம் என்று நினைத்துக் கல்லூரியிலிருந்து கல்தா கொடுத்து விட்டார்களா? கல்லூரி நேரத்தில் 'கட்' அடித்து விட்டு 'ஜெகன்மோகினி' பார்க்கப் போனால் யார்தான் உங்களை வேலைக்கு வைத்துக் கொள்வார்கள்? ஐயோ பாவம்!

என்ன வேலைக்கு மனுப் போட்டிருக்கிறீர்கள்? பியூன் வேலைக்குத்தானே?

வெரிகுட்! வேலையுடன் திரும்பி வர வாழ்த்துகிறேன்.

உங்கள் சரிதா.

குறிப்பு: உங்களை நினைத்தால் பாவமாக இருக்கிறது. டியர், இத்தாருங்கள், இத்துடன் ரூ 500–க்கான செக் இணைத்துள்ளேன். வாலிபாப், பஞ்சமிட்டாய் இத்யாதி இத்யாதி வாங்கிக் கொள்ளுங்கள்.

8

கேட்டதும் கொடுப்பவளே!

எவ்வளவு திமிர் இருந்தால் 'பியூன் வேலைக்கு மனுப் போடுங்கள்' என்று சொல்வாய்! உனக்கு என்னைப் பற்றித் தெரியவில்லை. நான் ஜே. ஜே. விக்ரம். ராசி: கன்னி. தோஷம்: செவ்வாய், படிப்பு: எம். காம். மூன்று வருடமாக வேலைக்கு முயற்சி செய்கிறேன். ஏனோ படியவில்லை. 'சரி, ஏதாவது டுடோரியல் காலேஜ் ஆரம்பித்துப் பொழுதைப் போக்கலாமே?' என்றுதான் ஆரம்பித்தேன். நல்லவேளை! மாணவர்கள் யாரும் சேரவில்லை. இந்த நிலையில்தான் கோவிந்தாவிலிருந்து இண்டர்வியூ ஆர்டர் வந்துள்ளது.

வெற்றியுடன் திரும்புகிறேன்.

வெறுப்புடன்
விக்ரம்.

குறிப்பு: நீ அனுப்பிய பணத்துக்கு ஸ்லீபன் சார்ட், பேண்ட், ஜட்டி எடுத்துக் கொண்டேன்.

பின்குறிப்பு: டி. எச். ஏ. என். கே. எஸ்.

9

டியர் விக் அன் ரம்!

இண்டர்வியூவிற்குப் போய்விட்டு வந்தீர்களா. வேலை என்னவாயிற்று? காயா? பழமா?

ஆசையுடன் சரிதா.

'படத்தைப் பார்த்ததும் 'கேக்' ஞாபகம் வந்து உங்களுக்கு நாக்கில் நீர் சுரந்ததா? அப்படியானால் உங்களுக்கு நூற்றுக்கு நூறு மார்க்!

ஸ்பென்ஸர் அண்ட் கம்பெனி தங்கள் பேக்கரி டிவிஷன் விஸ்தரிப்பை யொட்டி நடத்தியகண்காட்சியில் இடம் பெற்றிருந்த கேக்கை வியந்து பார்வையிடுகிறார் உணவு மந்திரி சி. ஆர். எட்மண்ட். அருகில் ஸ்பென்ஸர் கம்பெனி நிர்வாகிகள்.



குறிப்பு: உங்கள் வீட்டு விலாசம் என்ன

10

மதிப்புக்குரிய சரிதா அவர்களுக்கு,

அடியேனின் வணக்கங்கள். வேலை காயா, பழமா என்று கேட்டிருந்தாய். விடையைப் பின்னால் சொல்கிறேன். அதற்கு முன்னால் இண்டர்வியூவின் போது என்ன நடந்தது என்பதைத் தெரிந்து கொள். இண்டர்வியூவின் போது பல ம. தனமான கேள்விகளைக் கேட்டார்கள். அதில் இது ஒன்று: 'உங்களுக்குப் பிடித்த பெண்மணி யார்?' நானொரு மடையன். எனக்கு வேறு எந்த பெண்–மணியைத் தெரியும்? ஏதோ நினைவில் 'சரிதா' என்று உன் பெயரை உளறிவிட்டேன். அவ்வளவுதான்! தடாலென்று எம். டி. எழுந்தார். நமஸ்காரம் செய்தார். பியூனை அழைத்துக் கொண்டு வரச் சொன்னார். காப்பியை அவர்மட்டும் சாப்பிட்டார். ''மிஸ்டர், உங்களுக்குச் சரிதாவைத் தெரியுமா?'' என்று கேட்டார். ''சரிதான். சரிதாவின் சரித்திரமே தெரியும்'' என்று கூறிவிட்டேன். எம். டி., எம்ட்டி ஆகிவிட்டார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. 'சரிதா' என்று சொன்ன உடனே இப்படி ஒரு மரியாதையா? ஆமாம், அந்தக் கம்பெனிக்கு நீ கடன் கிடன் ஏதாவது கொடுத்திருக்கிறாயா? அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரைக் கையிலே கொடுத்து விட்டார்கள்.

மாணவ மாணவிகளின் நலனை முன்னிட்டு ஜே. ஜே. ஜே. கல்லூரி ஜேஜேவென்று ஒரே யடியாக மூடப்படுகிறது. இருந்தாலும் உனக்கு நான் தனியாகப் பாடம் சொல்லித் தருகிறேன்.

மகிழ்ச்சியுடன்,
விக்ரம்.

குறிப்பு: எதற்கு என் வீட்டு முகவரி? கொடுத்த கடனை வாங்கிப் போக வருகிறாயா?

11

அன்பே விக்!

உங்கள் கடிதத்தில் ஆச்சரியக் குறிகளை அள்ளி வீசியிருக்கிறீர்கள். இதில் ஆச்சரியப் படுவதற்கு ஒன்றுமில்லை. காரணம், உங்களைப் பேட்டி கண்ட 'கோ அண்ட் விந்தா அண்ட் கோ' எம். டி. (ஓ. சி. குப்புசாமி) தான் அந்தக் கம்பெனி முதலாளி. அவர்தான் என் அப்பா. அதாவது உங்கள் வ. கால மாமனார்! எந்த மாமனாராவது தன் மருமகன் வேலையில்லாமல் தெருத் தெருவாக 'யாரோ' போல் சுற்றுவதை விரும்புவார்களா? அதனால்தான் உங்கள் மேல் பரிதாபப்பட்டு வேலை போட்டுத் தந்திருக்கிறாராக்கும். என்ன புரிகிறதா?

மாலை ஐந்து மணிக்கு ஓடியனுக்கு ஓடிவாருங்கள். உங்களுக்காகக் காத்திருக்கிறேன்.

சரிதா.

குறிப்பு: உங்கள் விலாசத்தை கா. நிலையத்தில் கேட்டதில், கிடைத்தது.

பின்குறிப்பு: ஆமாம், எந்தப் பாடத்தைத் தனியாக எனக்கு மட்டும் சொல்லித் தரப் போகிறீர்கள்?

தோற்றம் : 4-10-1954

மறைவு : 10-6-78

மிஸ் சித்ரா




நினைவு நாள் :
30-5-1979

"வாழ்க்கையைப் பற்றி வண்ண வண்ணக் கனவுகள் கண்டுகொண்டிருந்த ஒரு வண்ணப் புறா வானில் சிறகடித்து மறைந்தது. குஞ்சைப் பிரிந்து துடிக்கும் தாய்ப் பறவையின் முதலாண்டு அஞ்சலி"

இப்போது ஏராளமாக விற்பனையாகிறது

சரவணா

மாவரைக்கும் இயந்திரம்



- நீடித்த உழைப்பு
- சிக்கனமான ஓட்டம்
- கவர்ச்சியான தோற்றம்
- முழு பாதுகாப்பான கவரிங்

சரவணா இன்ஜினியரிங் டிரேடர்ஸ்

(சிந்தாமணி சூப்பர் மார்க்கெட் சமீபம்)
12/15-A கிருஷ்ணசாமி முதலியார் ரோடு
கோயமுத்தூர் 641002
PHONE : 34250 • 32321
GRAMS 'WETGRINDER'

-OSR

Proverbs to ponder :

"Better be the head of dog than the tail of a lion."

The small man's big bank



Vijaya Bank Ltd.

Registered Office : Light House Hill Road, Mangalore-575003.
Administrative Office : 2, Residency Road, Bangalore-560025.

Chairman : **M. SUNDER RAM SHETTY**

அத்தியாயம் 37

சத்யாவுடைய நிர்வாகத்தில் நிறுவனத்துக்கு ரொம்ப நஷ்டம் ஏற்பட்டிருந்தது. அவன் மோசடியும் செய்திருந்தான். ஊதாரிச் செலவுகளும் செய்திருந்தான். கணக்குகள் எழுதுவதில் தகிடுதத்தங்கள் புரிந்திருந்தான். எல்லாமாகச் சேர்ந்து அகிலினி எண்டர்பிரைஸஸின் பொருளாதாரத்தை மிகவும் பாதித்திருந்தது. போதாக் குறைக்குச் சில மாதங்களாகத் தொடர்ந்த வேலை நிறுத்தத்தால் உற்பத்தி பாதிக்கப்பட்டு நஷ்டத்தை மிகவும் அதிகரித்திருந்தது. இதையெல்லாம் புள்ளி விவரங்களுடன் அருள்ராஜ் கூறக் கேட்டறிந்து கொண்ட வைத்தியலிங்கம்,

''ஆக, முதல் காரியமாகத் தொழிலாளர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தி அவர்கள் வேலை நிறுத்தத்தை வாபஸ் பெறச் செய்யவேண்டும், வாக் அவுட்டை நீக்க வேண்டும். அப்புறம், சத்யாவின் திருவிளையாடல்களால் சீர்கெட்ட நிர்வாகத்தை செப்பனிட வேண்டும். மூன்றாவதாக தொழிலாளர் ஒத்துழைப்பைப் பெற்று உற்பத்தியை அதிகரித்து, நஷ்டத்தை ஈடு செய்து, லாபத்துக்கு அடிகோலவேண்டும்'' என்று அடிப்படையான பிரச்னைகளைப் பட்டியல் போட்டார்.

''கரெக்ட் சார்! நீங்க வந்ததும் வராததுமா தாமதிக்காமல் காரியத்தில் இறங்க விரும்புவீங்கன்னு தெரிஞ்சு யூனியன் தலைவரையும் இன்றைக்குப் பதினொரு மணிக்கு வரச் சொன்னேன். இப்ப வர நேரம்தான்'' என்றார் அருள்ராஜ்.

''தேங்க்ஸ் அருள்'' என்று சொல்லி வைத்தியலிங்கம் வாய் மூடுவதற்குள், நித்யா அறைக் கதவைத் திறந்து கொண்டு தயக்கத்துடன் எட்டிப் பார்த்தாள். ''ஸார்! மிஸ்டர் காளமேகம் வந்திருக்கிறார் உங்களைப் பார்க்க வேண்டும் என்கிறார்'' என்றாள்.

''லெட் ஹிம் வெய்ட்'' என்றார் வைத்தியலிங்கம். அவள் தலை மறைந்ததும் ''யார் இந்தப் பொண்ணு?'' என்று அருள்ராஜை வினவினார்.

''சத்யாவோட ரிஸப்ஷனிஸ்ட்.''

''டிஸ்மிஸ் ஹர். முதல்லே அந்தக் காரியத்தைச் செய்துட்டு அப்புறம் காளமேகத்தை இங்கே வரச் சொல்லு.''

''பாவம் ஸார்'' என்றார் அருள்ராஜ்.

''பாவமாவது, ஒண்ணாவது, வி. ஆர் ரன்னிங். எ பிஸினஸ். இதிலே 'ஐயோ பாவ'த்துக்கெல்லாம் இடம் கிடையாது. எனக்கு ரிஸப்ஷனிஸ்ட் யாரும் தேவையில்லை. கமான் குவிக்! குவிக்!''

அருள்ராஜ் தம்முடன் எடுத்து வந்திருந்த பிரீஃப் கேஸைத் திறந்து ஒரு கடிதத்தை நகலுடன் சேர்த்து எடுத்தார். ''நீங்க இப்படிச் சொல்வீங்கன்னு எதிர்பார்த்து வேலைநீக்க உத்தரவு, அவளுக்குச் சேர வேண்டிய தொகைக்குக் கணக்கு விவரங்கள் எல்லாம் டைப் செய்து தயாராக வைச்சிருக்கேன். கையெழுத்து ஆக வேண்டியதுதான் பாக்கி'' என்று கூறி அவர் மேஜை மீது வைத்தார்.

இப்படி அருள்ராஜ் என் என்பதற்கு முன் எண்ணெயாய் நிற்பதில் அதிசயமொன்றுமில்லை என்பதுபோல் வைத்தியலிங்கம் மௌனமாகக் கையெழுத்துப் போட்டுத் தந்தார்.

அருள்ராஜ் இண்டர்காம் பஸ்ஸரை அழுத்திப் பேசினார்: ''யாரு? அகௌண்ட்டண்ட்டா? நித்யா ஒரு கடிதத்தோடு வருவா. அவளுக்குச் சேர வேண்டியதைக் கொடுத்து அனுப்புங்க. அப்புறம் அங்கே காளமேகம் காத்திருந்தா எம். டி. ரூமுக்கு வரச் சொல்லுங்க.''

இண்டர்காம் ரிஸீவரை வைத்துவிட்டு, ''அந்தப் பெண்ணிடம் இதைக் கொடுத்து ஆறுதலா ரெண்டு வார்த்தை பேசி அனுப்பிட்டு வந்துடறேன் சார். காளமேகத்திடம் பேசிக்கிட்டிருங்க'' என்றார். தலையாட்டிவிட்டுக் காளமேகத்தை எதிர்நோக்கத் தயாரானார் வைத்தியலிங்கம்.

''வணக்கங்க. மறுபடி உங்களை ஆபீஸிலே பார்க்கிறதுக்கே ரொம்ப சந்தோஷமாக இருக்கு'' என்று கூறியபடியே உள்ளே நுழைந்தார் காளமேகம். ''அதேசமயம் உங்க குடும்பத்திலே நேர்ந்த துக்க சம்பவங்களை எண்ணி ரொம்ப வருத்தப்படறேன்.''

''நானும் ரொம்ப வருத்தப்படறேன் காளமேகம்! உங்களுக்குத் தொழிலாளர்களின் உணர்ச்சிகளைத் தூண்டி விடத்தான் தெரியுது. அவர்களைக் கட்டுப்பாட்டோடு ஒழுங்கா நடத்துகிற மாதிரி நிர்வகிக்கத் தெரியலே. அந்தத் திறமை உங்களுக்கு இல்லாததாலே என் மகன் கத்திக் குத்துக் காயங்களோடு ஆஸ்பத்திரியில் இருக்கான். என் மனைவி அவனைக் குத்துக் காயங்களோடு பார்த்த அதிர்ச்சியில் செத்தே போயிட்டா.''

''ஸார்! அன்றைக்கு நடந்துவிட்ட சம்பவங்களுக்காக நான் மட்டுமில்லே, தொழிலாளர் அனைவரும் ரொம்ப வருத்தப்படறாங்க. கூட்டம் போட்டு அனுதாபத் தீர்

மானம் நிறைவேற்றியிருக்காங்க'' என்று கூறியவாறே தீர்மானத்தின் நகலை எடுத்துத் தந்தார் காளமேகம்.

''கொடுங்க! ஒண்ணுக்கு ரெண்டா கொடுங்க. வீட்டிலே ஒண்ணு, ஆபீஸிலே ஒண்ணு ஃபிரேம் போட்டு மாட்டி வைக்கிறேன். தினம் ஒரு தடவை அதைப் பார்த்துக் கண்ணத்திலே போட்டுக்கிட்டா மனம் சாந்தி அடைஞ்சுடும்!''

''ஸார்! நீங்க கேலி பண்ணறீங்க. ஆறு அன்றைக்கு நடந்துட்ட துரதிருஷ்டவசமான சம்பவங்களுக்குத் தொழிலாளர் மட்டும் காரணமில்லே. உங்க மகன் போக்கும் ஒரு காரணம்.''

''தெரியும். அவன் செய்த தவறுகளைத் திருத்தத்தான் பலவீனமான என் இதயத்தையும்

கி.ராஜேந்திரன்

பொருட்படுத்தாமல் இப்ப நான் மறுபடி இங்கே வந்து உட்கார்ந்திருக்கேன். அதே மாதிரி தொழிலாளர் செய்த தவறான காரியங்களுக்கு நீங்க பொறுப்பேற்றுத் திருத்த முயலுங்கள்.''

''நான் என்ன செய்யணும்னு நீங்க எதிர்பார்க்கிறீங்க?''

அருள்ராஜ் இத்தருணத்தில் ஓசைப் படுத்தாமல் கதவைத் திறந்து மூடிக் கொண்டு உள்ளே வந்தார். அப்போது வைத்தியலிங்கம் சொல்லிக் கொண்டிருந்தார்: ''முதல் காரியமா வேலைநிறுத்தத்தை வாபஸ் வாங்குங்கள். நான் லாக் அவுட்டை லிஃப்ட் பண்றேன். உற்பத்தி தொடங்கட்டும்!''

''வேலை நிறுத்தத்தை வாபஸ் வாங்கறதுன்னா எப்படி? நிபந்தனை இன்றியா?'' என்று கேட்டார் காளமேகம்.

''அஃப் கோர்ஸ்!''

''அது சிரமமாச்சுங்களே!''

''காளமேகம்'' என்று நயமாக அழைத்து குரல் கரகரக்கச் சொன்னார் வைத்தியலிங்கம்: ''நான் ஒரு பெரிய தப்புப் பண்ணிட்டேன். வெட்கத்தை விட்டு ஒத்துக்கறேன். என் மகனுக்குப் பொறுப்பு வரும்னு நினைச்சுக் கம்பெனி நிர்வாகத்தை அவனிடம் ஒப்படைச்சேன். அவன் கம்பெனியை ஏகப்பட்ட நஷ்டத்துக்கு உள்ளாக்கிட்டான்.''

''அதுக்கு நாங்க பொறுப்பில்லே.''

''நீங்க பொறுப்புன்னு அவரும் சொல்லலியே'' என்றார் அருள்ராஜ்.

''என் நிலைமையை, கம்பெனி இருக்கிற நிலைமையை நீங்க கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க'' என்று தொடர்ந்தார் வைத்தியலிங்கம்: ''மோசமான நிர்வாகத்தால் ஏகப்பட்ட நஷ்டம். வேலை நிறுத்தத்தால் மேலும் அதிக நஷ்டம். இந்தச் சமயத்தில் உங்க கோரிக்கைகளை வற்புறுத்தாதீங்க. ஒத்திப் போடுங்க. எங்களுடைய நல்ல நிர்வாகம், தொழிலாளரின் கடுமையான உழைப்பு இரண்டும் சேர்ந்து கம்பெனியை மறுபடியும் உன்னத நிலைக்கு உயர்த்தட்டும். அப்ப உங்க கோரிக்கைகளை நான் நிறைவேற்றி வைக்கிறதா உறுதி சொல்கிறேன்.''

''அது சாத்தியமில்லீங்க. குறைந்த பட்சம் இருபது பர்ஸெண்ட் போனஸுக்காவது ஒத்துக்கிட்டாத்தான் வேலை மறுபடி ஆரம்ப



மாகும். மற்ற மற்ற கோரிக்கைகளை வேணும்னால் அப்புறமாப் பார்த்துக்கலாம்.''

''மிஸ்டர் காளமேகம்!'' என்று குறுக்கிட்டுப் பேசினார் அருள்ராஜ். ''நீங்களும் மிஸ்டர் வைத்தியலிங்கமும் அதாவது, தொழிற்சங்கமும் நிர்வாகமும் ஒரு கோட்டின் இருமுனைகளில் இருப்பதாக எண்ணுறீங்க. அதாவது ஒரு டக் ஆஃப் வார்!''

''ஆ! தொழிலாளர் சக்தி அளவிட முடியாதது. இந்தக் கயிறு இழுப்புப் போட்டியில் இறுதி வெற்றி எங்களுடையதாகத்தான் இருக்கும்'' என்று பெருமையாகப் பேசினார் காளமேகம்.

''ஆனா நீங்க இரண்டு பேருமே இரு முனைகளைத்தான் நினைக்கப் பார்க்கறீங்க'' என்று தொடர்ந்தார் அருள்ராஜ். ''மூன்றாவது முனை ஒன்று இருப்பதையே மறந்துடறீங்க. நீங்க ரெண்டு பேரும் ஒரு நேர் கோட்டின் இரு முனையில் இல்லே, ஒரு முக்கோணத்தின் இரு முனைகளில் இருக்கீங்க. ஒன்று தொழிலாளர் உழைப்பு, மற்றது நிர்வாகத் திறன். மூன்றாவது, மிக முக்கியமானது, மக்கள் நலன் அல்லது நாட்டு நலன். அந்த மூன்றாவது முனை மிக முக்கியமானதாலே சமகோண முக்கோணத்தின் மேல் பக்கத்தில் இருக்கு. அந்த மக்கள் நலனையே மற்ற இரு நலன்களும் தாங்கி நிற்கணும் என்பதாலே அந்த இரு முனைகளும் கீழ்ப்புறம் அஸ்திவாரமா அடிபணிஞ்சு இருக்கு!''

''என்ன ஸார் ஜியாமெட்ரி கிளாஸ் நடத்தறீங்களா?'' என்று கூறிச் சிரித்தார் காளமேகம். ''தி த்ரீ ஆங்கிள்ஸ் ஆஃப் என் ஈக்குவிலாட்டரல் டிரையாங்கிள் ஆர் இஸேம்! பார்த்தீங்களா? பள்ளிக் கூடத்தில் படிச்சது இன்னும் மறக்கலே!''

''மறக்கவும் கூடாது, காளமேகம்! மூன்று கோணங்களும் சமம். தொழிலாளர் நலனுக்கும் முதலாளி நலனுக்கும் தரப்படுகிற அதே அளவு முக்கியத்துவத்தை மக்கள் நலனுக்கும் தரணும். மிஸ்டர் காளமேகம்! நீங்க இங்கே பிடிவாதம் பிடிச்சுக்கிட்டு இருக்கிற நேரத்திலே அகிலினி என்டர்பிரைஸஸ் மருந்துகள் மார்க்கெட்டில் இல்லாததால் எத்தனை உயிர்கள் மடியும், எத்தனை வியாதிகள் குணப்படுத்தப் படாமல் இருக்கும் என்கிறதை யோசிச்சீங்களா? இதே போன்று பல தொழிலகங்களிலே உற்பத்தி பாதிக்கப் படுவதால் அந்தந்தத் தொழிலகத்துக்கு மட்டும் நஷ்டமில்லே, தேசப் பொருளாதாரத்துக்கே நஷ்டம் என்கிறதை நினைக்கப் பார்த்தீங்களா?''

''அதைத் திருவாளர் நிர்வாகியும் கொஞ்சம் யோசிக்கட்டுமே'' என்றார் காளமேகம்.

''நான் யோசிக்காமல் இல்லே ஸார்! யோசித்ததால்தான் கௌரவப் பிரச்னையை ஒதுக்கி உங்களை அழைச்சு வைச்சுப் பேசறேன். இல்லாத போனால் என் மகன் கத்திக் குத்துக்கு ஆளானதற்கும் என் மனைவி மரணமடைந்ததற்கும் காரணமான தொழிலாளர் முகத்தில் முழிக்கவே மனமின்றி இந்தத் தொழிலகத்தை மூடிவிட்டு சன்னியாசியாய்ப் போவேனே தவிர இங்கே இப்போ பேச்சு வார்த்தை நடத்திக்கிட்டு இருக்க மாட்டேன்.''

வைத்தியலிங்கம் படபடப்பதைப் பார்த்து அருள்ராஜ் கவலையுற்றார். ''அமைதியாப் பேசுங்க ஸார்'' என்று அவரைக் கேட்டுக் கொண்டு காளமேகம் பக்கம் திரும்பினார். ''மக்கள் நலனைக் கவனிக்க வேண்டியது அரசாங்கம்தான். அதனால்தான் தொழிலமைச்சர் கூட உங்களை அழைச்சுப் பேசியிருக்கார். சி. எம். கூடத் தாம் கவலைப்படுவதாகக் காட்டிக்கிட்டு இருக்கார்'' என்றார்.

''இந்தக் கம்பெனி நிர்வாகத்தினரைத் தவிர பாக்கி பேரெல்லாம் கவலைப்படத்தான் செய்யறாங்க'' என்றார் காளமேகம் வெறுப்புடன்.

''தவறு காளமேகம், நானும் கவலைப்படறேன்'' என்றார் வைத்தியலிங்கம். ''எனக்காக மட்டுமில்லே, தொழிலாளர்களை எண்ணியும் கவலைப்படறேன். தொழிலகத்தை மூடும்படி நேர்ந்தால் என்னைவிட அதிகமாக் கஷ்டப்படப் போறவங்க அவங்கதான். அதனால் ஓர் ஒப்பந்தத்துக்கு சீக்கிரமா வருவோம். இப்ப சட்டப்படி ஒரு மாத மினிமம் போனஸ் தரேன். இன்னும் ஓரிரு வருஷங்களில் கடவுள் அருளாலும் உங்க ஒத்துழைப்பாலும் எங்க நிர்வாக ஆற்றலாலும் கம்பெனி மறுபடி லாபகரமாய் நடக்கட்டும். பிறகு அதற்கேற்ற மாதிரி போனஸ் தரேன். இப்ப நீங்க கேட்கிற மாதிரி போனஸ் கொடுத்தால் ஏற்கெனவே நொடிச்சுப் போயிருக்கிற கம்பெனி நொண்ட ஆரம்பிச்சுடும்.''

''வெறுப்பையும் வேற்றுமையையும் வளர்த்துக்கிட்டே போகாதீங்க காளமேகம்'' என்றார் அருள்ராஜ். ''இணைந்து எதிர் சாய்தல் ஆக்கம், அதனை மிக ஊக்கின் ஊக்குமாம்

இன்டர்வியூவுக்கு வந்த பெண்ணிடம்:

''நீ இங்கே வருவதற்கு முன்னால் என்ன செய்து கொண்டிருந்தாய்?''

''நீங்கள் இந்தமாதிரி கேள்வி கேட்டால் என்ன பதில் சொல்வது என்று யோசித்துக் கொண்டிருந்தேன்!''

—வி. குப்புசாமி.





அரட்டைவேளை!
அட கடவுளே! நேரத்தைப்பார். குழந்தைகள் விரைவில் வீட்டுக்கு வந்துவிடும்! என்ன செய்வேன்? எந்தச் சிற்றுண்டியும் நான் தயாரிக்கவில்லையே.
கவலைப்படாதே. இந்தச் சமயத்தில் தான் சிக்கனமான, சத்து நிறைந்த குவாலிடி கோல்டன் பிஸ்கோத்துகள் கை கொடுத்து உதவுகின்றன. குழந்தைகளும் அவற்றின் சுவையை விரும்புகின்றன.
ASP-KFP-7907
kwality's
golden
BISCUITS
கெட்டியான பாக்கெட்டுகளிலும் உதிரியாகவும் கிடைக்கும்
KWALITY GOLDEN BISCUITS
IS 1011
ISI
போலிகள் ஜாக்கிரதை!
குவாலிடிஸ் கோல்டன்
ஆரோக்கியமான குடும்ப பிஸ்கட்
செலவு குறைந்தது
குவாலிடி
உணவுப் பண்டங்கள்
பெங்களூர்-560 039.
குவாலிடி உயர்தர
பிஸ்கோத்துகளைத்
தயாரிக்கிறது

KESORAM INDUSTRIES & COTTON MILLS LIMITED

9/1, R. N. Mukherjee Road, Calcutta-700001

Manufacturers of Cotton Textiles & Piece Goods, Rayon Yarn, Transparent Cellulose Film, Sulphuric Acid, Carbon-di-Sulphide, Cast Iron Spun Pipes & Fittings, Cement and Refractories etc.

Sections:	**Mills:**
Textile Section	42, Garden Reach Road, Calcutta
Rayon & T. P. Sections	Tribeni, Dist: Hooghly
Spun Pipe Section	Bansberia, Dist: Hooghly
Cement Section	Basantnagar, Dist: Karimnagar (A.P.)
Refractory Section	Kulti, Dist: Burdwan

With best Compliments from

Siemens India Limited

B-5, Jungpura, Mathura Road, P.O. Box 3316,
New Delhi-110014

Phone: 699551 (4 Lines) Telex: 031-2234
Grams: tix. 2234 Siemens New Delhi-110014

Registered Office: 134-A, Dr. Annie Besant Road, Worli, Bombay-400018

Regional Offices: Bombay – Calcutta – Madras – New Delhi

Branch Offices: Ahmedabad – Bangalore – Hyderabad – Lucknow

Representatives: Allahabad – Bhopal – Dhanbad – Durg – Ernakulam – Gauhati – Gulbarga – Hubli – Jaipur – Jamshedpur – Ludhiana – Nagpur – Patna – Rourkela – Trichur Udaipur.



ஓட்டலில் காப்பி குடிக்க மட்டும் சில பேர் வருகிறார்கள். கூட்டம் அதிகமாக இருக்கும் வேளைகளில் இவர்கள் டேபிள் அருகே காத்திருப்பது பார்க்கப் பரிதாபமாக இருக்கும். இதனால்தானோ என்னவோ, திருச்சி 'பத்மா கபே'யில் காப்பிக்கு என்று தனியாக ஓர் இடம் ஒதுக்கி வைத்துள்ளார்கள். இதில் காப்பி மட்டும் குடித்து விட்டுச் செல்லலாம்.
—ரவிகுமார்.

கேடுன்னு கேள்விப் பட்டதில்லையா நீங்க? குரோதத்துக்கு இடம் தராதீங்க!''

''என்னய்யா இது, முதலிலே ஜியாமெட்ரி பாடம் நடத்தினே, அப்புறம் பொருளாதாரப் பிரசங்கம் பண்ணினே, இப்போ திருக்குறள் வகுப்பு நடத்தறே'' என்று கோபமும் அலட்சியமுமாகக் கூறினார் காளமேகம். ''முதலாளியைப் பேச விடுய்யா!'' என்றவர் வைத்தியலிங்கம் பக்கம் திரும்பி, ''நான் முடிவா சொல்றேன் சார்! நிர்வாகப் பொறுப்பில் இருக்கிறவங்க செய்த அநீதிகள், அக்கிரமங்கள், பித்தலாட்டங்களின் விளைவா நஷ்டம் வந்தால் அதுக்காகத் தொழிலாளர் வயிற்றில் அடிப்பது நியாயமில்லே. அது உங்களுடைய பிரச்னே. தொழிலாளர் கேட்கிற இருபது சதம் வேண்டாம், அட்லீஸ்ட் பதினைந்து சதம் போனஸ் கொடுங்க. அவங்க உங்களுக்கு ஒத்துழைப்புத் தருவாங்க. அதைத் திறமையாகப் பயன்படுத்தி உங்க மகனால் ஏற்பட்ட நஷ்டம், இப்போ போனஸ் தருவதாலே ஏற்படற நஷ்டம் எல்லாத்தையும் துடைச்சுட்டு லாபம் ஏற்பட வழி வகுக்கிறது உங்க சாமர்த்தியத்தைப் பொறுத்தது.''

''காளமேகம்! நீங்க கேட்பது சட்டபூர்வமாகவும் சரியில்லே, தர்மத்துக்கும் ஒத்து வரலே, பொருளாதார ரீதியிலும் பொருத்தமாயில்லே'' என்றார் வைத்தியலிங்கம்.

''சரி ஸார், உங்களுக்காக நான் தொழிலாளர் கிட்டே ரொம்ப வாதாடிப் பதிமூணு பர்ஸண்டுக்கு ஒப்புக் கொள்ளச் சொல்றேன். ஆனா... அதுக்கு ஒரு விலை இருக்கு..!''

காளமேகம் என்ன சொல்கிறார் என்பது வைத்தியலிங்கத்துக்குத் தெளிவாகவே புரிந்தது. தொழிலாளர்களையே விலை பேசி நல்ல லாபத்துக்கு வியாபாரம் பண்ணுகிறவர் காளமேகம் என்று ஏற்கெனவே அவர் உணர்ந்திருந்ததற்குப் புதிய அத்தாட்சி கிடைத்தது.

'இந்த வாய்ப்பை நழுவ விட வேண்டாம்' என்று அருள்ராஜுக்குக் கூடத் தோன்றியது. ''ஸார், ஒன் மினிட்...'' என்று அவர் ஏதோ ஆரம்பித்தார். தமது கரத்தை உயர்த்தி அவர் வாயை அடைத்துவிட்ட வைத்தியலிங்கம், காளமேகத்தை நேருக்கு நேர் பார்த்தார். ''ஸாரி, காளமேகம்! நான் நீங்க குறிப்பிடுகிற விலையைக் கொடுக்கவும் தயாராயில்லே, பதிமூணு பர்ஸண்ட் போனஸுக்கு ஒப்புக் கொள்ளவும் போறதில்லே. இட் இஸ் இம்பிராக்டிகல்.''

''அப்ப நானும் மேலே பேசறதுக்கு ஒண்ணுமில்லே ஸார், வரேன்'' என்று கூறி எழுந்து விரைப்புடன் வேகமாக நடந்தார் காளமேகம்.

அவர் தலை மறைந்ததும் அருள்ராஜைத் துயரத்துடன் பார்த்தார் வைத்தியலிங்கம். ''பரமபத சோபன விளையாட்டிலே ஏணிங்க உதவியோடு ஏறிக்கிட்டே போய்க் கடைசிலே பாம்பு விழுங்கி விட சர்ர்ர்ன்னு ஆரம்பிச்ச இடத்துக்கே திரும்பி வந்து சேர்ந்துடுவோம் இல்லியா? பாக் டு ஸ்குவேர் நெம்பர் ஒன்!'' என்றார்.

''ஸார்! உங்க நல்லெண்ணத்தை அவங்க புரிஞ்சுக்கலே. இட் இஸ் ரியலி டிராஜிக்!'' என்றார் அருள்ராஜ். அவர் கண்கள் கலங்கியே விட்டன.

காம்பவுண்டு சுவருக்கு வெளியே கூட்டமாய் நின்ற தொழிலாளர் கோஷம் எழுப்புவது தோட்டத்தைக் கடந்து ஏ. ஸி. செய்யப்பட்டு அடைத்து வைக்கப்பட்டிருந்த அறையிலும் இலேசாக ஒலித்தது. வைத்தியலிங்கம் எழுந்து போய் ஜன்னல்களைத் திறந்தார். ஏ. ஸி.யை நிறுத்தினார். கம்பெனியே சரியாக இயங்காத போது இந்த ஆடம்பரங்கள் எதற்கு என்பது போலிருந்தது அவர் செய்கை.

ஜன்னல்களைத் திறந்து அவர் வெளியே பார்க்கிறார் என்பது தெரிந்ததும் தொழிலாளர் கோஷங்கள் அதிகரித்தன:

''வேஷம் போடாதே — வயிற்றில் அடிக்காதே!

நஷ்டப்பாட்டுப் பாடாதே — எங்கள் கஷ்டம் தீராதே!

மகன் வந்தான் — மானம் போச்சு!

அப்பன் வந்தான் — நியாயம் போச்சு!

முதலாளித்துவம் ஒழிக!

தொழிலாளர் நலன் வெல்க!''

சற்றுநேரம் அப்படியே அசையாமல் சிலையாக நின்றார் வைத்தியலிங்கம்.

அவர் உணர்ச்சிவசப்படாமல்இருக்க வேண்டுமே என்று அருள்ராஜுக்குக் கவலையாக இருந்தது. சரேலென்று திரும்பினார் வைத்தியலிங்கம். மனத்துக்குள் ஒரு முடிவுக்கு வந்து விட்டவர் போல அவர் முகத்தில் உறுதி தெரிந்தது.

''அருள்ராஜ்!'' என்று கம்பீரமாக அழைத்தார். ''என்னோட நல்லெண்ணத்தை அவங்க புரிஞ்சுக்கலேன்னு சொன்னீங்க இல்லே! புரிய வைக்கிறேன்! காளமேகத்திடம் ஓரிரு நாளில் மறுபடி சந்திக்கலாம்னு சொல்லுங்க!'' என்றார். (தொடரும்)



ஒன்றுமறியா குழந்தைகள் தீப்பெட்டிக் குச்சிகளை வைத்து விளையாடுவதால் ஏற்பட்ட விபரீத தீ விபத்துக்கள் பலப் பல.

தீக்குச்சிக் கொளுத்தி தீ விபத்தைக் கொணராதீர்கள்

1. தீப்பெட்டிகள், லைட்டர்கள், விளக்குகள் போன்றவற்றை குழந்தைகளுக்கு எட்டாத தூரத்தில் வைக்கவும்.
2. தீப்பெட்டிகளை ஸ்டவ், அடுப்பு அல்லது பற்றக் கூடிய இடங்களுக்கு அருகில் வைக்கக் கூடாது.
3. எப்போதும் தீக்குச்சியை தூரத்தில் பிடித்துக் கொளுத்தவும்.
4. உபயோகித்தபின் தீக்குச்சியை அதற்காக வைத்துள்ள ஆஷ் ட்ரே போன்ற காலி டப்பாவில் போடவும்.
5. முற்றிலும் அணையாத தீக்குச்சிகளை குப்பைகள் அல்லது கிழிந்த காகிதங்கள் போடும் கூடைகளிலோ கழிவுப் பொருட்களின் குவியலிலோ போடக்கூடாது. அதாவது, அவ்விடங்களிலிருந்து புகையோ, தீக்கங்கோ வழி வகுக்க கூடாது.

லாஸ் ப்ரிவென்ஷன் அசோஸியேஷன்—நாங்கள் ஒத்த மனமுடையவர்களுடன் ஒத்துழைக்க விரும்புகிறோம். அப்படிப் பட்டவர்களின் ஈடுபாட்டை வரவேற்கிறோம். தயவு செய்து விபரங்களுக்கு எழுதவும்

LPA

இழப்பைத் தவிர்த்திடுவோம். வளத்தைப் பெருக்கிடுவோம்.

லாஸ் ப்ரிவென்ஷன் அசோஸியேஷன் ஆஃப் இந்தியா லிட்.

வார்டன் ஹவுஸ், சர் பி.எம். ரோடு, பம்பாய் 400 001.

CASLPA-6-172 TAM

ராஜாஜி வாழ்க்கை வரலாறு

ராஜ்மோகன் காந்தி

தூத்துக்குடியில் ராஜாஜி கூறினார்:

''மக்கள் புரட்சி செய்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் அரசியல் சட்டம் என்ற தத்துவத்தையா தாக்க முடியும்? அல்லது அரசு அறிக்கைகளுக்கும் சட்டங்களுக்கும் எதிராகப் படை திரட்டி நடத்திச் செல்ல முடியுமா? அவர்கள் இங்கே ஒரு கோட்டையைப் பிடிக்க வேண்டும். அங்கே ஒரு கொத்தளத்தைத் தகர்க்க வேண்டும். இங்கே ஓர் ஆயுதக் கிடங்கைக் கைப்பற்ற வேண்டும். அங்கே ஓர் அரணைத் தகர்க்க வேண்டும். யுத்தங்களில் எப்படியோ அதே போல் தான் சாத்விக சட்ட மறுப்பிலும். பொதுவான நோக்கத்தை விட்டுவிட்டுக் குறிப்பிட்ட அம்சங்களில் கவனம் செலுத்த வேண்டும். சட்டமறுப்பு, உப்புவரிக்கு எதிராகவோ நிலவரி நோக்கியோ அல்லது வேறு ஏதாவது ஓர் அம்சத்தைப் பார்க்கவோ திருப்பி விடப்பட வேண்டும். அது தான் இறுதி லட்சியம் என்பதல்ல. ஆனால் இப்போதைக்கு அதுதான் நமது குறிக்கோள். நாம் குறி பிசகாமல் அதனைத் தாக்க வேண்டும்.''

மேலும் உப்புவரி என்பது அத்யாவசியப் பண்டம் ஒன்றின் மீது விதிக்கப்பட்ட வரியாகும். அரசு உருவாக்குகிற ஏற்றத் தாழ்வுகளில் ஒன்று. இயற்கை அளித்த வெகு மதியான அதன் விலையை ஒரேயடியாக உயர்த்தியது அந்த வரி. உப்பைப் பிரித்து எடுக்க என்ன செலவாகுமோ அதுதான் உப்பின் விலையாக இருக்க வேண்டும்.

எதிர்பார்த்தவாறே, தென் நாட்டின் சம்பிரதாய அரசியல்வாதிகள் முதலில் ஆட்சேபணைகளை எழுப்பினார்கள். சட்டசபைகளைப் பகிஷ்கரிப்பது என்று எடுக்கப்பட்ட முடிவு காரணமாக மாகாண காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டியிலிருந்து அதன் தலைவரும் காரியதரிசியும் ராஜினாமா செய்ய நேர்ந்தது. அவர்களுடன் சேர்ந்து ஸ்ரீனிவாச அய்யங்காரும் சத்தியமூர்த்தியும் ராஜினாமா செய்தனர். இதுபோன்ற நிகழ்ச்சிகள் தமிழ் நாட்டின் தலைமைப் பொறுப்பை ஸி. ஆரின் தோள்களில் மீண்டும் சுமத்தின. காரியக் கமிட்டியிடமிருந்து ஸி. ஆர்., தமிழ்நாட்டில் சாத்விகச் சட்டமறுப்பு நடத்த அனுமதி பெற்றார். இதனைத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஊர்ஜிதம் செய்தது.

இப்போது மகாத்மா இயங்கினார். வைஸ்ராய்க்கு அவர் எழுதிய கடிதத்தில் பூரண சுயராஜ்யத்தையோ அல்லது பிரிட்டனின் மேலாதிக்கத்துடன் கூடிய சுதந்திரத்தையோ அவர் கோரவில்லை. ''உப்பு வரியை ரத்து செய்யுங்கள்'' என்றுதான் கேட்டார். ''இச்சட்டம் பற்றி அரசு புனராலோசனை செய்யவில்லை யெனில் தாமும் தமது ஆசிரம ஊழியர்களும் அந்தச் சட்டத்தைத் தகர்க்க நேரிடும்'' என்று குறிப்பிட்டார்.

அவரது வேண்டுகோளுக்கு இணங்க ஓர் இளம் ஆங்கிலேயர் — கடவுள் பயத்துடன் மிகத் தூய்மையான புனித வாழ்க்கை நடத்தும் குவேக்கர் சங்கத்தினருள் ஒருவர் — ரெஜினால்ட் ரெனால்ட்ஸ் கதர் உடை அணிந்து வைஸ்ராயிடம் சென்று காந்திஜியின் கடிதத்தைத் தந்தார். இதன் மூலம் மகாத்மா பிரிட்டிஷ் ஆட்சியைத்தான் எதிர்க்கிறோம், பிரிட்டிஷ் மக்களை அல்ல என்று பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் உணர்த்த விரும்பினார். தமக்குத் தாமேயும் இதனை ஞாபகப் படுத்திக் கொள்ளவும் செய்தார்.

வைஸ்ராய் உடனே நறுக்குத் தெறித்தாற் போலப் பதில் எழுதி விட்டார். அவருடைய நாலு வரிச் செய்தி, ''பொது அமைதிக்கு ஆபத்து ஏற்படுவதை காந்தி வரவேற்றுக் கொண்டிருக்கிறார்'' என்று கூறியது.

''முழங்கால் மண்டியிட்டு நான் ரொட்டி கேட்டேன்; ஆனால் எனக்குக் கிடைத்ததோ கல்தான்'' என்றார் மகாத்மா. ''பிரிட்டன் பலவந்தத்தைத்தான் மதிக்கிறது; ஆழ்ந்த ஈடுபாட்டுடன் கூடிய கோரிக்கைகளை அல்ல'' என்று கண்ட அவர், அகிம்சா சக்தியைப் பிரயோகித்துப் பார்க்கத் தீர்மானித்தார். பொது அமைதி பற்றி வைஸ்ராய் குறிப்பிட்டிருந்ததை யொட்டி காந்தி சொன்னார்: ''இந்தியா முழுவதுமே நிலவுவது ஒரு சிறைக் கூட அமைதிதான். மாறுதலற்ற இடைவிடாத இந்தத் துயர அமைதியை உடைத்தெறிய வேண்டியது என் புனிதப் பணி!''

இந்தக் கடமையைத் தண்டியில் உப்புச் சட்டத்தை மீறுவதன் மூலம் நிறைவேற்றப் போவதாக அறிவித்தார் மகாத்மா. சபர்மதியிலிருந்து 241 மைல் தூரத்தில் மேற்குக் கடற்கரையில் இருந்த தண்டி * கிராமத்தை-

---

* உப்பு சத்தியாக்கிரஹத்தின் பொன் விழா ஆண்டு இது: 1979.

* காந்திஜியின் மிகப்பிரசித்தமான தண்டி யாத்திரை



அடைய நடந்தே செல்லப் போவது இந்தியாவின் முதல் தரமான பிரஜைகள்: அவருடைய ஆசிரம சக ஊழியர்கள் 78 பேர். இவர்கள் துன்பத்தைச் சகித்துக் கொள்ளத் தயாராயிருந்தார்கள். அனைவரும் அஹிம்சை அனுஷ்டிப்பதாகச் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

காந்தியைக் கவனித்துக் கொண்டிருந்த வைஸ்ராய்க்கும் போலீஸாருக்கும் குழப்பமாகவும் புதிராகவும் இருந்தது. அவரைக் கைது செய்து நாட்டில் ஒரு புயல் உருவாகச் செய்வதா அல்லது கைது செய்யாமலிருந்து அவர் சட்டத்தை மீறுவதை அனுமதிப்பதா? இரு வழிகளில் எதைத் தேர்ந்தெடுப்பது என்பதை நிர்ணயிப்பது எளிதாக இல்லை. இந்திய மக்கள் உசுப்பி விடப்பட்டவர்களாக, உணர்ச்சி வசப்பட்டவர்களாகக் காந்தியைக் கவனித்தார்கள். ஐரோப்பிய, அமெரிக்கப் பத்திரிகையாளர்கள் மூலம் செய்திகளை அறிந்த உலக மக்கள் ஆவல் குறுகுறுப்புடன் என்ன நடக்கப் போகிறது என்று பார்த்தார்கள்.

மார்ச் 12ம் தேதி மகாத்மாவும் அவரது 78 சக யாத்திரிகர்களும் பிரார்த்தனை செய்துவிட்டுப் புறப்பட்டார்கள். ''கையில் தடி தாங்கி குஜராத்தின் புழுதி மிக்க சாலைகளில் தெளிந்த பார்வையுடன் உறுதியாக அடியெடுத்து வைத்து நடக்கிறார்'' என்று ஜவாஹர்லால் எழுதினார். அவருக்கு இதற்குள் இந்த யாத்திரையில் பூரண நம்பிக்கை விழுந்து விட்டது.

ஆங்கிலேயர் சிரித்தார்கள், அவர்களை முகஸ்துதி செய்யும் இந்தியர்களும் அச்சிரிப்பை எதிரொலித்தார்கள். காங்கிரஸுக்குள்ளேயே இருந்த அறிவாளிகள் குழம்பினார்கள். அசைவற்று இருந்த மாபெரும் இந்தியா சிலிர்த்தெழ ஆரம்பித்தது!

அறுபத்தோரு வயதான காந்திக்கு நடந்து நடந்து பழக்கம். வேகமாக அடியெடுத்து வைத்தார். மூன்று வாரங்களுக்கு மேல் அவரும் அவரது குழுவினரும் நடந்தனர். கிராமங்கள் அலங்கரிக்கப் பட்டிருந்தன; கொடிகள் பறந்தன. குடியானவர்கள் அவருக்காகக் காத்திருந்தனர். அவருடன் சேர்ந்து நடந்தனர். நடப்பவர்களின் எண்ணிக்கை பெருகியது. மகாத்மா சென்ற பாதையில் பணியாற்றிய கிராமாதிகாரிகள் கிட்டத்தட்ட நானூறு பேர்கள் தங்கள் உத்தியோகத்தைத் துறந்து ராஜினாமா செய்தார்கள்

> ✕ ராமனுதபுர மாவட்டம் அபிராமத்தில் டாக்டர் ஜின்னா மருத்துவமனையில் எழுதப் பட்டிருக்கும் ஒரு வாசகம்:
> ''மருந்து கொடுப்பது மருத்துவன் கடமை; ஆனால் நோய் தீர்ப்பது இறைவன் செயலே!'' - கமுதிமணி



32. நடை பயின்ற நூறு ரத்தினங்கள்

சென்னை அரசு பெரிய பிரச்னை ஏதும் எதிர்பார்க்கவில்லை. பாத யாத்திரைக்குரிய மார்க்கத்தை ஸி. ஆர். ஏப்ரல் ஆரம்பத்தில் தீர்மானித்து விட்ட பிறகும் கூட அரசு மெத்தனமாகவே இருந்தது. 'இதில் பங்கு கொள்ளத் தீர்மானித்திருப்பவர்களின் எண்ணிக்கை மிகச் சொற்பமாகவே தோன்றுகிறது' என்று சென்னை அரசு தில்லிக்கு எழுதியது. 'இவர்களுக்குத் தேவைப்படும் பணம் கிடைப்பது அரிது. அது பெரிய தடங்கலாக இருக்கும்' என்ற தனது கணிப்பையும் குறிப்பிட்டது.

அரசின் இந்த நம்பிக்கைக்கு ஆதாரம் இல்லாமல் போகவில்லை. சுயராஜ்யக் கட்சியினர் சட்ட மறுப்பில் ஆர்வம் காட்டவில்லை. மக்களின் ஒரு கணிசமான பகுதியினர் காங்கிரஸின் தவறுகளையோ அல்லது பிராமணர்களின் குற்றங்களையோ எடுத்துக் காட்டினும் அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு ஆதரவு தந்தார்களே யொழிய பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துப் பேசிப் புரட்சி செய்யுமாறு அழைத்தால் அதே அளவுக்கு ஆதரவு தரவில்லை.

இருப்பினும் ஸி. ஆர். உறுதியாக இருந்தார். அவர் படையும் பணமும் திரட்டி வந்தார். 'நீண்ட காலச் சிறை வாசத்துக்கும் மரணத்துக்கும் கூடத் தயாராக இருப்பவர்கள்தாம் இந்தப் பாத யாத்திரைக்குத் தகுதியுடையவர்கள்' என்றார். தாம் சென்றடைய வேண்டிய இடம் தஞ்சைக் கடற்கரைப் பகுதியில் வேதாரண்யம் எனத் தேர்ந்தெடுத்தார். திருச்சியிலிருந்து புறப்படும் பாத யாத்திரிகர்கள் 150 மைல் நடப்பார்கள். இரண்டு பெரிய அனுகூலங்கள் வேதாரண்யத்தில் உண்டு. வசதியான உப்பு நீர்த்தேக்கங்கள் இருந்தன. போராட வருவோரை வரவேற்கத் தயாராக வேதரத்தினம் பிள்ளையும் இருந்தார்.

பாத யாத்திரை தொடங்கப் பத்து நாட்கள் இருக்கும் போது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஏகமனதாக ஸி. ஆரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. சென்னை அரசின் கணிப்பு தவறி விட்டது. ஸி. ஆரின் பிரச்னை, போராட்டத்தில் ஈடுபட ஆட்களைத் தேடுவது அல்ல, பங்கேற்க முன் வரும் தொண்டர்களில் யாரை நிராகரிப்பது என்பதாகத்தான் இருந்தது! கவனமாகத் தேர்ந்தெடுத்தார் அவர். ஒவ்வொரு நபரிடமும் தமது நிபந்தனைகளைக் கூறி அதன்மேல் வாக்குறுதி பெற்றார். முதல் எட்டு தொண்டர்களை அவரது ஆசிரமமே வழங்கியது. (தொடரும்)

விவாகரத்து விரும்பத்தகாததா?

எங்கே போகிறோம்?

[திருமதி ஜெயந்தி நடராஜன் இளைய தலைமுறையைச் சேர்ந்த ஒரு சட்ட நிபுணர். சமுதாய நல நோக்கும், உள்ளவர். அவரிடம் நமது நாட்டு விவாகரத்து சட்டத்தின் அம்சங்களையும், அவற்றால் நமது சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களையும் பற்றிக் கேட்டபோது...

கேள்வி: 'விவாக ரத்து' என்பது மேற்கத்திய நாடுகளில் தற்போது மலிந்து கிடக்கும் ஒரு சமுதாய மலினம். நம் நாட்டில் சமீபத்தில் விவாகரத்து சட்டங்களைத் திருத்தி ஒரு கணவனோ மனைவியோ விவாகரத்து செய்து கொள்வதைச் சுலபமாக்கி இருக்கிறார்கள். இவ்வாறு செய்திருப்பதால் நமது சமுதாயமும் பாதிக்கப்படாதா?

ஜெயந்தி: 'விவாகரத்து' என்பதை ஒரு சமுதாயப் பிரச்னையாக நான் கருதவில்லை. அது ஒரு தனி மனித பிரச்னை. ஒரு கணவனுக்கும் மனைவிக்கும் இடையே சுமுகமான உறவு நிலை முறிந்து, இருவரும் தொடர்ந்து சேர்ந்து வாழ்வதைவிடப் பிரிந்து வாழ்வதன் மூலம்தான் இருவரது வாழ்க்கையும் முன்னைவிட நல்லபடி இருக்க முடியும் என்கிற நிலை உருவானால் விவாகரத்து செய்து கொள்வதுதானே சரியான வழி? இம்மாதிரி விவாகரத்து செய்து கொள்ள விரும்புபவர்களுக்கு உதவும்படியாகச் சட்டம் இருக்க வேண்டியது அவசியம் தான். அதோடு நடைமுறைக்கு உதவும்படி அதை எளிமையாக்குவதும் அவசியம்தான்.

கேள்வி: கருத்து வேறுபாடும், கோபதாபமும் கொண்ட கணவனும் மனைவியும் சிறிது காலம் போனால் மனம் மாறி மனமொத்தவராகி விட வாய்ப்புண்டு. இந்நிலையில் எதிர்காலத்தில் மறுபடியும் மனமொத்து வாழக்கூடிய வாய்ப்புள்ள ஒரு தம்பதியை நிரந்தரமாகப் பிரித்துவிட 'விவாகரத்துச் சட்டம்' ஊக்குவிக்கிறது என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா?

ஜெயந்தி: இதைச் சரியான வாதமாக என்னால் ஏற்க முடியவில்லை. 'விவாகரத்துச் சட்டம்' இருக்கிறது என்பதால் உடனே எந்தக் கணவனோ மனைவியோ அதை நாடிப் போய்விட மாட்டார்கள். மாறாக இனி சேர்ந்தே வாழ முடியாது என்கிற நிலையில் உள்ள தம்பதியருக்கு இச்சட்டம் எந்த அளவுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்று எண்ணிப் பாருங்களேன்!



திருமதி ஜெயந்தி நடராஜன்

கேள்வி: ஹிந்து சம்பிரதாயப்படி திருமணம் செய்து கொண்டவர்கள் விவாகரத்துச் செய்து கொள்ளச் சட்டம் அனுமதி அளிக்கிறதா?

ஜெயந்தி: ஓ... தாராளமாக!... 1955ல் கொண்டு வரப்பட்ட 'ஹிந்து திருமணச் சட்டம்' மூலம் சம்பிரதாயப்படி திருமணம் செய்துகொண்ட இந்துக்கள் கூட சட்டப்படி விவாகரத்து செய்து கொள்ள வழிசெய்யப்பட்டுள்ளது!

கேள்வி: திருமணமாகி மூன்றாண்டுகள் கழிந்த பிறகுதான் கணவனோ மனைவியோ விவாகரத்துக் கோரி சட்டத்தின் உதவியை நாடலாம் என்று ஹிந்து திருமணச் சட்டத்தில் இருந்த ஷரத்தை தற்போது ஓராண்டு ஆனாலே போதும் என்று மாற்றியுள்ளதாக அறிகிறோமே! இதனால் காலப் போக்கில் மனம் மாறி ஒன்றிணைய வாய்ப்புள்ள தம்பதியர் கூட விரைவாகச் சட்டத்தை அணுகிப் பிரிந்துவிட மாட்டார்களா?

ஜெயந்தி: இந்தக் கருத்தையும் நான் ஒப்புக்கொள்ளவில்லை. அடிப்படையாகக் கணவனுக்கும் மனைவிக்கும் மனமுறிவு ஏற்பட்டு விடுமானால் மூன்றாண்டுகள் என்ன, எத்தனை ஆண்டுகளானாலும் அவர்களால் மனமொத்து வாழ்வது முடியாததாகும். அத்தகைய நிலையில் உள்ளவர்கள் மூன்றாண்டுகள் வேண்டா வெறுப்புடன் வாழ்வதைவிட ஓராண்டிலேயே பிரிவது தானே சிறந்தது. அத்தகைய தம்பதியருக்கு உதவுவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது இம்மாற்றம்!

கேள்வி: கணவனோ, மனைவியோ நெறி தவறி வாழ்வது (Living in Adultery) விவாகரத்துக் கோர ஒரு காரணமாக இருந்தது. தற்போது இதனைத் திருத்தி, கணவனோ, மனைவியோ ஒரு தடவை தவறிப் போயிருந்தால்கூட (Single act of adultery) அது விவாகரத்துக் கோரச் சரியான காரணமாக ஏற்கப்பட்டுள்ளது. இது சரியா? உணர்ச்சி வசப்பட்டு ஒரு முறை தவறு இழைப்பவர்கள் பின்னர் மனம் வருந்தித் திருந்தலாம் அல்லவா?

ஜெயந்தி: சட்டம் வழி வகுக்கிறதே தவிர, இம்மாதிரி தவறுபவர்களை விவாகரத்து செய்யத்தான் வேண்டும் என்று சட்டம் வற்புறுத்தவில்லையே? தவறு

நாங்கள்
வருங்காலத் தண்ணீரை நம்பி
நிகழ்காலத் தாகத்தைத்
தள்ளிப் போடுகிறோம்.

எங்களில் பலர்
நாளோடுகளின்
வேலைவாய்ப்புக் 'கால'ங்களிலேயே
'ரிடையர்' ஆகி விடுகின்றனர்.

நிழல் வழங்காத
காய்ந்த மரம் பட்ட மரம்
இந்த நீதியில்
எங்கள் வாழ்வில்
நிழல் வழங்காத படிப்புக்கும்
முன்னோர் தீர்க்கதரிசனமாக
வைத்த பெயர்
'பட்ட'ப் படிப்பு!



படித்து முடித்ததும்
வேலையில்லா நிலைமையெனும்
பெண்ணை கைத்தலம் தந்து
காலமெல்லாம் வாழ வேண்டும்
என்று உத்தரவு வழங்கி
எங்களை பதிவு செய்து கொள்ளும்
வேலைவாய்ப்பு அலுவலகங்கள்
வெறும்
திருமணப் பதிவு அலுவலகங்களே!

இனியும்
நேர்மையாக உழைக்கத் துடிக்கும்
எங்கள் உணர்வுகளுக்கு
சந்தர்ப்பம் வழங்கப்படாவிடில்...
அரசியல் வாதிகளாகி விடுவோம்
ஜாக்கிரதை?

— வேங்கடேச ரவி

◆◆

செய்தவர்களை விவாகரத்து செய்வதும், மன்னிப்பதும் அவரவர் மனப்பான்மையைப் பொறுத்தது!

கேள்வி: மனைவி இருக்கும் போது ஒன்றிற்கு மேற்பட்ட தாரங்களை மணந்து கொள்ளக் கூடாது என்று இந்து திருமணச் சட்டம் தடை விதிக்கிறது. முஸ்லீம்கள் மட்டும் ஒன்றிற்கு மேற்பட்டு மணந்து கொள்ளலாம் என்று சட்டம் அனுமதி அளிக்கிறதே! இது எவ்விதத்தில் நியாயமானது?

ஜெயந்தி: Marriage laws are personal laws. ஆகையால் அச்சட்ட விதிகள் அந்தந்த மதத்தின் அடிப்படையில் உள்ளன. நமது நாடு ஒரு மதச்சார்பற்ற நாடு. அந்தந்த மதத்தினரின் பழக்க வழக்கங்களை மதிக்க வேண்டியது அவசியமாகிறது.

கேள்வி: நாட்டின் ஜனத்தொகை அடிப்படையில் நோக்கும் போது பலதார முறை தவிர்க்க வேண்டியது அவசியம் இல்லையா?

ஜெயந்தி: அந்த நோக்கில் சரியென்றாலும் கூட, அரசாங்கம் இவ்விஷயத்தில் தலையிட்டுச் சட்டத்தை இயற்ற முடியாது! முஸ்லீம்களிடம் இயல்பான மனமாற்றம் நாளா வட்டத்தில் ஏற்பட்டு வருகிறது. இனியும் இம்மனமாற்றம் தொடரும் என நம்ப வேண்டியதுதான்.

கேள்வி: விவாகரத்துக் கோர கணவனோ, மனைவியோ சட்டத்தை நாடக்கூடிய மற்ற முக்கியமான அம்சங்களைக் கூறுங்களேன்...

ஜெயந்தி: கணவனும் மனைவியும் ஒன்றாக வாழ்ந்து கொண்டிருந்தாலும் கணவன் மனைவியைச் சரியாகக் கவனித்துக் கொள்ளாமல் புறக்கணித்தால் விவாகரத்து கோர அதனை ஒரு காரணமாகக் காட்டலாம்.

ஆணும், பெண்ணும் மனமுவந்து அளித்த சம்மதத்தின் பேரில் நடந்த திருமணம்தான் செல்லுபடியாகும். திருமணத்துக்குப் பிறகு இருவரில் ஒருவர் சட்டத்தை நாடித் தங்களது சம்மதம் கட்டாயத்தின் பேரில் பெறப்பட்டதாக நிரூபித்தால் அதன் அடிப்படையில் விவாகரத்து வழங்கச் சட்டம் அனுமதி அளிக்கிறது.

மணமகனும் மணமகளும் மூளைக் கோளாறு போன்றவற்றால் பாதிக்கப்படாமல் தெளிந்த அறிவுடன் சம்மதம் அளித்திருக்க வேண்டும். அப்போதுதான் திருமணம் சட்டப்படி செல்லுபடியாகும்.

தவறான தகவல்களைக் கொடுத்து அதன் அடிப்படையில் திருமணம் நடந்து இருக்குமானால் அதைக் காரணம் காட்டி விவாகரத்துக்காகக் கணவனோ மனைவியோ சட்டத்தை நாடினால் சட்டம் அவர்களுக்கு உதவ முன்வரும்.

கேள்வி: தாம்பத்திய உறவு அனுபவிக்க இயலவில்லை (Impotency) என்ற காரணம் காட்டிக் கணவன் மனைவியையோ, மனைவி கணவனையோ விவாகரத்து செய்யச் சட்டம் அனுமதிக்கிறதல்லவா?

ஜெயந்தி: ஆமாம். இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் தாம்பத்திய உறவுக்குத் தான் தகுதியில்லை என்று கணவனோ, மனைவியோ தானாக சட்டத்தை நாடிப் போனால் அது அனுமதிப்பதில்லை. கணவனின் குறையை மனைவியோ மனைவியின் குறையைக் கணவனோதான் எடுத்துக் காட்டி விவாகரத்து கோர வேண்டும்!

கேள்வி: விவாகரத்துச் சட்டம் எந்த அளவுக்கு மக்களிடையே பிரபல்யமாக உள்ளது, மக்களால் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது?

ஜெயந்தி: உயர் மட்ட வகுப்பினரும், உயர் மட்ட நடுத்தர வகுப்பினரும் பயன்படுத்திக்கொள்கின்றனர். இச்சட்டம் மிகவும் உபயோகமான ஒன்று. ஆனால் நமது சமுதாயத்தில் ஒரு பெரிய குறை, விவாகரத்து செய்யும் நிலை ஒரு பெண்ணுக்கு ஏற்படுமானால் அவளை அனுதாபக் கண்ணோடு பார்க்காமல் ஏதோ விரும்பத்தகாத நபரைப் போல நடத்துகிறார்கள். இது வேதனை தரும் விஷயம்.

பேட்டி : நாயகன்

புகைப்படம்: மன்னை மூர்த்தி

பின்புற அட்டைப் படத்தில் நடிப்பவர்கள் : ராம்பிரசாத்; குமாரி ஹேமமாலினி.
புகைப்படம் எடுத்தவர்: உத்ரா.

பொண்ணு ஊருக்குப் புதுசு

படவிமர்சனம்



'புலியைப் பார்த்துப் பூனை...' என்றொரு பழமொழி உண்டல்லவா? அப்படி ஆசைப்பட்டால் பூனைக்குக் கோடு வராது தழும்புதான் நிலைக்கும்.

கிராமத்துக் கதைகள் சில தமிழ்த் திரையில் 'சக்ஸஸ்' ஆகும்போது எல்லாரும் அதே பாதையில் ஓடினால் எப்படியாகும் என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டுத்தான் இந்தப் பொண்ணு! திரு. செல்வராஜ் அவர்கள் 'நிறையச் சொல்ல வேண்டும்' என்று ஒரே படத்தில் பல ஐடியா'க்களைத் திணித்து ரசிகர்களைத் திணற வைத்து விட்டார். உதிரி உதிரியாகப் பல கதைகள் — குடுகுடுப்பாண்டியின் மேலங்கிபோல. எந்தப் பிரச்னையிலுமே அழுத்தம் விழவில்லை. எதுவுமே முழுமையாக நிறைவு பெறவில்லை. பிச்சமுத்து (சுதாகர்) அப்பாவிக் கிராமத்தான். அவன் வெகுளித் தனத்தை ஊரார் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். குடும்பநல சேவகியாக வருகிறாள்—சைக்கிள் சிங்காரியாக — ருக்மிணி (சரிதா). படித்தவள். கிராமத்தார் இவளை வெறுக்கிறார்கள். விரட்டப்பார்க்கிறார்கள். ருக்மிணி பிச்சமுத்துவைக் காதலித்துத் தன் கணவனுக்கிக்கொள்ளுகிறாள். இது ஒரு கதை. மயில்வாகனன் (சிலோன் சின்னையா) என்று ஒரு பெரிய தனக்காரர். மணமான இவருக்குக் கிராமத்து டைலரின் காதலியான பஞ்சவர்ணத்திடம் (விஜய லக்ஷ்மி) காதல். தையல்காரரைச்சிறைக்கு அனுப்பி விட்டுப் பஞ்சவர்ணத்தைத் தன் ஆசைநாயகியாக்கிக் கொள்ளுகிறார். அவள், அவர் குடும்பத்தை அலங்கோலப்படுத்துவதாகச் சபதம் செய்கிறாள். கிராமத்தில் அல்லியாக (வில்லியாக) உலாவுகிறாள் — இப்படியொரு கதை.

சீட்டாடி — ஆட வருபவர்களுக்குத் தன் கட்டுக்குலையாத மனைவியைக் காட்டிப் பிழைப்பு நடத்துகிறார் ஒருவர் — இப்படியொரு கதை. எந்தக் கதைக்குமே எந்த விதமான குறிக்கோளுமில்லை. எதைக் கூற முற்படுகிறார் என்பது தெரியவில்லை. கடைசியில் ஒரு கையில் அரிவாளும் மறு கையில் வெட்டுண்ட பஞ்சவர்ணத்தின் தலையுமாக நிற்க வைத்துப் பிச்சமுத்துவை சப்பாணி (16 வயதினிலே) யாக்கப் பார்த்து அதிலும் தோல்வியே கண்டிருக்கிறார்கள். சப்பாணி செய்த கொலைக்கு அழுத்தமான காரணமும், சூழ்நிலையும் — காரெக்டரும் இருந்தன. ஆனால் பிச்சமுத்துவோ —? பாவம் சுதாகர்!

மற்றபடி கிராமத்துக் காட்சிகள் வழக்கப்படி கோவணங்கட்டிய பையன் முதல் வாய்க்கால் குளியல் வரை சம்பிரமமாக வருகின்றன. காதல் காட்சிகள்- கிராமியமாக, சற்று ஒவராகவே தரப்பட்டுள்ளன.

காமிரா கண்ணுக்கு இதமாக இயங்கியுள்ளது. ஆண் குரல் பாட்டையெல்லாம் இளைய ராஜாவே பாடியிருக்கிறார்.

திரைக்கதை, வசனம், டைரக்ஷன் மூன்றையும் செய்துள்ள திரு ஆர். செல்வராஜுக்கு இது முதல் முயற்சியாம். பரவாயில்லை.

பொண்ணு புதுசு — ஊரு பழசு!

—கௌசிகன்

பாசிக்குள் அடங்கிய பசுமைப் புரட்சி!

'ஜனார்த்தனன்'



✕ வாசுதேவ நல்லூரில் நீலப் பச்சைப்பாசியை அறிவிக்கும் விளம்பர போர்டு

விவசாயியின் நெல் சாகுபடிக்குத் தேவையான உரத்தை அவன் வீட்டின் புழக்கடையிலேயே எளிதாகத் தயாரித்துக்கொள்ள விஞ்ஞானம் இன்று துணை செய்கிறது. நெல் விளைச்சல் அமோகமாகப் பெருகுகிறது.

தில்லியில் பூஸா இன்ஸ்டிடியூட் என்று கூறப்படும் இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தில் பணி புரிந்து வரும் தாவர இயல் நிபுணர் டாக்டர் ஜி. எஸ். வேங்கட்ராமன் அவர்கள் இதற்கு வழிகாட்டியுள்ளார்.

குளக்கரையிலும் கிணற்றடியிலும் சளி போன்று மிதந்து அருவருப்பாகத் தோன்றும் பாசி, தாவர இயலில் நீலப் பச்சை பாசி (Blue Green Algae) என்று அழைக்கப் படுகிறது. இதைச் சுருக்கமாக பி. ஜி. ஏ. என்றும் கூறுவர். இந்த நீலப்பச்சைப் பாசியில் Nitrogenase என்ற பெயருள்ள புரதச் சத்து(Enzyme)நிறைந்துள்ளது. இப்புரதச் சத்து காற்றிலிருந்து நைட்ரஜனைப் பிரித்து ஜலவாயுவுடன் (Hydrogen) ஒன்று சேர்த்து பயோலாஜிகல் நைட்ரஜன் உரத்தைத் தயாரித்துச் சேமித்துக் கொண்டு நெல் பயிருக்கு அத்தியாவசியமான தழை உரத்தைத் தந்து உதவுகிறது.

கடந்த பதினைந்து ஆண்டுகளாக 10,000 க்கும் மேற்பட்ட மண் வகைகளை ஆராய்ந்து ஐந்நூறுக்கு மேற்பட்ட பாசி வகைகளை விஞ்ஞான ரீதியில் பிரித்து நெற் பயிரின் விளைச்சலை ஊக்குவிக்கும் ஆறுவகை பாசி ரகங்களைக் கண்டுபிடித்த தாவர இயல் விஞ்ஞானக் குழுவின் தலைவராகப் பணி புரிகிறார் திரு வேங்கடராமன்.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

ஸ்டாம்புகள்; நாணயங்கள் போல் பலர் பல விஷயங்களைச் சேகரிக்கிறார்கள். எனது நண்பர் ஒருவர் பல ஆலயங்களுக்குச் சென்று அங்கு கொடுக்கப் படும் பிரசாதங்களை (விபூதி, குங்குமம்) சிறிய கவரில் போட்டு, இது திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில், இது ஸ்ரீ காமாட்சியம்மன் கோயில் என்று இப்படி.. பல கோயில் பெயர்களை எழுதி வைத்துள்ளார்.

ஏ. என். சுப்பிரமணியன்.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

பாரதத்தின் விவசாயத் துறையில் இன்றைக்கு ஒரு ஹெக்டேருக்கு (சுமார் இரண்டரை ஏக்கர்) 25 முதல் 30 கிலோகிராம் வரை இரசாயன உரம் உபயோகிக்கப் படுகிறது. அவற்றில் 40 முதல் 50 சதவிகிதமே பயிர்களுக்குக் கிடைக்கின்றன. எஞ்சிய உரம் ஆவியாக மாறி விடுகிறது. போதிய அளவு இரசாயன உரங்களை இடுவதற்கு நம் பாரத விவசாயிகள் பலருடைய எளிய பொருளாதார நிலை இடம் கொடுப்பதில்லை. அவர்களுக்கு, டாக்டர் வேங்கடராமன் கண்டு பிடித்துள்ள அதிசய பி. ஜி. ஏ. உரம் வரப்பிரசாதமாக விளங்குகிறது.

பி. ஜி. ஏ. என்ற இந்த நீலப்பச்சைப் பாசி உரத்தைத் தயாரிக்கும் முறை எளிது. வீட்டின் பின்புறம் ஆறடி நீளமும் மூன்றடி அகலமும் நான்கு அங்குல ஆழமும் உள்ள தொட்டிகளில் ஒரு பிளாஸ்டிக் துணியை விரித்து அதன் மீது இரண்டுமுதல் நான்கு அங்குலம் உயரம் வரை மண்ணை நிரப்பி, அதனுடன் சுமார் 200 கிராம் அளவு ஸுபர் ஃபாஸ்பேட்டைக் கலந்து தொட்டியை நீரால் நிரப்பி விட வேண்டும். கதிரவன் ஒளியில் அத்தொட்டிகளில் நீலப்பச்சைப் பாசி தோன்றிச் செழிப்பாக வளர ஆரம்பிக்கும். பதினைந்து நாட்களில் நீர் காய்ந்து ஆவியாக மாறிப் பாசி நிரம்பிய தொட்டி நன்றாக உலர்ந்ததும் செதில்களாக உள்ள பாசி கலந்த மண்ணை எடுத்து நெல் வயலில் தூவி விடவேண்டும். வயலில் பாய்ச்சப் படும் நீருடன் கலந்து நீலப்பச்சைப் பாசி மேலும் செழிப்பாக வளர்ந்து நெல் பயிருக்குத் தேவையான உரத்தைச் சுமார் பத்து ஆண்டுகள் வரை நிரந்தரமாக அளித்து வரும்.

ஒரு சாதாரண விவசாயி, ''வேங்கடராமன் ஃபார்முலா'' என்ற இந்த முறையைக் கையாண்டு ஐந்து ரூபாய் செலவில் மாதம் ஒன்றுக்கு ஒரு ஹெக்டேர் நிலத்துக்குத் தேவையான 10 கிலோகிராம் எடையுள்ள பி. ஜி. ஏ. தழை உரத்தைத் தயாரித்து விட முடியும்.

10 கிலோகிராம் பி. ஜி. ஏ. உரம் 30 கிலோ கிராம் இரசாயன உரத்துக்கு சமமான



⌘ டாக்டர் ஜி. எஸ். வேங்கடராமன்



⌘ நெல் வயலில் மிதக்கும் நீலப் பச்சைப்பாசி

பலனைத்தரும். இதன் காரணமாக, ஏழை விவசாயியின் உரத்திற்கான செலவு நூறு ரூபாயிலிருந்து ஐந்து ரூபாயாகக் குறைகிறது. அது மட்டுமின்றி பி. ஜி. ஏ. உரம் நெல் பயிரைப் பசுமையாக வளரச் செய்து சாகுபடியில் 12 சதவிகிதம் கூடுதலான விளைச்சலுக்கு வகை செய்கிறது.

நீலப்பச்சைப் பாசி உரத்தை நெற் பயிருக்கு உபயோகிப்பதால் இரசாயன நைட்ரஜன் உரத்தை மிச்சப்படுத்திவிட முடியும். இவ்வாறு மிச்சப்படுத்திய உரத்தைப் பருத்தி, வேர்க்கடலை, கரும்பு முதலிய பயிர்களுக்கு அளித்து நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்ப்படுத்த வகை செய்யலாம் என்று கூறுகிறார் டாக்டர் வேங்கடராமன்.

இந்த உரம் மாநில அரசின் விதைப் பண்ணைகளின் வாயிலாகவும் விவசாய டிப்போக்களின் மூலமாகவும் தமிழகத்து விவசாயிகளுக்குக் கிலோ ஒன்றுக்கு மூன்று ரூபாய் விலைக்கு விற்கப்படுகிறது. தவிர விவசாய எக்ஸ்டென்ஷன் அதிகாரிகள் தொட்டிகட்டி நீலப் பச்சைப் பாசியைப் பயிராக்கும் முறையை விவசாயிகளுக்கு விளக்கிக் கூறி உதவுகின்றனர்.

ஐ. நா. உணவு விவசாய நிறுவனம் இந்த உரத்தின் சிறப்பை உணர்ந்து அயல் நாடுகளிலும் பிரபலப்படுத்தி வருகிறது.

இவ்வாறு நெல் சாகுபடியில் ஒரு பசுமைப் புரட்சியை ஏற்படுத்தியுள்ள டாக்டர் வேங்கடராமனுக்கு பம்பாயின் 'வாஸ்விக்' நிறுவனம் பரிசாக 25,000 ரூபாயும் தங்கப் பதக்கம் ஒன்றையும் அளித்துள்ளது.



⌘ தில்லி குளத்தில் நீலப் பச்சைப் பாசி வளரும் தொட்டிகள்

கே-ப பகுதி

"பூண்டி"

எனக்குக் கேள்வி - பதில் பகுதியில் பதில் எழுத வேண்டுமென்று வெகு நாட்களாக ஆசை. ஆனால் நான் என்ன பத்திரிகை ஆசிரியரா, கேள்விகள் என்னை நோக்கி வர? அதனால் நானே கேள்வியும் நானே பதிலும் தயாரித்து கே - ப பகுதி இதுவரை இல்லாத பத்திரிகையான கல்கிக்கு அனுப்பியுள்ளேன். பல பத்திரிகைகளில் கே-ப படித்துப் படித்துப் பல 'பாணி'களின் பாதிப்பும் வந்து விட்டது.

டாக்டர் அமரேசன் — கோவை

இதயம் பேசுகிறது பத்திரிகையைப் பற்றி...?

E. C. G.

திலகவதி — கல்யாணபுரம்

குங்குமம் ஒரு நடுநிலைப் பத்திரிகை என்கிறேன். இல்லை என்கிறாள் என் தோழி. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

பெண்கள் நெற்றியின் நடுவில் குங்குமம் இருப்பதால் நீங்கள் அப்படிக் கூறியிருப்பீர்கள் என நினைக்கிறேன்.

திரைச்செல்வன் — கோடம்பாக்கம்

உங்களைக் கவர்ந்த நடிகை யார்?

என்னைக்கவிழ்த்த நடிகைகள் தான் உண்டு.

கேள்வித்திலகன் — விருப்பட்டியூர்

உங்கள் பத்திரிகையில் கேள்வி-பதில் பகுதி ஏன் இத்தனை நாளாக இல்லை?

பதிலுக்கான கேள்விகள் வராததால்!

கழகமணி — தஞ்சை

தவறு செய்பவர்களைக் கண்டிப்பதா, மன்னிப்பதா?

தண்டித்து மன்னித்து விடலாம்!

துணுக்கேசன் — கதையூர்

சரித்திரக் கதைகள் எழுதுபவர்க்கும் துணுக்குகள் எழுதுபவர்க்கும் என்ன வித்தியாசம்?''

''முன்னவர் மலைமலையாக எழுதுபவர்; பின்னவர் மூலை மூலையாக எழுதுபவர்!

ராட்டையன் — சிலேடைப்புதூர்

''இந்தியாவின் தலைசிறந்த 'ஸ்பின்னர்' யார்?''

''மஹாத்மா காந்தி!''

மங்களம் — திருவையாறு


பாலசந்தர் - பாலமுரளி சர்ச்சையைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

அதுதான் மங்களம் பாடியாயிற்றே!

மதிஒளி — பிரகாசம்

கல்கத்தாவில் 'பவர்-கட்' மிகுமிகுதியப் போனதற்கு என்ன காரணம்?

உஷ்... 'கல்கத்தா' என்றாலே எரியும் விளக்குகளும் அணைந்து விடும் ஜாக்கிரதை!



அவ்வையாரும் திருமாலும் பெரியாரும்

சுட்டிகையான சிறுவர்களைப் பற்றிப் பேசும் போது ஒரு நண்பர் இந்த உண்மை நிகழ்ச்சியைக் கூறினார்:

அவர்கள் ஊர்ப் பள்ளியின் தமிழாசிரியர் நாத்திகராம். எனவே 'ஆத்திச் சூடி' பாடம் எடுக்கும்போது, 'திருமாலுக்கு அடிமை செய்', 'தீவினை அகற்று' என்று அடுத்தடுத்து வரும் இரு வாசகங்களையும் சேர்த்து, ''திருமாலுக்கு அடிமை செய்வது எனப்படுகின்ற தீவினையை அகற்ற வேண்டும்'' என்று பொருள் கூறினாராம். பிற்பாடு இதிலேயே 'பெரியாரைத் துணைக்கொள்' என்றும் 'பேதைமை அகற்று' என்றும் இரண்டு வாசகங்கள் அடுத்தடுத்து வந்தன. உடனே ஒரு சுட்டிப்பயல் எழுந்தானாம். ''ஸார், ஈ. வே. ரா. பெரியாரைத் துணை கொள்வது என்ற பேதைமையை அகற்ற வேண்டும் என்றும் அவ்வையார் சொல்கிறார், பார்த்தீர்களா?'' என்றானாம்.

''தமிழ்நிதி''

Printed by V. Murali and published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Guindy, Madras-600032. Editor: K. Rajendran

கனவு நினைவாகிறது

கண் நிறைந்த கணவனை
அடைய வேண்டும், அவர்தம்
கண்ணிற்கு விருந்தாக

சாரதா'ஸின் பட்டுப்
புடவையில் தன் அழகு
மிளிர வேண்டும் என
எண்ணும் கன்னியரின்
கனவை நினைவாக்குகிறது
சாரதா'ஸ்.
அழகு மிக்க சாரதாஸின்
திருமண பட்டுப் புடவைகள்
மங்களகரமானவை.



சாரதா'ஸ்

(முகூர்த்தப் பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)

தன் பில்டிங்
மவுண்ட் ரோடு
சென்னை-600 002
போன் : 87177

N.S.B. ரோடு
திருச்சி-620 002
போன் : 27077

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேசியக் காசு

